KALKI
2.4.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



நர்த்தகி நடராஜ் : "திருநங்கை என்று அன்பு காட்டுங்கள்!"

+16
இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்

பாரத விலாஸ் விடுதியே வீடு!
ஹேப்பி ஹாஸ்டல் லைஃப்

சிவாஜி... ரஜினி படமா? என் படமா?



- ஷங்கர் பேட்டி


கல்கி
+16
குடும்பத்துடன் படிக்க...
29.04.07 இதழ்...
கல்கி
அழகு...
ஆரோக்கியம்...
டீம்!
எல்லாம் உண்டு
இயற்கை வழியில்!
இணைந்து வழங்கு வோர்
Team
EUBIO CARE
FOR WELLNESS
TEAM EUBIO CARE
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)
Dr. Rao's

வட்டமேஜை

✉ ஐம்பது வருடங்கள் கழித்து பயம் அகன்று செயலால் காட்டுவதாய் முடிந்துள்ள ஆர். சூடாமணியின் சிறப்புச் சிறு கதை 'பதில் சொல் பவானி' பெண்ணின் பொறுமையைக் காட்டுகிறது.

பொள்ளாச்சி, ரமாதேவி

✉ 'தி.மு.க. பனங்காட்டு நரி' என்பதற்கு தராசின் 'அஞ்சி விட்டதே' என்பது சரியான நெத்தியடி!

சிதம்பரம், இரெ.ராமமூர்த்தி

✉ குறட்டையின் கொடுரத்தை 'லேசர்' சிகிச்சை மூலம் ஒரே நாளில் குணமாக்கலாம் என்று விளக்கிய டாக்டர் ஹரிணி அவர்களுக்கு நன்றி.

என்னூர், தர்மன் பெரியசாமி

✉ இன்றைய மாணவர்கள் மனமுதிர்ச்சியின்றி பயணிக்கிறார்கள் என்பதை இயல்பாகக் கூறிய 'இந்தக் காலத்துப் பசங்க' சிறுகதையின் முடிவு அதிர்ச்சியை அளித்தது!

போடிநாயக்கனூர், எஸ்.எம். பாலசுப்ரமணியன்

✉ தங்க அரிசியைத் தின்ன முடியுமா? தலையங்கத்தில் சமூகத்திலும், கல்வியிலும் பின் தங்கியுள்ள மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மற்றும் கவனம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து வரவேற்கத்தக்கது.

மணியக்காரன்பாளையம், ஏ.ஜி.கல்யாணசுந்தரம்

✉ மிக நாகரிகமாய் இந்திய வீரர்களை மண் குதிரைகள் என்று கூறியது பாராட்டுக்குரியது.

பாளையங்கோட்டை, பி. சிவா



✉ 'இறைவனுக்கு நிறம் உண்டா?' படித்தேன்; பரவசமுற்றேன். வேதாவின் ஓவியம் வெகு அழகு.

சென்னை, கிருஷ்ணமூர்த்தி

✉ டீத் தூளில் மரத்தூள், துவரம் பருப்பில் கேசரி பருப்பு போன்ற பல விஷயங்களை நுகர்வோர் விழிப்புணர்வு இணைப்பு உணர்த்தியது.

திருச்சி, அனீஸ்

✉ கல்கி (1.4.2007) இதழில் சின்னம்மை அபாயம் பற்றி வந்துள்ள மருத்துவக் கட்டுரை முழுமையும் பெரியம்மை (small pox) பற்றிய சரியான தகவல்கள். ஆனால், சின்னம்மை (chicken pox) நோய்க்குச் சற்றும் பொருத்தம் இல்லாத கட்டுரை! பெரியம்மை உலகத்தில் எங்குமே கிடையாது - அந்த வைரஸ்

பரிசோதனைக் கூடங்களில் பாதுகாக்கப்பட்டு வருகிறது! சின்னம்மை மிகவும் பரவலான தொற்றுநோய் - உலகம் முழுவதும் இருக்கிறது. ஆனால், இந்தியா போன்ற உஷ்ணமான நாடுகளில் அதிக தாக்கம் கொடுக்கும். அது வராமல் இருக்கத் தடுப்பு ஊசி ஒரு வயதிலும் மீண்டும் பத்து வருடங்கள் கழித்தும் போட வேண்டும். இந்த நோய்க் கிருமி (Varicella virus) Acyclovir என்ற மருந்துக்குக் கட்டுப்படும் சமர்த்தான வைரஸ். மிகவும் நம்பகத்தன்மை உடைய உங்கள் பத்திரிகையில் இதுபோன்ற பெரிய தவறுகள் - அதுவும் பயமுறுத்தும் தலைப்புடன் கூடிய மருத்துவக் கட்டுரைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

சென்னை, **டாக்டர் ஆர்.ஸ்ரீதர்**

அதிர்ச்சியளித்த முடிவு!

✉ **கல்கி 25.3.2007 இதழில் 'ஜனங்களின் சாமி' தொடரில் கால்நடைகளின் காவலர் என்ற புகழுக்குரிய கோனார்களை 'அடைக்கலம் கொடுத்த ஆடுகளைத் திருடியவர்' என்று கழனியூரன் பட்டம் சூட்டியுள்ளார். இது யாதவ குலத்தையே அவமதிப்பதாகும்.**

முன்னிக்குளம், **எல்.சிவராமகிருஷ்ணன்**

ஜனங்களின் சாமி தொடர் நாட்டுப்புறவியலில் நடந்த உண்மைச் சம்பவங்களையும் சிறு தெய்வங்களின் வரலாற்றையும் சொல்லவே எழுதப்படுகிறது. இதில் எந்தச் சாதியினரையும் உயர்த்தியோ, தாழ்த்தியோ சொல்வது நோக்கமல்ல. இருந்தபோதிலும் குறிப்பிட்ட சாதிப் பெயரைச் சொன்னது அவர்களின் மனத்தைப் புண்படுத்தியிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்.

- கழனியூரன்.

கழனியூரன் எழுதிய 'மாடத்தி அம்மாளின் சாபம்' என்கிற கிராமியக் கதை எவ்வித உள்நோக்கமும் இன்றித்தான் வெளியிடப்பட்டது.

- ஆசிரியர்

கல்கி

பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பாரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 **யு.எஸ். டாலர்**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

நர்த்தகி நடராஜ்:

“திருநங்கை என்று அன்பு



“பெண்ணாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கமே திருநங்கைகளின் அடிமனத்தில் அவஸ்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.”

“அரசு ஆணையினால் அன்பை வரவழைக்க முடியுமா...?”

திருநங்கை நர்த்தகி நடராஜ் கவலை தோய்ந்த முகத்துடன் சிந்தனை வயப்படுகிறார். அவரது அழகிய நீண்ட கண்களில் சோகத்தின் ஆழம்.

தேசிய விருது பெற்ற நாட்டியமணி நர்த்தகி நடராஜ். ஸ்படிக சுத்தமான தஞ்சாவூர் நாட்டிய பாணியைப் பின்பற்றுபவர். நாட்டிய மேடையில் அவர் வெளிப்படுத்தும் விதவிதமான ரஸங்களுள் சோக ரஸமும் இடம்பெற, நாம் கண்டு உருகிக் கரைந்ததுண்டு. ஆனால், இப்போது அவர் கண்களில் தெரியும் சோகத்தின் ஆழம் நம்மைப் பொறிகலங்கச் செய்கிறது! அவ்வளவு உணர்ச்சிக்கிடையேயும் நர்த்தகியின் குரல் உறுதியாகவே ஒலிக்கிறது.

“ஏகம் சொற்களாலும் ஏளன அழைப்புகளாலும் எங்களை அடையாளப்படுத்திய சமூகம் இன்றைக்கு ‘அரவாணி’ என்று மூன்றாம் பால் பெயரிட்டுக் குறிப்பிட ஆரம்பித்திருப்பதே முன்னேற்றம்தான்...” என்கிறார்.

தமிழக அரசின்

காட்டுங்கள்!"

சமீபத்திய ஜி.ஓ. அரவாணிகளின் உரிமைகளை அங்கீகரிக்கவும் வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு வழங்கவும், மருத்துவமனைகளில் அவர்கள் பால்மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள உதவும் வகையிலும் விதிகள் பிறப்பித்துள்ளது. "இவ்வரசாணை இன்னும் அமலுக்கு வந்ததாகத் தெரியவில்லை" என்கிறார் நர்த்தகி.

அரவாணி என்ற சொல்லுக்கு மாற்றாக 'திருநங்கை' என்ற அழகுமிகு சொல்லைப் பயன்படுத்தும்படி கேட்கிறார் நர்த்தகி.

"அரசாணையை நான் வரவேற்கிறேன். ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் பிறந்திருப்பதே பெரிது. ஆனால், திருநங்கைகளின் செயல்திறன் அறிந்து அதற்கேற்ப திட்டங்களை உருவாக்கினால் பரவாயில்லை. கடும் உழைப்பு என்பது இயலாத ஒன்று. அழகுணர்ச்சிக்கும் கலையுணர்வுக்கும் வெளிப்பாடு தரும் பணிகளைத் திருத்தமாகச் செய்ய முடியும். பியூட்டீஷியன், வீட்டு உள் அலங்காரப் பணி, மலர் அலங்காரம் இவையெல்லாம் இயல்பாகவே கைவரும். உங்கள் தோற்றத்துக்குப் பொருந்தாத வகையில் நீங்கள் அழகு செய்து கொண்டீர்களென்றால் ஒரு திருநங்கையால் சகிக்கவே முடியாது. 'என்ன இது? இப்படியா எண்ணெய் சட்டிய தலையில் கவுத்தா மாதிரி ஜடை பின்னிக்கிறது? அழகா, தளர பின்னினால் எத்தனை மென்மையா இருக்கும்?' என்று கேட்பார். பூ கட்டுவது, விதவிதமாகத் தொடுத்து அலங்காரம் செய்வது இதெல்லாம் ரொம்ப நேர்த்தியாக இருக்கும். இயல்பாகவே இந்தத் திறனெல்லாம் அமைந்திருக்கும். அதற்கேற்றாற் மாதிரி வேலைகள் தந்தால் பரவாயில்லை.." என்கிறார்.

நர்த்தகியின் இல்லமே இந்த உண்மைக்கு சாட்சி சொல்கிறது. சென்னை நகரின் பரபரப்பு நிறைந்த பகுதிதான் என்றபோதிலும் உள்ளடங்கி அமைதியான சூழலில் இருக்கிறது இவர் வசிக்கும் ஃபிளாட். ஆடம்பரம் எதுவுமின்றி தூய்மையாக இருக்கிறது. "இவள் சக்தி; என் காரியம் அனைத்திலும் கைகொடுப்பவள். எனக்கு சக்தியாக இருப்பவள்" என்று தோழியை அறிமுகம் செய்து வைக்கிறார் நர்த்தகி. குழந்தைச் சிரிப்புடன் பூஜை அறையை நமக்குக் காட்டுகிறார் சக்தி.

பித்தளை சாமான்கள் பொன்போல் துலக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. விளக்குக்கு மஞ்சள் குங்குமம் இட்டிருக்கும் விதத்திலேயே கலைத்திறன் மிளிர்கிறது · ஆராதனைக்குரியது தெய்வம் மட்டும் அல்ல.. அழகுணர்ச்சியும்கூட என்பதுபோல. பல்வேறு சுவாமி படங்களுக்கிடையே அரிவாளும் சதங்கையும் இருக்கின்றன. "கருப்பண்ணசாமி எங்கள் குலதெய்வம்" என்று அரிவாளுக்கு விளக்கம் தரும் சக்தி, மையத்தில் உள்ள ஒரு படத்தைச்



சுட்டிக்காட்டிக் கேட்கிறார்: "இது என்ன சாமி தெரிகிறதா?"

சேவல் மீது ஆரோகணித்துச் சிரிக்கும் அபூர்வ தேவி!

"புருஷத் தன்மையை அடக்கி அதன் மீது வெற்றிகரமாக அமர்ந்திருக்கும் ஸ்த்ரீ தன்மையின் அடையாளமான எங்கள் தெய்வம். எல்லாத் திருநங்கைகளும் இவளைத்தான் விசேஷமாக வழிபடுவார்கள்..." என்று விளக்குகிறார், நாம் பதில் தெரியாமல் நிற்பதைப் பார்த்துவிட்டு.

"பெண்ணாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கமே திருநங்கைகளின் அடிமனத்தில் அவஸ்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். இது புரியாமல் சமூகம் அவர்களை ஏளனப்படுத்துவது தாங்க முடியாத ரணத்தை ஏற்படுத்தும். எங்களுக்குள் அதிகபட்சமாக ஒருத்தரையொருத்தர் காயப்படுத்திக்கொள்ள நாங்கள் பயன்படுத்தக்கூடிய கடுசொல் 'போடா!' என்கிற

ஒற்றை வார்த்தைதான்..." நர்த்தகி தொடர்கிறார்.

"வெளிப்புறத்தில் முரட்டுத்தனமாக, நெருங்க முடியாத குரூரம் படைத்தவர்களாகத் தெரிவதெல்லாம் தற்காப்பு வேண்டிதான். காது கொடுத்துக் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகளைப் பேசி 'தாட் பூட்' என்று நடந்துகொண்டால் யாரும் நெருங்கவே அச்சப்படுவார்கள் அல்லவா! ஆனால், இந்தப் போர்வைக்குள் பெண்ணினும் மிகுதியான பெண்மையும் மென்மையும் கனிந்து கிடப்பது இந்த உலகத்துக்குப் புரியவே புரியாது. இல்லாவிட்டால் இன்னும் திருநங்கைகளைக் கேலிப் பொருளாக்கித் திரைப்படங்களிலும் டி.வி. சீரியல்களிலும் நகைச்சுவைக் (?) காட்சி படைப்பார்களா?"

- கேட்கிற நர்த்தகியின் குரலில் கோபத்தைக் காட்டிலும் வருத்தமே அதிகமாக இருக்கிறது.



சமுதாயத்தின் சிந்தனைப் போக்கு மாறாத வரையில் அரசாணைகளால் பெரிய உதவி இருக்காது.

சமுதாயம் அரவாணிகளைப் பற்றிச் சிந்தித்து, புரிந்துகொண்டு, அவர்களை ஏற்கப் பக்குவப்படாத நிலையில், அரசாணை மூலம் அவர்களை பொது நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்துவது விபரீதமாகாதா? ஒற்றைத் திருநங்கை, ஆண் ஆதிக்க அலுவலகத்தில் அங்கீகாரம் இன்றித் தவிப்பதும் குத்தல் - கேலிக்கு ஆளாவதும் நன்மை செய்வதைக் காட்டிலும் தீமையையல்லவா விளைவிக்கும்?

நாம் கேட்பதை ஆமோதித்துப் பேசுகிறார் நர்த்தகி. "நீங்கள் சொல்வது சரிதான். சமுதாயத்தின் சிந்தனைப் போக்கு மாறாத வரையில் அரசாணைகளால் பெரிய உதவி இருக்காது. ஆனால், இப்படி ஓர் ஆணை பிறப்பித்திருப்பதால்தானே இந்தச் சிந்தனையாவது எழுந்திருக்கிறது. இல்லாவிட்டால் எங்களைப் பற்றிச் சமூகம் சீரியஸாக எங்கே சிந்திக்கப் போகிறது...?"

அதுவும் உண்மைதானே என்கிற சிந்தனையில் ஆழும் நம்மை, அடுத்த வாக்கியத்தால் அதிர வைக்கிறார் நர்த்தகி:

"இது மாதிரி எங்களைப் பற்றி மீடியாவும் என்.ஜி.ஓ.க்களும் அரசும் கவலைப்படுவதுகூட கடந்த சில ஆண்டுகளாகத்தானே...! அதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்..?"

இக்கேள்விக்கு விடை எய்ட்ஸ் பயங்கரம் என்பது நமக்கு உறைக்க, சம்மட்டியால் அடிப்பதுபோல் வருகிறது அடுத்த வாக்கியம் :

" எய்ட்ஸ் அச்சுறுத்தல் மட்டும் இல்லையென்றால் இந்தக் கவனமும் எங்களுக்குக் கிடைத்திருக்காது. கௌரவமாக எங்களை அங்கீகரிக்க வேண்டும் என்கிற எண்ணமே யாருக்கும் தோன்றியிருக்காது!"

(நர்த்தகியின் வேதனைமிகுந்த குமுறல்கள்... அடுத்த வாரமும்...)

சந்திப்பு : **சீதா ரவி,**
சுகந்தி ஜி. பாரதி
அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

தி.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தென் சென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான வி.பி.கலைராஜன் மற்றும் மூன்று பேர் இந்த சட்டசபைக் கூட்டத் தொடர் முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில் நாம் கலைராஜனைச் சந்தித்தோம். 'சகோதரர் திருமணத்தில் பிஸியாக இருக்கிறேன்' என்று நழுவப் பார்த்தவர், கடைசியில் பேசியே விட்டார்.

நாடகமாடுகிறாரா



சட்டசபையில் என்னதான் நடந்தது?

"பிற்பட்டோர் துறைக்கான மான்யக் கோரிக்கையை சபையில் வாசித்துக் கொண்டிருந்தார் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். அப்போது எங்கள் உறுப்பினர் ஒருவர் 'பிற்பட்டோருக்கு அதிகம் செய்தவர் புரட்சித்தலைவிதான்' என்றார். உடனே அமைச்சர் எம்.ஆர்.கே. 1969-ல் இந்தத் துறையை உருவாக்கியதே டாக்டர் கலைஞர் தான் என்றும், அப்போது எங்கிருந் தார்கள் உங்கள் அம்மா? என்றும் கேட்டார். இதைத் தொடர்ந்துதான் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டன. அப்போது அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் 'எம்.ஜி.ஆர். தி.மு.க.வுக்குத் துரோகம் செய்துவிட்டுப் போனவர்' என்று சொன்னதும் நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். அமைச்சர் நேரு எங்களையும், எங்கள் தலைவியையும் சபை மரபுக்கு மாறாக விமர்சனம் செய்தார். அதை எதிர்த்த எங்களை, கூட்டத்தொடர் முழுவதும் நீக்கிவிட்

கலைராஜன்?

டார்கள்."

நீங்கள் செருப்பைத் தூக்கிக்கொண்டு முன்வரிசைக்கு வந்தது ஏன்?

"அமைச்சர் நேரு பேசியதும், நான் அவசரமாக முன்வரிசைக் குச் சென்றபோது, என் ஒரு கால் செருப்பு கழன்றுவிட்டது. அதைச்

சரியாக மாட்டுவதற்காகத்தான் குனிந்து எடுத்தேனே தவிர, யாரையும் அடிப்பதற்காக அல்ல. ஆனால், அன்று தி.மு.க. தரப்பிலிருந்து எங்களை வாய்க்கு வந்தபடி பேசினார்கள். சபை நடவடிக்கைகள் முழுவதும் படமாக எடுக்கப்படுகின்றன. நடுநிலையானவர்களுக்கு அதைப் போட்டுக் காட்ட தி.மு.க. தயாரா? அமைதிப்படுத்திய பா.ம.க. எம்.எல்.ஏ. வேல்முருகன் மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களுக்கும் உண்மை தெரியும்."

அம்மாவிடம் உங்களுக்கு இருக்கும் கெட்ட பெயரைத் துடைத்துக் கொள்ளத்தான் சட்டசபையில் நாடகமாடுகிறீர்கள் என்று உங்கள் கட்சியில் சொல்கிறார்களே?

"இதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது. தலைவரையும் அம்மாவையும் பழித்துப் பேசும்போது ரோஷமுள்ள எந்தவொரு தொண்டனும் கொதித்து எழுவான்."

சீனியர்களான ஓ.பன்னீர் செல்வம், செங்கோட்டையன் இருக்க, நீங்கள் முந்தியது ஏன்?

"அவர்களெல்லாம் சபாநாயகரைச் சுற்றி நின்று நியாயம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால்தான் நான் தி.மு.க. அமைச்சர்களின் ஏச்சுக்களுக்குப் பதில் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது."

மறுநாள் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து உங்கள் கட்சியினர் சபையில் பிரச்னை எழுப்பாததற்குக் காரணம் நீங்கள் நடந்த முறை சரியில்லை என்பதால்தானே...?

"திண்டிவனத்தில் வெடிவிபத்து வந்துவிட்டதே! இந்தச் சம்பவம் சட்டசபையில் பிரதானமாகப் பேசப்பட்டதால், எங்கள் விவகாரம் சற்று ஓரங்கட்டப்பட்டிருக்கிறது."

சட்டசபையில் இப்படி நடந்து கொண்டதற்காக உங்களை ஜெயலலிதா கண்டித்தாராமே!

"இது வதந்தி. சபையில் தி.மு.க.வினர் என்னதான் தூண்டிவிடும்படி பேசினாலும், பொறுமை காக்கும்படிதான் அம்மா சொல்லியிருக்கிறார். நான் எந்தத் தவறும் செய்யாததால் அம்மா கண்டிக்க வேண்டிய அவசியமே இல்லையே!"

சட்டசபைச் சம்பவத்தின் தொடர்ச்சியாக ஊரில் உங்கள் வீடு சூறையாடப்பட்டதுகூட, அரசியல் ரீதியாக உங்களை உயர்த்திக்கொள்ள நீங்கள் செய்த ஏற்பாடுதான் என்றும் ஒரு பேச்சு இருக்கிறதே...

"இது பொய். அந்தச் சம்பவத்தில் என் அப்பா தாக்கப்பட்டிருக்கிறார்.



அம்மாவைப் பழித்துப் பேசும் போது எந்த ஒரு தொண்டனும் கொதித்து எழுவான்!

நிறைமாத கர்ப்பமாக இருக்கும் பசுமாட்டின் வாலை வெட்டியிருக்கிறார்கள். என்னதான் அரசியலில் ஏற்றத்தைக் கொடுப்பதாக இருந்தாலும், இது போன்ற ஈனத்தனமான செயல்களில் ஒருவன் ஈடுபடுவானா? நள்ளிரவில் சம்பவம் நடந்திருக்கிறது. எங்கள் கட்சிக்காரர்களுக்கே காலை ஒன்பது மணிக்குத்தான் விஷயம் தெரியும். ஆனால் தி.மு.க. மத்திய அமைச்சரும், மாநில அமைச்சரும், காலை ஏழு மணிக்கே ஒரத்தநாட்டில் வந்திருந்தார்களே, அது ஏன்?"

- ப்ரியன்

படம் : ராஜன்


● இறந்த பிறகு எரிக்கணுமா, புதைக் கணுமா?

- வி.சந்திரசேகர், புழுதிவாக்கம்

புதைத்துவிடுவது பெட்டர். வள்ளு வரே அடிச்சுச் சொல்லியிருக்கிறார், 'அடக்கம் அமரருள் உய்க்கும்'னு. எரிச்சா எங்கு உய்க்குமோ... எதுக்கு ரிஸ்க்கு?



கிரேஸியைக் கேளுங்கள்



● அண்ணே... Fast Food சாப்பிட்டு வவுத்துப் போக்கா ஆயிடுச்சு... ஏன்?

- ஜி.நிர்மலா, பழனி

தங்கச்சி, நீ சாப்பிட்டது Past Food-னு நினைக்கிறேன். பழையன கழிதல் கேள்விப் பட்டதில்லையா நீ!

● நீங்கள் ரசித்த டயலாக்?


-வே.அருணாசலம், வால்பாறை

அந்திமக் காலத்தில் ரமண மகரிஷியைக் காணச் சென்ற அன்பர் ஒருவர், கரிசனமாக 'பகவான், உடம்பு எப்படி இருக்கு?' என்று கேட்க, 'நாலு பேர் சுமக்கப்போறதை நான் ஒருத்தன் சுமந்திண்டிருக் கேன்' என்றார் யதார்த்தமாக.

● கிரேஸி, உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே, தசாவ தாரம் எப்பொழுது முடியும்?

- கோடம்பாக்கத்தான், கோவை

கல்கி அவதாரம் எடுத்த வுடன்!



படம் : பொள்ளாச்சி சுந்தரம்

கடவுள் ஆண்பாலா... பெண்பாலா...?



● *பெண்...?*

- சுமதி பாஸ்கரன், திருச்சி

எங்கே வர்றீங்கன்னு புரியுது. பெண் ஆணுக்குத் தாழ்ந்தவளும் அல்ல... உயர்ந்தவளும் அல்ல.... சமமானவளும் அல்ல. பெண் வேறானவள். ஆணின் வளர்ச்சிக்கு வேரானவள்.

● *செல்ஃபோன் தொல்லையா?*

- 'செல்'மணி, சென்னை - 83

இறந்தவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவருடைய செல் அடித்தது. துக்கத்தில் இருந்த உறவுக்காரர் ஃபோனை எடுக்க, எதிர்த்தரப்பில் 'அண்ணாச்சி இருக்காரா?' என்று கேட்க, இவர் வேதனையுடன் 'இல்லை, போயிட்டார்.' எனச் சொல்ல, 'எங்கே போயிருக்கார்?' என்று அவர் திருப்பிக் கேட்க, இவர் 'தெரியலையே' என்று அழுதபடி சொல்ல, அந்த ட்யூப் லைட் ஆசாமி விடாமல் தொடர்ந்து, 'அவருக்கு நேத்து மிஸ்டு கால் விட்டேனே...' என்று கழுத்தறுக்க, இவர் கடுப்பாகி, 'யோவ் ஆளே மிஸ்டுயா' என்று அலற, அவர் அதையும் புரிந்துகொள்ளாமல், 'சரி, நான் மெசேஜ் வேணா அனுப்பட்டுமா?' என்று கேட்க, இவர் கொந்தளித்து 'முடிஞ்சா ஹிந்துல ஆபிச்சுவரியில மெஸேஜ் கொடுடா' என்று ஃபோனை கட் பண்ண... இந்தக் கூத்தைப் பார்த்து, இறந்தவரே இலேசாகச் சிரித்ததாக எனக்கு ஞாபகம்...

● ***அதென்ன ஆப்பிள் மட்டும் அவ்வளவு ஒஸ்தி?***

- எம்.ஆர்.கதிரேசன், கமுதி

ஆதாம் ஏவாளின் 'புலன் ஈர்ப்புக்கும்' நியூட்டனின் 'புவி ஈர்ப்புக்கும்' ஆதாரமே ஆப்பிள்தானே சாமி!

● *கலைஞரிடம் பாராட்டு வாங்கிய துண்டா?*

- மு.ப.இளங்கோவன், சிதம்பரம்

வாங்கும் அந்த நாளில்தான் நான் கலைஞன்!

● *எது இளமை?*

- எஸ்.இளவரசன், சென்னை - 78

முதுமையை விரும்பி ஏற்ற அவ்வை, இளைஞர்களுக்காகப் பாடினார் ஆத்திச்சூடி. கொன்றைவேந்தன். இதுதான் இளமை மற்றதெல்லாம் 'யயாதி சின்ட்ரோம்.'

● *கடவுள்... ஆண்பால், பெண்பால், எது சரி?*

- கமலக்கண்ணன், கிழக்குத் தாம்பரம்

இரண்டுக்கும் அப்பால்...! ●

நாற்பதை நெருங்கியாச்சா...?

''நாற்பது வயதை நீங்கள் நெருங்குகின்றீர்களா? எனில், கண் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இல்லையெனில் வரிசையாகக் காத்துக் கொண்டிருக்கும் கண் நோய்கள் உங்களைக் கொத்திக்கொண்டு போகும் அபாயம் உண்டு'' என்கிறார் டாக்டர் அருள்மொழிவர்மன். சென்னை, அண்ணாநகர் உமா கண் மருத்துவ மனையின் தலைவரும், கண் மருத்துவ நிபுணருமான இவர், நாற்பது வயதை நெருங்கும்போது உண்டாகக்கூடிய கண் பிரச்னைகளையும், அவற்றுக்கான தீர்வையும் நம்மிடம் விவரித்தார்...



* டாக்டர் அருள்மொழிவர்மன்



''குறிப்பிட்ட வயதுக்கு மேல் இப்போது பலருக்கும் கண் பார்வைக் கோளாறுகள் வர ஆரம்பித்து விடுகின்றன. குறிப்பாக, கிட்டப் பார்வை மற்றும் தூரப் பார்வை பிரச்னை பரவலாகக் காணப்படுகிறது. கிட்டப் பார்வையில் நாம் பார்க்கும் பொருளின் பிம்பம், விழித்திரைக்கு முன்பாகவே விழுந்து விடுகிறது. இதனால் தூரத்தில் உள்ள காட்சி தெளிவாகத் தெரியாது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய, கண்களைப் பரிசோதித்து கண்ணாடி அணியலாம். இதேபோல்தான் தூரப் பார்வையும். இக்கோளாறில் பார்க்கும் பொருட்களின் பிம்பம் விழித்திரையின் மேல் பதியாமல், விழித்திரைக்குப் பின்னால் பதிகிறது. இதனால் அருகில் உள்ள காட்சி தெளிவாகத் தெரியாது. இப்பிரச்னைக்கும் மருத்துவரிடம் கண்களைப் பரிசோதித்து, கண்ணாடி அணிந்து நிவாரணம் பெறலாம். இப்போது காண்டாக்ட் லென்ஸுகளும் வந்துவிட்டன. மிகச் சிறந்த, நவீன லேசர் ஆபரேஷன் மூலம் கிட்ட மற்றும் தூரப்

பார்வைக் குறையை அடியோடு விரட்டலாம்.

நாற்பதை நெருங்க நெருங்க, டயாபடீஸ் பிரச்னை பலருக்குத் தலை தூக்கலாம் என்பதால் 'டயாபடீக் ரெடினோபதி' என்னும் கண் நோய் வர சாத்தியக்கூறு அதிகமிருக்கிறது. நீரிழிவு நோய் சிறுநீரகம், இதயம், நரம்புகள், கால்களைப் பாதிப்பது போல விழித்திரையைப் பாதிக்கும்போது ஏற்படுவதுதான் இந்த டயாபடீக் ரெடினோபதி. இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், விழித்திரையில் உள்ள ரத்தக் குழாய்கள் வலுவிழந்து பலவீனப்பட்டுப் போகும். அந்நேரத்தில் விழித்திரையில் நீர்... ஏன், ரத்தம்கூடக் கசியலாம். இக்கசிவு விழித்திரையின் முக்கிய பாகமான

குறைய ஆரம்பித்து விடும். இப்பிரச்னைக்கு தினமும் மூன்று வேளை 'ஐ ட்ராப்ஸ்' போட வேண்டும். ஆனால் ட்ராப்ஸை மறந்து விட்டாலோ, விட்டு விட்டாலோ மீண்டும் வந்து விடும். இப்போது SLT (Selective Lazer Trabeculoplasty) என்னும் நவீன சிகிச்சை மூலம் இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.

பொதுவாகவே கண்களைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியம். கண்ணுக்கு உபயோக



காத்திருக்கும் கண் நோய்கள்!

உஷார் ரிப்போர்ட்

'மாகுலா'வைப் பாதித்து பார்வைத் திறன் குறைய வாய்ப்புண்டு. எனவே நீரிழிவு நோயுள்ளவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கட்டாயம் கண் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

கிட்டப் பார்வை, தூரப் பார்வை மாதிரியான குறைபாடுதான் வெள்ளெழுத்து. நாம் ஒரு பொருளைப் பார்த்துவிட்டு உடனே அருகிலுள்ள பொருளைப் பார்க்க முடிவதற்குக் காரணம், நம் கண்ணுக்குள் இருக்கும் லென்ஸ். வயதாவதால் இந்த லென்ஸ் கடினமாகி, அதன் எலாஸ்டிக் குறைந்து இந்த வேலையைச் செய்ய முடியாமல் போக, வெள்ளெழுத்துப் பிரச்னை ஏற்படுகிறது. இதற்கும் கண்ணாடிதான் தீர்வு.

அடுத்து 'க்ளுக்கோமா' எனப்படும் கண் அழுத்த நோய். கண்ணிலுள்ள ஆப்டிக் நரம்பு பாதிக்கப்படுவதால் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை

மாக இருக்கும் 'வைட்டமின் ஏ' நிறைந்த உணவை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனோதானோவென்று நமது இஷ்டத்துக்குக் கண்ணாடி அணியக் கூடாது. மருத்துவரை ஆலோசிக்காமல் சின்ன ட்ராப்ஸைக்கூட கண்ணுக்கருகில் கொண்டு செல்லக்கூடாது. கண்ணாடி அணிபவர்கள் வருடத்துக்கு ஒரு முறை பவரை சோதித்துக்கொள்வது நல்லது. ஒருசில கண் பிரச்னைகளுக்குக் காரணமாக அமையும் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்றவை நம்மை அண்டாமல் உடலையும் மனத்தையும் நன்றாக நிர்வகிக்க வேண்டும். தவறி அண்டிவிட்டாலும் கூடுதல் கவனத்தோடு செயல்பட்டு, அந்நோய்கள் கண்களைத் தாக்காதவாறு முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்வது நல்லது" என்கிறார் டாக்டர் அருள்மொழிவர்மன்.

– வினோ

படம்: பொள்ளாச்சி சுந்தரம்



மக்கள் பிரதிநிதிகளின் சர்வாதிகாரம்!

இதைவிடக் கேவலமாகச் சிந்திக்க முடியாது என்கிற அளவுக்கு முஸ்லிம் சமூகத்தினரை இழிவுபடுத்தும் ஒரு கற்பனை திரைப் படைப்பை உருவாக்கி, அதை வி.சி.டி.களாகப் பிரதியெடுத்து விநியோகித்துள்ளது பா.ஜ.க.. உ.பி. தேர்தல் பிரசாரத்தின் ஓர் அங்கமாக அதைப் பயன்படுத்த முற்பட்டதாக அக் கட்சியின் பேரில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.


நடந்த தவறை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, அதன் தலைவர்கள், கட்சிக்கும் அந்த வி.சி.டி.க்கும் சம்பந்தமில்லை என்று முதலில் மறுத்திருக்கிறார்கள். முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கும் இந்த முயற்சி, வி.சி.டி.யைத் தயாரித்தளித்த நிறுவனத்தினரால் வெளிச்சமாக்கப்பட்டுவிட, பா.ஜ.க.வின் அங்கீகாரத்தை ரத்து செய்ய முற்பட்டிருக்கிறது தேர்தல் கமிஷன். ஆனால், குற்றச்சாட்டுகளை மறுத்த தோடல்லாமல், தேர்தல் கமிஷனின் அதிகாரத்தையே கேள்விக்குட்படுத்துகிறது பா.ஜ.க. தலைமை! ஒரு கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய தேர்தல் கமிஷனுக்கு அதிகாரமே கிடையாது என்று வாதிடுகிறது.


இவ்வளவு பட்டவர்த்தனமாக, தேர்தல் நன்னடத்தை விதிகளை மட்டுமின்றி, சட்டத்தையும் அடிப்படை மனிதப் பண்புகளையும்கூட ஒரு தேசியக் கட்சி மீற முற்படும் என்று நம்புவதே கஷ்டமாக இருக்கிறது. ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும் என்று சம்பவங்கள் உணர்த்துகின்றன.

கல்கி

2007 ஏப்ரல் 22
சர்வஜித் சித்திரை 9
மலர் : 65
இதழ் : 38

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.





அரசியல்வாதிகள் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் ; அவர்களை எந்த அமைப்பும் தட்டிக் கேட்கக் கூடாது என்கிற மோசமான போக்கின் மற்றொரு வெளிப்பாடுதான் இந்த நிகழ்வு.

சில நாட்களுக்கு முன்புதான் தமிழக முதல்வர் உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தடையை எதிர்த்து 'பந்த்' நடத்தினார். அதைத் தொடர்ந்து பிரதமரும் நீதிமன்றங்கள் தங்கள் எல்லைகளை மீறிச் செயல்படுவதாகக் குற்றம்சாட்டி எச்சரித்தார்! மறுதினமே, பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஒருவர், நீதித் துறையையே எதிர்க்கத் துணிந்து, டெல்லியில் உச்ச நீதிமன்ற ஆணைப்படி ஸீல் வைக்கப்பட்ட கடைகளின் ஸீல்களை உடைத்தெறிந்து உச்சநீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காகத் தண்டனை பெற்றுள்ளார்.

தேர்தல் கமிஷனும் கண்காணிக்கக் கூடாது ; நீதிமன்றங்களும் தட்டிக் கேட்கக் கூடாது ; வோட்டு போட்ட மக்களும் அறியாமை என்ற பாவத்துக்காக அவதிப்பட வேண்டும். அரசியல்வாதிகள் மட்டும் லஞ்ச-ஊழல் முதல் கொலை - கொள்ளைகள் வரை எந்த அக்கிரமத்தில் வேண்டுமானாலும் ஈடுபடலாம்! இது ஜனநாயகமாக எப்படி இருக்க முடியும்? மக்கள் பிரதிநிதிகளின் சர்வாதிகாரம் அல்லவா இது!

அதிலும் தேர்தல் கமிஷனின் ஆணையையும் அதிகாரத்தையும் ஏற்க பா.ஜ.க. மறுப்பது, சர்வாதிகாரப் போக்கு மட்டுமல்ல ; நடந்த சம்பவத்திலிருந்தும் இழைத்த குற்றத்திலிருந்தும் கவனத்தைத் திசைதிருப்பும் போக்கு!

எத்தனை காலத்துக்குத்தான் ஹிந்து - முஸ்லிம்களிடையே பிரிவினை ஏற்படுத்தி அரசியல் பண்ணுவது? பிற கட்சிகள் சிறுபான்மையினரை 'மகிழ்வித்து' அரசியல் நடத்தினால், அதற்கு மாற்றாக, அதே சிறுபான்மையினரை மட்டந்தட்டி அரசியல் நடத்துவது வெற்றியை அவ்வப்போது பெற்றுத் தரலாம் ; ஆனால், கூடவே மதவெறியையும் நிரந்தரப்படுத்திவிடும். அப்படி ஒரு சூழல் வந்துவிட்டால், இந்தியாவின் ஜனநாயகம் மடிந்துபோய், அடிப்படைவாதம் வேரூன்றிக் கொள்ளும். அராஜகத்துக்கும் அழிவுக்கும் அதுவே அடிகோலும். ●



இப்படியும் நடக்குமா?

சமீபத்தில், என் தோழியைச் சந்திக்க நேர்ந்தது. பள்ளிப் பருவத்தில் ஒன்றாகப் படித்த நாங்கள், வெகு காலம் தொடர்பு இல்லாமல் இருந்து, மறுபடியும் தொடர்பு கொண்டோம்.

அவளுக்கு ஒரு பையன். இருபத்து நான்கு வயது இளைஞன்; அழகும் அறிவும் துடிப்பும் நிறைந்த பி.இ. முடித்த ஒரே பையன். கேம்பஸ் இன்டர்வியூவில் தேர்வு செய்யப்பட்டு, டெல்லியில் நேர்முகத் தேர்வுக்குச் சென்றான்.

நேர்முகத் தேர்விலும் வெற்றி பெற்றுவிட்டு கம்பெனியிலிருந்து திரும்பும்போது தாகம் எடுக்கவே, கரும்பு ஜூஸ் குடித்துள்ளான்.

அவ்வளவுதான்... சுருண்டு விழுந்தான். மரணம் அடைந்தான்.

என்ன நடந்திருக்கும் என்று (மருத்துவர்கள் உட்பட) பலரும் கூறுவது இதைத்தான்... ஜூஸுக்குப் பிழிய எடுக்கப்படும் கரும்பு, அப்படியே கத்தையாக எடுத்து மெஷினுக்குள் விடப்படுகிறது. சில சமயங்களில் கொடிய விஷம் கொண்ட பாம்பு அந்தக் கட்டினுள் இருக்குமாம். அதுவும் சேர்ந்து அரைக்கப்படும்போது அந்த விஷம் தாக்கி மரணம் நிகழ்ந்தே விட்டது. கரும்பு ஜூஸ் குடிக்கப் போகிறீர்களா..? ஒரு கணம் நிதானியுங்கள்.

- லட்சுமி நடராஜன்,
திருப்பூர்.

வாசகர்களே... உங்களுக்குக்கூட 'இப்படியும் நடக்குமா?' அனுபவங்கள் இருக்கலாம். எழுதுங்களேன் எங்களுக்கு!

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:







ஓம் ஹ்ரீம் புவனேச்வர்யை நம:

புதுக்கோட்டை

ஸ்ரீபுவனேச்வரீ ஸந்நிதியில்

ஒரு வருஷ சண்டீ ஹோமம்

நிறைவு விழா

ஸர்வஜித் வருஷம், வைகாசி 11 வெள்ளி முதல் 18 வெள்ளி வரை

(25-05-2007 to 01-06-2007)

வைகாசி 12 சனிக்கிழமை முதல் 13 ஞாயிறு வரை (26-05-07 to 27-05-07)

பரம பூஜ்ய ஸ்ரீசாந்தாநந்த மஹாஸ்வாமிகள் பக்தர்கள் மாநாடு நடைபெறும்.

வைகாசி 14 திங்கள் முதல் 18 வெள்ளி வரை (28-05-07 to 01-06-07)

தச லக்ஷ ஸ்ரீலலிதா நாம ஹோமம் நடைபெறும்.

ஸ்ரீசாந்தாநந்த மஹாஸ்வாமிகளின் பக்தகோடிகள் அனைவரும் நிறைவு விழா நிகழ்வுகளிலும், மாநாட்டிலும் கலந்துகொண்டு குருவருளும், திருவருளும் பெற்று என்றும் இன்புற்று வாழ விரும்பிப்

பேரன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

பரமபூஜ்ய ஸ்ரீஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின்


அருளாணைப்படி,

விழாக்குழுவினர்

- நன்கொடைகள் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- அழைப்பிதழ் வேண்டுவோர் தங்களது தெளிவான முகவரியுடன் கீழ்காணும் முகவரிக்குக் கடிதம் எழுத வேண்டுகிறோம்.

ஸ்ரீஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகள் அதிஷ்டானம், கீழ 7 ஆம் வீதி, புதுக்கோட்டை - 622 001.
☎ 04322-221440 / 222128 e-mail:srisri_judge@sancharnet.in

27



திவ்யப்பிரபந்தமும் திருக்குறளும்

திவ்யப் பிரபந்தத்தில் சில பாடல்களில் திருக்குறளின் வரிகள் பயன்பட்டிருக்கின்றன. சில அப்படியே, சில வேறு அர்த்தத்தில். இதைப் பற்றி ஆராய்ச்சியே செய்யலாம்.

திருமழிசை ஆழ்வாரின் நான்முகன் திருவந்தாதியில் 23-ஆம் பாடல் இது.

வாரம் ஒரு பாசுரம்

வித்தும் இடவேண்டும் கொல்லோ
விடை அடர்த்த
பத்தி உழவன் பழம் - புனத்து? -
மொய்த்து எழுந்த
கார் மேகம் அன்ன கரு மால்
திருமேனி
நீர் வானம் காட்டும், நிகழ்ந்து

(விடை அடர்த்த - எருதுகளைக் கொன்ற, மொய்த்தெழுந்த - திரண்டு வந்து)

இதில் திருக்குறள் 87ஐ வேறுவிதமாகப் பயன்படுத்தியிருக்கிறார். 'விருந்தோம்பல்' என்ற அதிகாரத்தில்...

'வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்' எனும் குறளின் பொருள்.

விருந்தாளிகளுக்குக் கொடுத்து மிச்சத்தை உண்பவன் தன் நிலத்தில் விதை போடக்கூட தேவையில்லை என்று விருந்தினரைப் போற்றுதலை அழுத்தமாகச் சொல்வதற்குப் பயன்படுத்தினார்.

ஆழ்வார் இந்தக் குறளை வேறு பரிமாணத்துக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். 'பக்தி உழவனான பகவானின் நிலத்தில் நாம் ஒரு விதையும் விதைக்க வேண்டாம். அவனே கவனித்துக் கொள்வான்' என்கிறார். வைணவ மரபின் அடிநாதம் இது. நாம் எதுவுமே செய்ய வேண்டியதில்லை. அவனை நம்பினால் மட்டும் போதும். மிச்சத்தை அவன் பார்த்துக்கொள்வான். இந்தப் பாட்டில் இரண்டாம் பாதியில் மழை திரண்டு வரும் நீலவானம் மேக வண்ணனான திருமாலைக் காட்டுகிறது ஆழ்வாருக்கு. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்கிற பழமொழியின் பயப்படுத்தாத வடிவம் இந்தப் பாடல்.

(படிக்கலாம்)

சுஜாதா

மருதன்


அறிவியல் வளர்ச்சியில் கடவுள் காணாமல் போய்விடுவார் என்று பலர் எதிர்பார்த்தனர். சிலர் பயந்தனர். ஆனால், அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. கம்ப்யூட்டர் திரையில் வெங்கடாஜலபதி ஜெகஜ்ஜோதியாக ஜொலிக்கிறார். செல்போன் திரையில் கர்த்தர். மணிபர்ஸில் மாரியம்மன். அறிவியல் துணையுடன் அத்தனை தெய்வங்களும் அமர்க்களமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆங்காங்கே 'அற்புதங்கள்' நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. 'அவளுக்கு கிரேக்க மொழி தெரியாது. ஆனால், திடீர்னு நேத்து ராத்திரி ஒரு மணி நேரம் தொடர்ச்சியா கிரேக்க மொழியில பேசினா. இது எப்படிச் சாத்தியம்?' மியாமியில் உள்ள ஒரு பெண்ணுக்கு நடந்த அதிசயம் இது.

Why We Believe What We Believe– டாக்டர் ஆன்ட்ரு நியூபெர்க் என்பவர் எழுதி சமீபத்தில் வெளியான புத்தகம் இது. மனித மூளை, கடவுள் இரண்டுக்கும் உள்ள தொடர்பை ஆழமாக ஆராயும் நூல். பேனா மூடியைக் கடித்துக்கொண்டே, மோட்டுவளையை உற்று நோக்கியபடி எழுதப்பட்டதல்ல இந்நூல். முழுக்க முழுக்க ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆய்வுப் பிரதி.

ஆன்ட்ருவின் ஆராய்ச்சி இரண்டு கட்டங்களைக் கொண்டது. முதல் கட்டம் அல்ஜீமர்ஸ், பார்க்கின்ஸன்ஸ் தாக்கப்பட்ட நோயாளிகளைப் பற்றியது. அவர்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள், அவர்கள் மூளை எப்படி இயங்குகிறது, அவர்கள் எப்போதெல்லாம் சந்தோஷமாக இருக்கிறார்கள், எப்போதெல்லாம்

கடவுளுடன்



கம்யூனிகேட் பண்ணலாம்!

முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இன்னபிற.

இரண்டாவது கட்டம், ஆன்மிகம். திபெத்திய புத்த பிட்சுகள், பென்தகோஸ்ட் கிறிஸ்தவர்கள், பாதிரிமார்கள் போன்றவர்களைக் கொண்டு பென்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட விலாவாரியான ஆய்வு. சம்பந்தப்பட்டவர்கள் பிரார்த்தனையில் ஈடுபடும் போது, அவரவர் மூளையின் இயக்கம் துல்லியமாகப் பிரதி எடுக்கப்பட்டது. பிறகு சமோசா, மசாலா டீ அருந்திய படியே ஆராய்ச்சி முடிவுகளைப் பிரித்து வைத்துக்கொண்டு ஒப்பிட்டிருக்கிறார் ஆன்ட்ரூ. சுவாரஸ்யமான சங்கதிகள் சில சிக்கியிருக்கின்றன.

ஆண்டவர்கள் வெவ்வேறாக இருந்தாலும், பிரார்த்தனை செய்யும் ஆட்கள் ஒன்றுபோலவேதான் இருந்திருக்கிறார்கள். அதாவது அவர்களது மூளைப் பகுதி ஒன்றுபோலவே செயல்பட்டிருக்கிறது. கர்த்தராக இருந்தாலும் சரி, கருமாரியாக இருந்தாலும் சரி... கண்களை மூடி, நா தழுதழுக்க அவர்கள் பிரார்த்தனை செய்தபோது, அவர்கள் மூளையின் ஃப்ரண்டல் லோப் (Frontal lobe) என்னும் பகுதி சுறுசுறுப்புடன் விழித்துக் கொண்டு வேலை செய்திருக்கிறது. அனைவருக்கும் ஒன்று போலவே.


'கடவுளை நேரில் பார்த்தேன். அவரை உணர்ந்தேன். புரியாத கிரேக்க மொழியில் பேசினேன்' போன்ற அற்புதங்கள் நிகழ்த்தப்படும்போது, பேரியேடல் லோப் (Parietal lobe) என்னும் பகுதி பணியாற்றியிருக்கிறது. மண்டையின் பின்புறம் அமைந்துள்ள சமாசாரம் இது.

மத்திய பிரதேசத்தில் உள்ள பழங்குடி இனத்தினர் பல ஆயிரக்கணக்கான கடவுள்களை வழிபடுகிறார்கள். தவளை, நண்டு, தும்பி, அரசமர இலை எல்லாமே அவர்களுக்கு கடவுள்கள். இவர்கள் பலமுறையில் பிரார்த்தனை செய்தால் கூட, இவர்களது மூளை ஒரே மாதிரியாகத்தான் ரியாக்ட் செய்யும்.

ஆக, மனித மூளையின் அடிப்படை செயல்பாடு ஒன்றுதான். குரான், கந்த சஷ்டி கவசம், பைபிள், பெரியார் கட்டுரைகள் என எதை வாசித்தாலும் மூளை ஒன்றுபோல்தான் செயல்படுகிறது; ஒன்றுபோலவே பரவசப்படுகிறது.

கடவுளை ஏற்றுக்கொண்டவர்கள், மறுப்பவர்கள் இருவருமே ஆன்ட்ருவின் ஆய்வுகளைத் தங்களுக்குச் சாதகமானதாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'கடவுள் ஒருவரே. மொழி, இனம், கலாசாரம் எல்லாவற்றையும் கடந்தவர் அவர். எல்லோருக்கும் பொதுவானவர் அவர்' - இது ஆன்மிகவாதிகளின் வாதம்.



'யார் சொன்னது? கடவுளை சிருஷ்டித்ததே மனித மூளைதான். அறிவியல் உலகில் கடவுளுக்கு இடமில்லை. எல்லாம் நியூரான்களின் அதிர்வுகள். பக்தி, பரவசம் எல்லாமே உணர்ச்சி மேலீட்டில் விளைந்தவை' - இது கடவுள் மறுப்பாளர்களின் வாதம்.

மூன்றாவதாக இன்னொரு கோஷ்டி இருக்கிறது. சாமியார்கள். 'கடவுளோட நீங்க தாராளமா பேசலாம். ஆயிரத்தொரு ரூபாய்க்கு ஒரு டிடி எடுத்து என் பேருக்கு அனுப்புங்க. நான் உங்களுக்கு கடவுளை கனெக்ட் பண்ணித் தரேன்' கம்ப்யூட்டர் விநாயகர், கால்சென்டர் விநாயகர் என்று வாரா வாரம் புதுப் புது கடவுள்களை டௌன்லோட் செய்யும் இந்த மூன்றாவது கோஷ்டிகளிடம் நாம் கூடுதல் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டியது அவசியம். ●



''நம்ம தலைவர் ஒரு நிறைகுடம்.''

''எதை வெச்சு அப்படிச் சொல்றே?''

''எவ்வளவு குடிச்சாலும் தள்ளாட மாட்டாரு.''

- கா.சங்கர்

''இப்பத்தான் தைரியம் வந்தது!''

''மன்னர் ஏன் சாலைகளையெல்லாம் செப்பனிடச் சொல்றாரு...?''

''போனதடவை புறமுதுகிட்டு ஓடிவரும்போது தடுக்கி விழுந்துட்டாராம்.''

- எஸ். விஜயராணி



''நீங்க எனக்குக் கொடுத்த லவ் லெட்டரின் தலைப்பில் 7.3.2003ன்னு போட்டிருக்கே?''

''நாலு வருஷத்துக்குப் பின் இப்பத்தான் தைரியம் வந்தது உன்னிடம் நீட்ட!''

- உ.ராஜாஜி




''என் பையன் பின்னாடி நல்லா வருவான்னு நீங்க சொன்னது பலிச்சிடுச்சு.''

''எப்படிங்க?''

''பின்னோக்கி நடக்கறதுல அவன்தான் ஸ்டேட் ஃபர்ஸ்ட்

- எஸ்.விஜயராணி





''இந்த சம்மருக்கு 'காஷ்மீர்' போகலாம்னு நான் சொன்னா என் மனைவி 'குலு மணாலி' போகணும்னு சொல்றா!''

''அப்புறம்?''

''எங்களுக்குள்ளே 'பனிப்போர்' ஆரம்பமாயிடுச்சு''

- அனன்யா



''சேத்துப் புண்ணுக்கு என்னங்க மருந்து போடலாம்?''

''ஊஹூம்... புறமுதுகுப் புண்ணைத் தவிர எனக்கு வேற எந்தப் புண்ணைப் பற்றியும் தெரியாது!''

- உ. ராஜாஜி

ஜினிமா கனவு- அதாவது, ஜினிமா கனவு காண்பவர்கள் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலிருந்தாலும் கோடம் பாக்கத்துக்கு ரயிலேறுவார்கள். ஆனால், நான் வித்தியாசமானவனானதால் எதிர்த் திசையில் பயணித்தேன்.

அதாவது, கோடம்பாக்கத்திலிருந்து ரயிலேறி எக்மோரோ, சென்ட்ரலோ சென்று, அங்கிருந்து அதிகப் பெட்டிகள் கொண்டவற்றில் ஏறி, தஞ்சை, புஞ்சை, நெல்லை என மாவட்டங்கள் நோக்கிக்கூ...ஜிக்கு புக்கு ஜிக்கு புக்கு!

வாசல்கள் அறவே இல்லாத சினிமா கோட்டைக்குள் நுழைய நாடகத்தை நாடினேன். நாடகம் என்றால் அகன்ற திரை விரிய, அடுக்கடுக்கான அரங்க அமைப்புகள் கொண்ட நாடகங்கள் அல்ல!

திரு. எஸ்.வி.ராமதாஸ் என்ற நடிகரின் நாடகக் குழுவிலிருந்து தொடங்கி, மது விலக்குப் பிரசார நாடகங்கள், குடும்பக் கட்டுப்பாடு நாடகங்கள், தொலைக் காட்சி மற்றும் வானொலி நாடகங்கள் என வகைதொகை இல்லாமல் மிகச் சிறு தொகைக்காக (ரூபாய் பதினைந்துக்கு இரண்டு நாடகங்கள்) நடித்துக் கொண்டிருந்தேன்.

அப்படி ஊர் ஊராகச் செல்லும் போது அரசு சுகாதார மையங்களிலோ, பள்ளிக்கூடங்களிலோ தங்க வைப்பார்கள். அங்கேயே அன்றைய நாடகத்துக்கான ஒத்திகையும் பார்ப்போம்.



அப்படியாகத்தானே! ஒருநாள்...

ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கும் போது, பார்த்துக் கொண்டேயிருப்பது போன்று தோன்ற... இடது தோள்பட்டையில் என் மோவாய் மோத, திரும்பிப் பார்த்தேன்...

உடைந்திருந்ததால் பல ஜன்னல் களாய்த் தெரிந்த ஒரு ஜன்னல் வழியே

ரா.பார்த்திபன்

அவள் பெயர் என்ன?

சில பின்னல்கள், சில கொண்டைகள் என 10, 12 கிராமத்துப் பெண்கள் மிஞ்சி மிஞ்சிப் போனால் 20 வயதுக்குள்ளிருக்கும். சொழட்டிப்போட்ட சோழியாட்டம் வாயெல்லாம் சிரிப்பு!

ஒட்டுமொத்தமாய்ப் பார்த்தால், காட்டுப் பூக்களால் செய்யப்பட்ட ஒரு பொக்கே போல!

திரும்ப-வும் ஒத்திகை தொடர்ந்தது!

என் இடது கழுத்துக்கும் சட்டை காலருக்கும் இடைபட்ட பகுதியில் மிக அருகிலிருந்து யாரோ அருகம்புல்லால் வருடுவதைப் போல இருந்தது. திரும்பிப் பார்த்தால், அருகில் யாருமில்லாததால், அதே ஜன்னலை நோக்கி பார்வையின் Focus திரும்பியது. இந்த முறை இன்னும் கொஞ்சம் Zoom - in செய்து பார்த்தேன். சொரசொரப்பான கேன்வாஸுக்கு நடுவே வரையப்பட்ட ஆயில் பெயின்டிங் போல, வறண்ட செம்பட்டைத் தலைகளுக்கு நடுவே எண்ணெய் தடவி படிய வாரிய ஒரு தலை, என்னைத் தடவிப் பார்த்தபடியே..!

அதற்குள் நான் பேச வேண்டிய வசனம் வர, பேசிவிட்டு, அடுத்து நானில்லாத காட்சியின் ஒத்திகை.

பக்கத்திலிருந்த மேஜை மீது அமர்ந்தேன். நடு முதுகில் ஏதோ குத்த, திரும்பிப் பார்த்தேன். அதே ஆயில் பெயின்டிங்கின் பார்வை.

இதைப் படிக்கும்போது விரியும் கற்பனைக்குரிய தேவதை இல்லை அவள். 'சரிதான் விட்டுத்தள்ளு' ரகமும் இல்லை. ஆரம்பகால சரிதா போல குட்டையாய், குண்டாய், குண்டு, குண்டான கண்களில் ஓரங்க நாடகமே நடத்திக் கொண்டிருந்தாள்.

ஓரக் கண்ணால் பார்க்கும்போது ஓரளவு சமாளித்துவிடலாம். ஓங்கி அடிப்பதைப் போல பார்த்தால் ஒதுங்கி விடவே தோன்றும் யாருக்குமே. ஒதுங்கி வேறு பக்கம் நின்றிருந்த மற்ற நடிகர்களிடம் பேச்சுக் கொடுத்தேன்.

அந்த ஊரில் பாலத்தை ஒட்டி ஓர் ஏரி இருப்பதாகவும், அதில் இறங்கிக்



குளித்தால் சொல்லிமாளாத புத்துணர்ச்சி கிடைக்கும் என்றும் கூறினார்கள்.

நானும் 'இன்னைக்கு ரிகர்சல் 1 மணிக்கு முடிந்ததும் சாப்பிட்டு 2 மணி நேரம் தூங்கி எந்திரிச்சி, 4 மணிக்கு ஏரி இறங்கலாம்'னு சொன்னேன்.

ஒத்திகை முடியவே 2½ மணி ஆனது. ஓட்டல்களில் சாப்பாட்டு நேரம் முடிந்துவிட்டதால் டீ, டிபன் சாப்பிட்டு விட்டு வந்து படுத்தபோது 4½ மணி. தூங்கி எழுந்து ஏரி நோக்கிச் சென்ற போது இருட்டிய ஏழு மணி! என்னோடு இரண்டு நடிகர்கள் சாவகாசமாய் அந்த இறக்கத்தில் இறங்கிக் கொண்டிருந்தபோது, பெரிய துணி மூட்டையுடன் ஒரு பெண் சுமக்க முடியாமல் எதிரில் வந்து கொண்டிருந்தாள்.




அந்த நினைப்பையே ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்து கிட்டத் தட்ட மூன்று மணி நேரம் என்னென்ன ஆசைகளை அடித்துத் துவைத்துக் கொண்டிருந் தாளோ?

எங்கோ பார்த்த மாதிரியிருந்தது. எங்களைக் க...ட...க்..கும்போது பெருமூச்சைத் துப்பிவிட்டு "நாலு மணிக்கு வாறோம்னு சொல்லிட்டு இருட்டுனதுக்கப்புறம் வந்தா? மனுஷி துவைச்ச துணியவே எத்தனை தரம்தான் அடிச்சு நேரம் போக்குறதாம்? அதுவும் ஒத்தையாளா? ஆம்பளைன்னாலே மனசு இருக்காதுபோல...'' படபடவென பொரிந்து தள்ளிய பெண்ணை உற்றுப் பார்த்தேன். கண்கள் நிரம்பித் ததும்பின. அதே ஆயில் பெயின்டிங் - கண்ணீரில் கரையத் தொடங்கியது.

பாவமாய்ப்பட்டது. நான் அந்தப் பெண்ணிடமோ - ஜாடைமாடையாகவோ சொல்லவேயில்லை. யாரிடமோ பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண், தனக்காகவே கூறுவதாக நினைத்துக்கொண்டு அந்த நினைப்பையே ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் என்னென்ன ஆசைகளை அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தாளோ? எனக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. நான் இறங்கிக் கொண்டிருக்க, அவள் ஏறிக்கொண்டிருக்க... நானே முழு காரணமாயில்லாமல்... நானும் காரணமாய்... கண்ணிமைத்தலின் அளவில் ஒரு குறுந்தொகை வார்த்தைகளற்ற பார்வைகளாய்... அரங்கேறி அன்றே அந்த நிமிடமே முடிந்தும் விட்டது. அதன்பிறகு இன்றுவரை அந்தப் பெண்ணை நான் பார்க்கவே இல்லை. ஆனால் காதல் என்ற வார்த்தை வரும்போதெல்லாம் ஒரு லட்சம் துண்டுகளாய் வெட்டப்பட்ட மின்னலின் ஒரு துண்டினைப் போன்ற ஜிகினாவாக... அந்தக் காட்சி இன்னமும் என் நெஞ்சினில்.

ஆமாம், அவள் பெயரென்ன?

(மின்னும்)



கருணை மழை பொழியுங்கள்

அருள் உள்ளம் கொண்ட அன்பர்களே!
வணக்கம்.

மிகவும் எளிய குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. அதில் என்னுடைய ஆறு வயது மூத்த பையன் S.முஜாஹித்துக்கு இறைவனின் பெரிய சோதனையாக பிறவியிலேயே இரண்டு காதும் கேட்காது. வாயும் பேச முடியாமல் போனது. சென்னை மெட்ராஸ் ENT ரிசர்ச் பவுண்டேஷனில் டாக்டர் பத்மஸ்ரீ மோகன் காமேஸ்வரன் அவர்கள் என் மகனை பரிசோதித்துவிட்டு காக்குளியர் இம்பிளான்டேசன் அறுவைச் சிகிச்சை செய்தால் எல்லோரையும் போல் கேட்கவும் பேசவும் முடியும் என கூறியுள்ளார். ஆஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்டுத் தலையினுள் பொருத்த வேண்டிய உட்செவி கருவி மட்டும் ரூ.5,12000/- மதிப்பு வாய்ந்தது. அறுவைச் சிகிச்சை கட்டணம் உட்பட 6,12000/- (ஆறு இலட்சத்து பன்னிரண்டாயிரம்) ஆகும் என்று மருத்துவமனையால் கணக்கிடப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. எளிய வாழ்க்கை நடத்தி வரும் என்னால் இவ்வளவு பெருந்தொகையை திரட்ட இயலவில்லை. ஆதலால் அறச்சிந்தை கொண்ட தங்களைப் போன்றோர்களின் நன்கொடைகளைக் கொண்டு இப்பெரியச் செயலை செய்து முடிக்கத் துணிவுக் கொண்டிருக்கிறேன். தாங்கள் என் மகன் எதிர்கால நல்வாழ்வுக்கு உதவி புரிந்து வழங்கும் நன்கொடையை இறைவனின் கருணை மழையாக கருதுவேன். தாங்கள் வழங்கும் நன்கொடையை **Madras ENT Research Foundation Chartable Trust A/C Mujahith** என்ற பெயரில் காசோலையாகவோ (செக்) வரைவேலையாகவோ (டிடி) கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

நன்கொடைக்கு 80-G பிரிவின் கீழ் வருமான வரிவிலக்கு உண்டு என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் மேலான உதவியை எதிர்நோக்கும் அன்பன்,

L.ஷேக்முகமது,
எண்-24, காஜிசாய்பு தெரு, ஆலந்தூர், சென்னை - 16.
செல் : 9884658416

குலு குலு மணாலி!



தீவிரவாதம், பயங்கரவாதம், பக்கவாதம் எதுவுமே இல்லாத காஷ்மீரைத் தெரியுமா? அதன் பெயர் குலுமணாலி. என் கடன் 'பனி' செய்து கிடப்பதே என்று வெள்ளையாகப் பரந்து விரிந்திருக்கும் ஜில் பிரதேசம்.

ஆன்மிக ஆர்வலர்களுக்கு இது ஒரு புண்ணிய ட்ரிப். தடுக்கி விழுந்தால் கோயில்; தடுக்கி விழாவிட்டாலும் கோயில். வசிஷ்டர், ராமர், பீமர், இந்திரன், அர்ஜுனன், சிவபெருமான் என்று பலர் வந்துபோன இடம் என்று கைடுகள் சர்வ சாதாரணமாகச் சொல்கிறார்கள். 'அர்ஜுனன் சாப் இங்கேதான் தவம் செய்தார்!' 'சிவ பெருமான் ஸார் இங்கேதான் ரெஸ்ட் எடுத்துக்கொண்டார்', 'வசிஷ்டர்ஜி இங்கேதான் டிபன் சாப்பிட்டார்' இத்யாதிகள் கொள்ளை அழகுடன் கவரும் திபெத்தியக் கோயில்களும் உள்ளன.



மாதத்துக்கு மூன்று சினிமா கம்பெனிகள் (தமிழ் மற்றும் தெலுங்கு கூடாரத்துடன் இங்கே ஐக்கியமாகி விடுகின்றன.

பிரமாண்டமான குகைப் பகுதியில் அமைந்திருக்கிறது ஹிதிம்பா தேவி கோயில். 1553-ஆம் ஆண்டு கட்டப்பட்ட அதிசயம். குலு நாட்டு அரச குடும்பத்தின் முக்கிய கடவுள் ஹாடிம்பா தேவிக்கு ஒரு ஸ்பெஷல் கோயில் உண்டு. மே மாதத்தில் மூன்று நாட்கள் கோலாகலத் திருவிழா நடைபெறுகிறது.

ஒரு மினி எவரெஸ்ட் சிகரமும் இருக்கிறது. கடல் மட்டத்தைவிட 13,050 அடி உயரம். பற்கள் இலேசாக நடுங்க, கை கால் மெலிதாக உதற, ஊர்க் கதை பேசிக் கொண்டே சிறிது சிறிதாக ஏறலாம். நடுநடுவே இளைப் பாறலாம். குட்டீஸ்களை தூக்கிக்கொண்டு ஏற வேண்டுமே என்று பயப்பட வேண்டாம். விளையாட்டு காட்டிக்கொண்டே குழந்தைகளைச் சுமந்து வர தனி ஆட்கள் இருக்கிறார்கள்.

முதல் மாடிக்குக்கூட லிஃப்டில் செல்பவர்கள் ரஹாலா நீர்வீழ்ச்சிக்கு அருகே உட்கார்ந்து வேர்க் கடலை சாப்பிட்டபடியே

கனவு காணலாம். ரஹாலாவுக்கு டாட்டா காட்டிவிட்டு, கையோடு சிஸ்லிங் அருவியையும் கண்டு களித்துவிட வேண்டும். நீர் விழுந்து கொண்டிருக்கும்போதே உறையத் தொடங்கிவிடுகிறது இங்கு.

சப்பை ஷூக்களைப் பொருத்திக் கொண்டு சர்ரென்று ஸ்கேட்டிங் போகலாம். தெரியாவிட்டால் சொல்லித் தருவார்கள். ராஜராஜசோழனாகவோ, அலெக்ஸாந்தராகவோ பாவித்துக் கொண்டு ஷோலங் பள்ளத்தாக்கில் குதிரைச் சவாரி செய்யலாம். கிளைடிங் வசதியும் உண்டு.

ஏராளமான பள்ளத்தாக்குகள், பனி போர்த்திய மலைகள், கிச்சு கிச்சு மூட்டிக் கொஞ்சி விளையாடும் பனி, திரும்பும் இடமெல்லாம் பச்சைப் பசேல் புல்வெளிகள். பிக்னிக் ஸ்பாட் என்று தனியாகத் தேடிப்போக வேண்டியதில்லை. பத்தடி நடந்துவிட்டு உட்கார்ந்துவிடலாம். கண்களைச் சுழட்டினால் ஒரு கோயிலோ, குகையோ, அருவியோ, வெள்ளை மலைக் குன்றோ இருக்கும். போதாதா?





டெல்லியிலிருந்தும் அம்பாலாவிலிருந்தும் நிறைய பஸ்கள் கிடைக்கின்றன. ரயிலில் போக வேண்டுமென்றால் சண்டிகர் அல்லது பதன்காட். ஏதாவதொரு ரயில் நிறுத்தத்தில் இறங்கி, அங்கிருந்து பஸ் பிடித்து விடலாம். விமான வசதியும் உண்டு. அருகில் உள்ள விமான நிலையம் பூடான். குலுவிலிருந்து பத்து கிலோமீட்டர். உள்ளுக்குள் சுற்ற டாக்ஸிவாலாக்கள் இருக்கிறார்கள். மீட்டருக்கு மேல் கேட்டு இம்சிக்க மாட்டார்கள்.


தடுக்கி விழுந்தால் ஓட்டல்கள். ஒருநாள் வாடகை ஆயிரத்து சொச்சம். ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட சித்தப்பா பையனோ, பெரியப்பா பையனோ குலு மணாலிக்கு அருகில் இருந்தால், நீங்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி.

இந்த விநாடி முதல் ஜூன் மாத இறுதி வரை ரம்யமாக இருக்கும். பிறகு, மழைக் காலம். செப்டம்பர் வந்துவிட்டால் மீண்டும் வசந்தம்.

அவசியம் எடுத்துப் போக வேண்டிய பொருட்கள் ஸ்வெட்டர், குரங்குக் குல்லாய், தடித்த போர்வைகள், கையுறைகள். நான்கு ஸ்வெட்டரை ஒன்றின் மீது ஒன்று அணிந்துகொண்டால்கூட அவ்வளவு சீக்கிரத்தில் குளிர் விட்டுப் பிரியாது. பயம் வேண்டாம்; கதகதப்பான ஆடைகள் அங்கேயே வாடகைக்குக் கிடைக்கும்.

இனி எடுத்துப்போகக்கூடாத பொருள்களின் பட்டியல்... செல்போன், புத்தகங்கள், லேப்டாப், ஆபீஸ் ஃபைல், அக்கவுண்ட்ஸ் லெட்ஜர், ஆடிட்டட் பாலன்ஸ் ஷீட், ஆவக்காய் ஊறுகாய், அவரைக்காய் வத்தல், தலைவாழை இலை போன்ற சமாசாரங்கள் வேண்டாம். கொஞ்ச காலத்துக்கு ரொட்டி, தால் சுவைக்கலாம். கொஞ்சம் ஹை பட்ஜெட் டூர். ஆனால், ஒரு துளி வெள்ளைப் பனி உடலில் பட்டால் போதும்... அந்த நினைப்பே வராது.

- வ்ருத்திஸ்ரீ



அமரர் கல்கி



மௌனத்தின் பெருமையைப் பற்றிப் பெரியோர் பலர் சொல்லியிருக்கிறார்கள். 'மௌனம் கலகம் நாஸ்தி' என்பது ஒரு முதுமொழி. உலகத்திலே கலகம் இல்லாதிருப்பது ஒன்று தான் முக்கியமான காரியம் என்றால், நாம் எல்லோரும் ஊமைகளாகிவிடலாம். இம் மாதிரியே, கலகம் உண்டாவதெல்லாம் ஸ்திரீகளினால்தான் என்றும் சொல்லப்படுவதுண்டு. 'சீதை இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை; துரௌபதி இல்லாவிட்டால் பாரதமில்லை; ஹெலன் இல்லாவிட்டால் டிராய் யுத்தம் இல்லை. ஆதலின் பெண்கள் இல்லாவிட்டால் கலகம் கிடையாது' என்று சொல்வார்கள். இதற்காக உலகில் பெண்களே வேண்டியதில்லையென்று தீர்மானித்துவிடலாமா? இதில் ஒரு சங்கடந்தான் இருக்கிறது. பெண்கள் இல்லாவிட்டால் கலகம் இல்லாமலிருக்கலாம்; ஆனால், அதோடு உலகமும் இல்லாமல் போய்விடும். அவ்வாறே பேச்சில்லாவிடில் கலகமில்லாமலிருக்கலாம்; அத்துடன் சிநேகமும் இல்லாமல் போய்விடும்.

மௌனத்துக்கு ஒரே ஓர் உபயோகந்தான் உண்டென்று எனக்குத் தோன்றுகிறது. ஏகாதசி உபவாசத்துக்குப் பிறகு துவாதசி பாரணை ருசிப்பதைப்போல், ஒருநாள் மௌனமாயிருந்தால் மறுநாள் பேச்சின் சுவை அதிகமாகக் கூடும். மகான் தாயுமானவர் மௌனத்தின் சிறப்பைக் குறித்து எல்லையில்லாமல் பாடியிருக்கிறார். அவரும், பட்டினத்தடிகளும் தற்செயலாகச் சந்தித்தார்களென்று ஒரு நிமிஷம் கற்பனை செய்துகொள்வோம். அவர்களுக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடக்கலாமென்று தோன்றுகிறது:

தாயு: பட்டினத்தாரே! மௌனத்தின் சுகத்தைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தம்! என்ன அற்புதம்!

பட்டி: தாயுமானாரே! சும்மா இருப்பதே சுகமென்று சொன்ன உம் வாயில் சர்க்கரையை அள்ளிக் கொட்ட வேண்டும். மௌன இன்பத்தின் முன்னால் மற்ற இன்பங்களெல்லாம் துச்சம்! துச்சம்! துச்சம்!

ஒரு முகூர்த்த காலம் பேசினாலும் இவர்களால் மௌன இன்பத்தைப் பற்றி முழுவதும் பேசி முடிக்க முடியாது.

'இனிது இனிது ஏகாந்தமினிது' என்று தமிழ் மூதாட்டி கூறினாள்; ஆயினும் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்வதற்காக அந்தப் பாட்டி ஊர் ஊராய் மக்கள் இருப்பிடம் தேடிச் சென்றதாக அறிகிறோம்.

- 'அதிர்ஷ்ட கவசம்'
வானதி வெளியீடு

இனிது... இனிது...

தாம்ப்ராஸ்

THAMBRAAS

அந்தணர் என்போர் அறவோர் – மற்
றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்.

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப

தமிழ்நாடு பிராமணர் சங்கம் சுய விருப்பு, வெறுப்பின்றி தனி நபர் துதி பாடுதலை அறுத்து அரசியல் கலப்பு இன்றி சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு தன்னலம் கருதாது பாடுபட மாநிலத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும்



இராமேஸ்வரம்

திரு. **M.S. பாலகிருஷ்ணன்**

என்ற **அத்யான** பிராமணருக்கு வாக்களிக்க வேண்டுகிறோம்.

தேர்தல் நாள் : **15.04.2007**

இப்படிக்கு

தமிழ்நாடு பிராமணர் சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம்.

சிவாஜி... ரஜினி படமா...?





...ஷங்கர் படமா?



கடந்த வாரம் கல்கிக்கென 'சிவாஜி' படத்தின் ரகசியங்களைப் பிரத்யேகமாக விவரித்த டைரக்டர் ஷங்கரின் பேட்டி, இந்த வாரமும் தொடர்கிறது...

உங்கள் படப் பாடல்கள் மட்டும் வித்தியாசப்பட்டுத் தெரிவதன் மர்மம் என்ன?

"ஒன்றுமேயில்லை. அது ஒரு தேடல். ரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய என்ன செய்யலாம் என்கிற தேடல். கதை என்ன, கதாபாத்திரங்கள் என்னென்ன, அவற்றில் நடிப்பவர்கள் யார்யார், அவர்கள் சந்திக்கும் சூழ்நிலைகள் என்னென்னவென்று சுமார் ஒரு டஜன் கேள்விகளுக்கு ஒவ்வொரு படத்திலும் நான் விடை தேட முயற்சி செய்கிறேன். அப்போது நிறைய ஐடியாக்கள் தோன்றும். அவற்றையெல்லாம் பரிசீலித்து, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, யூனிட்டில் உள்ள ஒவ்வொருவரையும் அதில் ஈடுபட வைப்பதன் வெளிப்பாடுதான் நீங்கள் திரையில் காணும் புதுமைகளும் பிரம்மாண்டமும்."

சமுதாயப் பிரச்னையைத் தீர்மானித்துக்கொண்டு உங்கள் படத்தின் கதையைத் தயார் செய்கிறீர்களா... இல்லை, கதையை ரெடி செய்துகொண்டு அதில் சமுதாயப் பிரச்னையைப் பின்னுகிறீர்களா?

"அதை நான் முன்கூட்டியே தீர்மானம் செய்துகொள்வதில்லை. படத்துக்குப் படம் மாறுபடும். சில சமயங்களில் கதையைத் தயார் பண்ணும் போதே, ஒரு சமூகப் பிரச்னை அதில் வந்து கலந்துவிடும். 'ஜென்டில்மேன்' படத்தையே எடுத்துக் கொண்டால், முதலில் கதைதான் ரெடி பண்ணினேன். அதில் 'வியாபாரமாகும் கல்வி' என்ற பிரச்னை வந்து புகுந்துகொண்டது. ஆனால், 'இந்தியன்' இதற்கு நேரெதிர். லஞ்ச ஊழலை எதிர்த்து ஒரு படம் பண்ணுவது என்பது தீர்மானமாயிற்று. அதற்கேற்ப உருவாக்கப்பட்ட கதைதான் இந்தியன்."

கமல், ரஜினி இருவரையும் ஒப்பிட முடியுமா?

"இரண்டு பேருக்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதாக உணர்கிறேன். அவர்களுடைய அனுபவம், மெச்சூரிட்டி, அதன் காரணமாக முழுமையான டெடிகேஷன், ஒத்துழைப்பு - இப்படி நிறையச் சொல்லலாம். இரண்டு பேருக்கும் வெவ்வேறுவிதமான பரிமாணங்கள் உள்ளன. இரண்டு பேருடன் பணியாற்றுவதும் சந்தோஷமான அனுபவம். இரண்டு பேருமே கிரியேட்டிவிட்டிக்கு நிறைய ஸ்கோப் தருபவர்கள்."

உங்கள் படத்தைப் பற்றிய விஷயங்கள் படு ரகசியமாக வைக்கப்பட்டாலும் திடீரென இன்டர்நெட்டில் ஷூட்டிங்கின் போது எடுக்கப்பட்ட சில புகைப் படங்கள் வெளியாகின்றன. இசை வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே பாடல்கள் நெட்டில் வெளிவந்துவிட்டன. நீங்களே விளம்பரத்துக்காக இப்படிச் செய்திருப்பதாய் ஒரு குற்றச்சாட்டு உள்ளதே...

"நீங்கள் சொல்வது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. சத்தியமாகச் சொல்கிறேன். இப்படியெல்லாம் படத்துக்கு விளம்பரம் கிடைக்கச் செய்யலாம் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எனக்குத் தெரியாமலே நடந்துவிட்ட விஷயங்கள் இவை. ஸ்டுடியோவுக்குள்ளே ஷூட்டிங் நடந்தால், யூனிட் சம்பந்தப்பட்டவர்கள் தவிர மற்றவர்களைத் தடுத்துவிடலாம். ஆனால், அயல்நாட்டிலும், பூனா போன்ற வெளியூர்களிலும் அவுட்டோர் ஷூட்டிங் சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாதே! இன்று தொழில் நுட்பம் பெரிய அளவில் வளர்ந்து விட்டது. ஒரு செல்போனில் எதையும் சுலபமாகப் படம் எடுத்து இன்டர்நெட் மூலமாக உலகம் முழுவதும் பரவச் செய்து விட முடிகிறது. நான் ஷூட்டிங்கில் என்னுடைய வேலையில்தான் கவனமாக இருப்பேன். என்னைச்



பம். நான் இயக்கும் படங்களெல்லாம் பிரம்மாண்டம்தான் என்று ஆகிவிட்ட பிறகு, வேறு மாதிரியான படங்களை இயக்கும் சூழ்நிலை இல்லை. இயக்குநர் மகேந்திரனின் படங்களைப் போல இயக்க எனக்கு ஆசை. ஆனால், அது சாத்திய

"என்னுடைய 'முதல்வன்' படத்தில் ரஜினி நடித்திருந்தால், அது 'சிவாஜி' மாதிரி இருந்திருக்கும்!"

சுற்றி என்ன நடக்கிறது என்று பார்க்க முடியாது. எல்லாவற்றையும் மீறி ஏதாவது நடக்கிறபோது, நான் என்ன செய்ய முடியும்?"

உங்கள் படத்தின் கதைகள் எல்லாமே யதார்த்தத்தை மீறிய கற்பனைகளாக இருப்பதன் காரணமென்ன?

"வாழ்க்கையில் நடப்பவற்றை அப்படியே காட்டுவது எனது நோக்கமல்ல. எனவே, யதார்த்தத்தை மீறிய கற்பனையாகத்தான் அவை இருக்கும். ஒரு சராசரி ரசிகன், அப்படிப்பட்ட கற்பனைக் கதைகளைத்தான் சினிமாவில் பார்க்க விரும்புகிறான். அவனுடைய கற்பனைக்கு எட்டாத விஷயங்களை, நான் கற்பனை செய்து, அவற்றுக்குத் திரை வடிவம் கொடுக்கிறபோது அவன் ரசித்துப் பிரமிக்கிறான்."

முன்னணி டைரக்டராக விளங்கும்போது, நீங்கள் தயாரிப்பாளரானதன் நோக்கம் என்ன?

"அது என்னுடைய விருப்பமில்லை என்கிறபோது, அது மாதிரியான படங்களைத் தயாரிப்பதில் எனக்கு ஆர்வம் இருக்கிறது. புதிய, இளைய தலைமுறையினரது திறமையைக் கண்டறிந்து அதை ஊக்குவிக்க வாய்ப்பு கிடைக்கிறது."

உங்களுடைய படங்களில் உங்களுக்கு மிகவும் திருப்தி அளித்த படம் எது?

"இப்போதைக்கு சிவாஜிதான்."

உங்களுடைய 'முதல்வன்' படத்தில் ரஜினி நடித்திருந்தால் எப்படி இருக்கும்?

"சிவாஜி மாதிரி இருக்கும்!"

சிவாஜி - சூப்பர் ஸ்டார் ரஜினி படமா? டைரக்டர் ஷங்கர் படமா?

"ரஜினியைப் பார்க்க வேண்டும் என்று வருகிறவர்களுக்கு, முழுமையான திருப்தியைக் கொடுக்கும் விதமாக ரஜினி இருப்பார். அதேசமயம், ஷங்கரின் படத்தைப் பார்க்க வருபவர்களுக்குப் படம் முழுவதும் ஷங்கர் இருப்பார். ரஜினியும், ஷங்கரும் சேர்ந்தால் எந்த மாதிரி 'கெமிஸ்ட்ரி' இருக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டு வருகிறவர்களையும் இந்தப் படம் திருப்திப்படுத்தும். ரஜினி, ஷங்கர் விகிதாசாரம் பெர்ஃபெக்டாக அமைந்திருக்கும் படம் சிவாஜி."

- எஸ்.சந்திரமௌலி

படம் : ஸ்ரீஹரி

நகைச்சுவையின் மூன்றெழுத்து!




சிரிப்பு டாக்டர், முத்துராமன், கிழக்கு பதிப்பகம், 33/15, இரண்டாவது தளம், எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18, விலை ரூ.70/-

இன்று பார்த்தாலும் இவரது நகைச்சுவைத் திரைப்படங்கள் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும். இன்றைய சமுதாயச் சூழலுக்கும் பொருந்தும் கருத்துகள் இருக்கும். நடிப்புக்கு சிவாஜி, ஆக்ஷனுக்கு எம்.ஜி.ஆர். என்பதுபோல் நகைச்சுவைக்கான மூன்றெழுத்து என்.எஸ்.கே. என்று தாராளமாகச் சொல்லலாம். கலைவாணரின் வாழ்க்கையை சுவையாகச் சொல்லும் புத்தகம்.



என்றும் இருபது, பேராசிரியர் ம.வே. பசுபதி, வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.80/-

பக்திப் பாடல்கள், இலக்கியங்களில் கடவுளின் துதிகள் மட்டுமே இருப்பதில்லை. சமுதாயச் சிந்தனைகளும், வாழ்வியல் சிந்தனைகளும், மனிதர்களின் இயல்புகளும் உள்ளன என்கிறார் இந்நூலின் ஆசிரியர். அப்படிப்பட்ட சமுதாயச் சிந்தனைகளைச் சொல்லும் பக்தி இலக்கியங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.



போதிமரம், புவனகிரி செயபாலன், விஜய் பதிப்பகம், 7A / 18, பாளையக்காரத் தெரு, புவனகிரி - 608601. விலை ரூ.70/-

சிறுகதைத் தொகுப்பு. இந்நூலாசிரியர் பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கி தலைமை ஆசிரியராக உயர்ந்துள்ளார். இலக்கியத்திலும் அப்படித்தான். வாசகர் கடிதம், துணுக்குகள் எழுதத் தொடங்கி, இன்று சிறுகதை எழுத்தாளராகப் பரிணமித்துக் கொண்டிருக்கிறார். இத்தொகுப்பில் மொத்தம் பத்தொன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. எல்லாமே பிரபல பத்திரிகைகளில் வெளியானவை. கதைகளில் வட்டார மொழியை அழகாகக் கையாண்டுள்ளார்.

- அத்தியாயன்

தஞ்சை பரத்வாஜ்



மேஷம்: மதிப்பு பெருகும். தன மேன்மை உண்டாகும். புதிய பொருட் சேர்க்கை கைகொடுக்கும். கல்வி வளம் மேலோங்கும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வேலைப்பளு அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சி சற்றுத் தாமதமாகும். ராகு/கேது/சனி/குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

ரிஷபம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். திருமண காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பெயர் உண்டாகும். ராகு/கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

மிதுனம்: நல்ல வேலைவாய்ப்பைப் பெறுவீர்கள். மதிப்பும் மரியாதையும் கூடும். வாக்கு, தனம், கல்வி வளம் மேலோங்கும். சுபச் செலவு உண்டாகும். உடல்நிலை பாதிக்கப்படாது. உத்தியோகத்தில் நல்ல மேன்மை உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எதிர்ப்பு தொல்லை விலகும். வழக்கு முடிவுக்கு வரும்.

கடகம்: சுபநிகழ்ச்சிகள் நடக்கும். திருமணம் கைகூடும். வராத நிலுவைகள் வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குழந்தைகளைப் பற்றிய மனக்கவலை தீரும். கொடுக்கல்/ வாங்கலில் எச்சரிக்கை தேவை. ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: எதிலும் அலைச்சலுக்குப் பிறகு வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும். பொருளாதாரம் பலப்படும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போகவும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

கன்னி: புதிய தொழில் முறைகள் பலனளிக்கும். சுய மதிப்பு, மரியாதை மிகுந்து காண்பார்கள். நீண்ட காலம் முடிவு பெறாத வழக்கு விரைவில் முடிவுக்கு வரும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். குரு வழிபாடு நற்பலனை உண்டாக்கும்.

என் மகளுக்கு அரசு வேலை கிடைக்குமா? திருமணம் எப்போது நடைபெறும்?

- ஆறுமுகம், சூரம்பட்டி

உங்களுடைய மகளுக்கு 2008ல் அரசு வேலை கிடைக்கும். 24 வயதில் திருமணம் நடக்கும்.

என் மகளுக்கு நல்ல வரன் அமையுமா?

- ந. தர்மேசுவரன், மடிப்பாக்கம்

உங்கள் மகளுக்கு 2008ல் திருமணம் முடியும். நல்ல படித்த, பண்புள்ள வரன் அமையும்.

பரத்வாஜ் பதில்கள்

துலாம்: சுபகாரியம் கைகூடும். வீடு/மனை வழியில் ஆதாயம் கிட்டும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். சத்ரு தொல்லை ஒழியும். திருமண காரியம் கைகூடும். வராத கடன் வசூலாகும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

விருச்சிகம்: ஆடம்பரப் பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பாராத தனயோகம் பெறுவீர்கள். புதிய வியாபார முயற்சி பலன் அளிக்கும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். வேலையில் மாற்றம் ஏற்படும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

தனுசு: எதிர்பாராத தனம் கிடைக்கும். பெயர், புகழ், மதிப்பு, மரியாதை பெருகும். சுபகாரியம் கைகூடும். உடல்நிலை பாதிக்கப்படாது. வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். மறைமுக எதிர்ப்பு விலகும். வழக்கு வெற்றி பெறும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். சனி/குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம்: தன ப்ரஸ்தம் அளிக்கும். குடும்ப வாழ்வில் அனுசரித்துப் போவது நற்பலனை அளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். வழக்கு முடிவுக்கு வரும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கும்பம்: பல்வேறு வழிகளில் நற்பலன்களை அடைவீர்கள். வேலை மாற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வராத நிலுவைகள் வசூலாகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. ராகு/கேது/குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

மீனம்: வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவீர். திருமண காரியம் கைகூடும். உயர்கல்வி அமையும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். மனக் குழப்பம் தீரும். வேலையில் நற்பெயர் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும். ○

15.4.2007 முதல் 21.4.2007 வரை

மணி, மந்திரம், ஔஷதம்

புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வைரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், இவை ஒவ்வொன்றால் ஆன வெளிப் பிரகாரங்களை உடைய 'சிந்தாமணி கிருஹம்' என்ற அற்புதமான கோட்டையில் அம்பிகை தன்னை பாதுகாத்துக் கொள்ள வாசம் செய்கிறாள் என்று 'சௌந்தர்ய லஹரி' என்ற மந்திர சாஸ்திரமாக போற்றப்படும் நூலின் எட்டாவது பாடலில் கூறப்பட்டுள்ளது. தன்னை பாதுகாத்துக் கொள்ள தேவியே டன் கணக்கில் இரத்தினங்களை உபயோகிக்கிறாள் எனில் பாமரர்களாகிய நாமும் ஏன் அவற்றை உபயோகிக்கக் கூடாது?

எனது முப்பது வருட டாக்டர் தொழிலில், எந்த நோயாளிக்காவது ஆறு மாதத்திற்கு மேலாக வைத்தியம் செய்தும் பலனளிக்காத கேசுகளில் அவருக்கு ஏற்ற இரத்தினங்களை அணியச் செய்ததில் நல்ல குணம் கிடைத்தது. உதாரணமாக 2, 11, 20, 29 தேதிகளில் பிறந்தவர்கள் அல்லது பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை கூட்டி வரும் எண் 2 என்றாலும். தவிர, ஜூன் 21 - ஜூலை 20 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களும் 2-ம் எண்காரர் எனப்படுவர். இவர்களுக்கு அநேகமாக ஜீரணக் கோளாறுகள் இருக்கும். எந்த மருந்தும் பலனளிக்காது. ரூ.780 விலையுள்ள 'சைனீஸ் ஜேட்' என்ற இரத்தினத்தை அணிந்த பிறகு அவர்களது வயிறு நிரந்தரமாக குணமாகியது.

இதேபோல் 3, 12, 21, 30 தேதிகளில் பிறந்தவர்கள் (அல்லது பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டினால் மூன்று ஆக வந்தாலும்) தவிர பிப்ரவரி 20 - மார்ச் 20 அல்லது நவம்பர் 21 - டிசம்பர் 21 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களையும் 3-ம் எண்காரர் என்கிறோம். இவர்களுக்கு தலைவலி வந்தால் அது எந்த மருந்துக்கும் கட்டுப்படாது. 'எமிதிஸ்ட்' என்ற இரத்தினம் (ரூ.1500)அணிய தலைவலி இருந்த இடம் தெரியாமல் குணமாகி விடுவது பலரது அனுபவம்.

கான்சர் நோய் சீரியஸாகி சில வாரங்களே உயிர் வாழ்வாள் என்று சொல்லப்பட்ட ஒரு பெண்மணி வைடூரியம் (ரூ.3,800) மற்றும் மரகதம் (ரூ.4,600) அணிந்த பின்பு எழுந்து நடமாட ஆரம்பித்தாள். பவழம் (ரூ.2,800) அணிந்த பின்பு பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்தனர். வெண் பவழம் (ரூ.1,500) மற்றும் புஷ்பராகம் (ரூ.4,800) அணிந்து கொள்ள, சர்க்கரை வியாதி (டயபிடீஸ்) குறைந்தது. இதுபோல் தாமதமான பதவி உயர்வு கோர்ட் விவகாரம் சுமுகமாக முடிந்தது, தீராத வியாதிகள் குணமானது, நீண்ட நாட்களான பிரச்சினைகள் தீர்ந்தது போன்றவை நான் அனுபவத்தில் பார்த்துள்ளேன்.

நவரத்தினங்களை அணிந்து பலன் ஏதும் ஏற்படவில்லை என பலர் சொல்வதற்கு நகைக் கடையில் இரத்தினங்களை வாங்கி சக்தி செய்யாமல் அணிவதே காரணம். இரத்தினங்களை சக்தி செய்து அணிவது மிக அவசியம்.

மலச்சிக்கல் முத்து (ரூ.1,500) அணிந்த பிறகும் அலர்ஜி கோமேதகம் (ரூ.2,300) அணிந்த பிறகும் பல வருட தோல் வியாதிகள் பவழம், நீலம் (ரூ.4,800), லாபிஸ் லஸுலி (ரூ.480) அணிந்த பிறகும் குணமானது. கன்னிப்பெண்கள் பவழம் அணிய திருமணம் கைகூடியது. நீலக்கல் + புஷ்பராகம் + பவழம் அணிய, வியாபாரம் இலாபகரமாக நடைபெற்று வர தொடங்கியது.

செல்வராஜ் சங்கீதத்தில் புலமை உள்ளவர். ஆனால் சான்ஸ் ஏதும் கிடைப்பதாக இல்லை. 'அகேட்' (ரூ.1,200) என்ற இரத்தினம் அணிந்த பின் இன்று இலண்டன் நிலையத்தில் இசையமைப்பாளராக இருக்கிறார். அருண்குமார் நல்ல ஓவியர். ஆனால் ஒன்று கூட விற்கவில்லை. அகேட் அணிந்த ஆறே மாதத்தில் நிறைய விற்பனையாகி இன்று கார், பங்களா என்று இருக்கிறார். இராமசாமி நடத்தி வந்த லாரி சர்வீஸ் பலத்த நஷ்டம். காரணம் அடிக்கடி நடந்த லாரி விபத்து. 'டர்க்வாய்ஸ்' இரத்தினம் (ரூ.480) ஒவ்வொரு லாரியின் டீசல் டாங்க்-ல் போட அதன் பிறகு விபத்து நிகழவில்லை.

நமது வாழ்க்கைப் பிரச்சினை, ஏழ்மை நீங்க முதலில் 'மணி'யின் (இரத்தினங்களின்) உதவியை நாட வேண்டும். இது பலனளிக்காத பட்சத்தில் மட்டுமே மந்திரங்களை உச்சாடனம் செய்ய வேண்டும். இதுவும் பலனளிக்காத ஒரு சில கேசுகளில் மட்டுமே 'மருந்து' என நம் முன்னோர் "மணி, மந்திரம், ஔஷதம்" என வரிசைப் படுத்தி வைத்துள்ளனர்.

ஆம்! உலகில் உள்ள எல்லா நல்ல சக்திகளையும் (கடவுளின் பலம், சக்தி உட்பட) நவரத்தினக் கற்கள் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டுள்ளன. இவற்றை அணிய, நம்மிடம் உள்ள தேவையில்லாத சுபாவங்கள், மற்றவர்களுக்கு பிடிக்காத செயல், தன்னம்பிக்கையின்மை போன்ற தன்மைகள் உறிஞ்சப்பட்டு வெளியேற்றப்படுகின்றன.

2-3 லட்சத்திற்கு கார், வீடு வைத்திருப்பதால் நமது வருமானம் அதிகரிக்காது. இவற்றால் அடிக்கடி செலவு நிச்சயம் உண்டு. செலவு ஏதும் வைக்காமல் பண வரவு, சௌகர்யங்கள் ஆகியவற்றை (மறைமுகமாக) தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருப்பது இரத்தினக் கற்கள் மட்டுமே!

உங்களுக்கேற்ற இரத்தினம் பெற்றுக்கொள்ள ஜாதகம் அல்லது பிறந்த தேதியுடன் நேரில் (காலை 10 முதல் 5 மணி வரை மட்டும்) அணுகவும். கட்டணம் ரூ.200=00

Dr. V. கிருஷ்ணமூர்த்தி

ஞாயிறு, திங்கள்:
Raman House, Old No.21,
குப்பையா செட்டி தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 33.
Ph. : 6539 3214, 2489 0370

புதன், வியாழன், வெள்ளி:
Wednesday to Friday
402/41, 38th 'A' Cross
26th Main (Opp. to SBM)
Jayanagar - 9th Block,
Bangalore - 69
Ph. : 3292 2523, 2245 0969

எமது வெளியீடுகள் (தமிழ் புத்தகங்கள்)

வாழ்க்கைப் பிரச்சினைகள் நீங்க இங்கிலாந்து மலர் மருந்துகள் (பாகம் 1 to 17) ரூ.750=00

தியானம் செய்யும் முறை ... ... ரூ.70=00

சென்னை விலாசத்திற்கு M.O. செய்யவும். தபால் செலவு இலவசம். V.P.P. இல்லை.

Advt


“உஷ்..

“சத்தம் போடாதே!”

சத்தம் போடாதே! - நீண்ட இடைவெளிக்குப் பிறகு வஸந்த் இயக்கும் படம். பிருத்விராஜ் - பத்மப்ரியா நடிப்பில் வளர்ந்து வரும் இப்படத்தைக் குறித்த ஹைலைட்டை நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார் அப் படத்தின் இயக்குநர் வஸந்த்.

• இசையை மையமாக வைத்துச் சுழலும் கதை என்பதால் யுவனுக்கு இதில் ரொம்ப வேலை. மிகச் சிறப்பாகச் செய் திருக்கிறார்.

• இரண்டு பாடல்கள் இதமாக வந் திருக்கின்றன. காதல் பெரிதா, காமம் பெரிதா என்கிற சர்ச்சை நீண்ட காலமாகவே உண்டு. இந்தச் சூழலுக்கேற்ப நா.முத்துக்குமாரின் வரிகளைக் கேளுங்களேன்...

'தேக சாலையில்
நடந்துபோகையில்
காமம் பெரிது,
தேகம் என்பதைக்
கடந்துபோகையில்
காதல் பெரிது' என்று போகும் அந்தப் பாடல்.



இன்னொன்று தாமரை எழுதிய தாலாட்டுப் பாட்டு...

'ரசிக்கிறேன் ரசிக்கிறேன்
என்னை நீ உருட்டுவதை...
அரையடியில் அம்மணமாய்
என்னை நீ மிரட்டுவதை..'

இரண்டு பேரையுமே ரொம்பவும் கஷ்டப்படுத்தி வேலை வாங்கியிருக்கிறேன்.

• பத்மப்ரியாவைப் பற்றிச் சொல்ல வேண்டும். இதற்கு முந்தைய படங்களைவிட இதில் அவரது பெர்ஃபாமென்ஸ் மிக அருமை. கூடுதல் பலத்துடன் வருகிறார் பிருத்விராஜ். மலையாளக் கரை மனிதராக இருந்தாலும் இந்தப் படத்தின் மூலம் நிரந்தரமான இடமொன்றை தமிழ் ரசிகர்களிடம் பெறப் போகிறார். இணை இயக்குநர் மாதிரி என்னையே சுற்றிச் சுற்றி வந்து எப்போதும் படத்தைப் பற்றிய சிந்தனையிலேயே சுழன்று கொண்டிருப்பார்.

• மௌண்ட் கைலாஷ், கொச்சின் போன்ற இடங்களில் இதுவரை ரசிகர்கள் பார்த்தறியாத லொகேஷன்களில் பாடல்களைப் படம் பிடித்துப் பிரமாதப்படுத்தியிருக்கிறோம்.

• நித்தின் சத்யா என்பவரை இப் படத்தில் அறிமுகப் படுத்தியிருக்கிறேன். இவரும் நல்லவிதமாகப் பேசப்படுவார்.

• இப் படம் எனக்கு பல நல்ல அனுபவங்களைத் தந்திருக்கிறது. தமிழ் சினிமாவில் நல்லதொரு பதிவாக இப்படம் அமையும். ரசிகர்களின் ரசனையைத் துல்லியமாக அறிந்து, அதற்கேற்ப காட்சியமைப்புகளைப் பின்னியுள்ளோம். ஒவ்வொரு சீனும் உங்களை சீட் நுனிக்குக் கொண்டு வருவது நிச்சயம்.

-என்று பேசிக் கொண்டே போகும் வஸந்தை இடைமறித்து 'சரி, கதை என்ன?' என்றால், ரகசியமாக வருகிறது குரல்... ''உஷ்! சத்தம் போடாதே!''

- நிரஞ்சனா

நிரந்தர தங்கச் சுரங்கம்!

'டாஸ்'ஸால் பணம் கொட்ட, ஒரு வழியாக மைக்ரோசாஃப்டின் அடிப்படை இருப்பியல் பிரச்னைகள் தீர்ந்துவிட்டன. இனிமேல் அடுத்த மாதம் எல்லோருக்கும் சம்பளம் தருவது எப்படி என்றெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்காமல், சற்றே புதுமையான சில விஷயங்களை முயன்று பார்க்கலாம் என்று தீர்மானித்தார் பில் கேட்ஸ்.

அந்தக் கால கம்ப்யூட்டர்கள் எதை எடுத்துக்கொண்டாலும் கன்னங்கரேலென்று ஒரு திரை, அதில் ஊர்ந்து செல்லும் வெண்ணிற எழுத்துகள். கறுப்பு - வெள்ளைக்குப் பதில் சில நேரங்களில் பச்சைத் திரையில் எழுத்துகள் பளிச்சிட்டாலும், கம்ப்யூட்டரோடு பேச விரும்புகிறவர்கள் எல்லோரும் 'லொங்குலொங்'கென்று டைப் அடிப்பது கட்டாயம்.

இப்படிப் பயனாளர்கள் டைப் அடிக்கும் விஷயங்களைக் கட்டளைகள் (commands) என்று சொல்வார்கள். அவர்கள் இடுகிற, அதாவது, தட்டச்சு செய்கிற கட்டளைக்கேற்ப, கம்ப்யூட்டர் செயல்படும்.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட கம்ப்யூட்டரில் என்னென்ன விஷயங்கள் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ள விரும்பினால் 'dir' என்றோ, அதற்கு இணையான வேறொரு கட்டளையையோ திரையில் தட்ட வேண்டும். உடனே, அதற்குப் பதிலாக கம்ப்யூட்டர் தன்னிடமிருக்கும் கோப்புகளின் பட்டியலைத் திரையில் அச்சிட்டுக் காண்பிக்கும்.




உலகத்தை ஆக்ரமித்திருக்கும் விண்டோஸ், மைக்ரோசாஃப்டுக்கு ஒவ்வொரு விநாடியும் ஏகப்பட்ட டாலர்களைச் சம்பாதித்துக் கொடுத்தபடி இருக்கிறது.

இந்தப் பட்டியலில், நாம் நமது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்று இருக்கிறது. அதை இப்போது மீண்டும் படித்துப் பார்க்க விரும்புகிறோம். அதற்கும் ஒரு கட்டளை உண்டு. அதைத் தட்டியவுடன், கம்ப்யூட்டர் அந்தக் கடிதத்தைத் திரையில் விரிக்கிறது.

இப்போது, அந்தக் கடிதத்தில் சில மாற்றங்களைச் செய்ய விரும்புகிறோம். அதற்கும் சில கட்டளைகளைத் தட்ட வேண்டியிருக்கிறது. எல்லா மாற்றங்களையும் செய்து முடித்த பிறகு, அதை அச்சிட விரும்புகிறோம். இன்னொரு கட்டளை.

இப்படி ஒரு சின்ன வேலைக்குக்கூட இத்தனை கட்டளைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியிருந்ததால், பெரிய வேலைகளைப் பற்றியெல்லாம் யாராலும் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

பெரும்பாலானோர் இந்தக் கட்டளைகளையெல்லாம் மனப்பாடம் செய்து பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் உதவிக் கையேடுகளை வைத்துக்



முதல்வன்

14

கொண்டு பிட் அடித்து பாஸ் செய்ய வேண்டியிருந்தது.

இதையெல்லாம் கவனித்த கம்ப்யூட்டர் தயாரிப்பாளர்கள் ஒரு விஷயத்தை யோசித்தார்கள். இப்படிப்பட்ட சிரமங்களைக் கொஞ்சம் குறைத்து விட்டால், இப்போதைய கம்ப்யூட்டர் சந்தையை இன்னும் பல மடங்கு விரிவுபடுத்துவது சாத்தியம்.

கம்ப்யூட்டர்களுக்குக் கட்டளை வேண்டும். ஆனால், அவற்றைப் பயன்படுத்தும் மனிதர்களுக்கு இந்தக் குழப்பங்கள் வேண்டாம். இப்படியொரு தீர்வை எப்படி ஏற்படுத்துவது?

சவாலான இந்தக் கேள்விதான், அப்போதைய கம்ப்யூட்டர் நிபுணர்கள் பலரை உறுத்திக் கொண்டிருந்தது. எப்படியாவது கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்தும் வழிமுறையை மேலும் எளிமையாக்கிவிட்டால், அதைக் கொண்டு ஏகப்பட்ட பேரும் புகழும் பணமும் சம்பாதித்துவிடலாம் என்று ஏராளமானோர் மெனக்கெட்டனர்.

இந்தப் பரபரப்புகளெல்லாம் பில் கேட்ஸைக் கொஞ்சம் தாமதமாகத்தான் எட்டின. இதற்குள் 'டாஸ்' ஆபரேட்டிங் சிஸ்டத்தை வைத்து நன்றாகச் சம்பாதித்திருந்த அவர், அடுத்த கட்டமாக மேம்பட்ட, பயன்படுத்தச் சுலபமான ஓர் ஓ.எஸ். உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

டாஸ் ஓ.எஸ்.ஸில் இருக்கும் சகல வசதிகளும், இந்தப் புதிய ஆபரேட்டிங் சிஸ்டத்திலும் இருக்க வேண்டும். ஆனால், டாஸ் போல் கஷ்டப்பட்டுக் கட்டளை போடாமல், எல்லோரும் எளிதில் இயக்கும்படியான சவுகர்யங்களும் வேண்டும். அது எப்படி?

இந்தக் கேள்விக்கான விடையாகப் பிறந்ததுதான், மைக்ரோசாஃப்டின் நிரந்தர தங்கச் சுரங்கம், விண்டோஸ்!

(பில்) கேட்ஸ் - விண்டோஸ் என்கிற 'கதவு - ஜன்னல்' பெயர்ப் பொருத்தம் யதேச்சையானதுதானா என்று தெரியவில்லை. ஆனால், இந்த விண்டோஸ் இல்லாவிட்டால், அந்த கேட்ஸ் இல்லை என்பது உண்மை.

இன்றைய தேதிக்கு, உலகில் தொண்ணூறு சதவிகிதத்துக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர்கள் இந்த 'மைக்ரோசாஃப்ட் விண்டோஸ்' ஆபரேட்டிங் சிஸ்டத்தின் உபயத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

விண்டோஸ் மட்டும் இல்லாவிட்டால், தற்கால கம்ப்யூட்டர் உலகம் கை, கால், இதயம், மூளை என்று எதுவுமே இயங்காதபடி உறைந்துவிடும். அந்த அளவுக்கு நவீன டிஜிட்டல் உலகத்தை ஆக்கிரமித்திருக்கும் விண்டோஸ், மைக்ரோசாஃப்டுக்கு ஒவ்வொரு விநாடியும் ஏகப்பட்ட டாலர்களைச் சம்பாதித்துக் கொடுத்தபடி இருக்கிறது.

(தொடரும்)

என்.சொக்கன்

கைகளை ஊன்றி இருபுறமும் பார்த்துக்கொண்டு இருக்கையின் விளிம்பில் அமர்ந்திருந்தது. அவன் இருப்புக் கொள்ளாமையை எடுத்துக்காட்டியது.



ஜம்முவிலிருந்து போபால் பயணம். இது தான் வாழ்வில் நாம் காணப்போகும் நீள் பயணமோ என்று திடீரென விவேக்குக்கு ஒரு மலைப்பு! அலுவலக வேலையையொட்டி ஜம்மு போய்விட்டுத் திரும்புகையில், சண்டிகர் வரை காரில் வந்துவிட்டுப் பின்னர் விமானத்தில் டெல்லி, போபால் என்று வந்துவிடுங்கள் என நிர்வாகத் துறையில் கூறியபோது மறுத்துவிட்டான். ஓய்வும் உறக்கமுமாக இரயில் பயணமே சிறப்பாக இருக்கும். அதிக மாற்றங்கள் இராது என்று சொல்லி அவர்களையும் வியப்பில் ஆழ்த்தியிருந்தான்.

ஏன் அப்படிச் சொன்னோம் என்று இரயில் ஆட்டத்தில் நின்றபடி தன்னைத்தானே நொந்து கொண்டிருந்தான். இரண்டாம் வகுப்பு குளிர்சாதனப் பெட்டியில், காலையில் எழுந்து பல்துலக்க அதிக நேரம் காத்திருந்தபோது தான் அவனுக்குத் தலைக் குடைச்சல் தொடங்கியது. முகச் சவரம் முதல் முகம் கழுவுவதுவரை சாவதானமாகச் செய்துகொண்டு அவன் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தார்கள். குறைத்து வெட்டப்பட்ட தலை முடியும் விடிகாலைச் சுறுசுறுப்பும் அவர்கள் பட்டாளத்திலிருந்து விடுப்பில் செல்லும் ராணுவ வீரர்கள் என்று விவேக்கை அனுமானிக்க வைத்தன.

தன் கடன்களை ஒருவழியாக முடித்து வந்ததும்தான் விவேக் எதேச்சையாகப் பார்ப்பதுபோல் எதிர்ப்புறம் ஒரு நோட்டம் விட்டான். பட்டாளத்தான் ஒருவனின் நெற்றியில் பெரிய காயத்தின் வடு; அவன் கனத்த சரீரத்துக்கு அது ஒரு கடுமையைச் சேர்த்திருந்தது. கைகளை ஊன்றி இருபுறமும் பார்த்துக்கொண்டு இருக்கையின் விளிம்பில் அமர்ந்திருந்தது. அவன் இருப்புக் கொள்ளாமையை எடுத்துக் காட்டியது. வண்டி விரைவில் ஊர்போய்ச் சேர்ந்துவிடாதா என்ற ஏக்கமாக இருக்கலாம். ஒருவேளை நீண்ட நாட்கள் கழித்து விடுப்பில் ஊர் திரும்புபவனாக இருக்கலாம். சப்போட்டா பழங்களைத்



சிறப்புச் சிறுகதை

வசியம்

சீதாராம்

தின்றபடி கொட்டைகளை அவன் பெட்டியின் உன் புறமே போட்டு வந்தது வேறு விவேக்கிடம் சிறிது அருவருப்பை உருவாக்கியது. கழனியில் வேலை பார்க்கும் ஒருவன் கல்லூரியில் திடீரென கால் பதித்தாற்போன்று அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தாத தோற்றம்.

பட்டாளத்தானின் குறுகுறு பார்வையும் மெள்ள விவேக்கிடம் பதியத் தொடங்கியது. அதைச் சந்திக்க மனமில்லாத விவேக், மடிகணினியையும் செல்பேசியையும் எடுத்துக்கொண்டு வலைப்பின்னலில் மூழ்க முயன்றான்.

விவேக் முகத்தில் பெருமிதம் பரவியது. சுற்றியிருந்த அனைத்து ஜோடிக் கண்களும் அவனையே மொய்க்கத் தொடங்கின.

"உங்கள் விரல்கள் தட்டெழுத்தாகச் செலுத்தும் சில உத்தரவுகள் பிரமிக்கத்தக்க விளைவுகளைக் கணினியில் ஏற்படுத்தும் இல்லையா?"

குழந்தையைப் போல அப்பாவித்தனத்துடன் பட்டாளத்தான் விவேக்கிடம் உரையாடத் தொடங்கினான்.

பாலக்காடு என்று புரிந்தது. தன் பெயர் தம்பி என அறிமுகம் செய்துகொண்டவனிடம் தமிழிலேயே விவேக் பதிலளித்தான்.

"உண்மைதான்! உடல் உழைப்பு தருவதைவிட இந்த மன ஆதிக்கமும் மூளைத் திறனும் அதிக ஆற்றல் உள்ளவை! குறிப்பாக மென்பொருள் வேலையில் மூளையின் திறன் அதிகம் தேவைப்படுகிறது" சற்று கொடூரமாகப் பேசிவிட்டோமோ என்று முதலில் தோன்றியது - விவேக் மனத்தில். தம்பி தலையை அசைத்தான்.

"பதவி உயர உயர அதிக ஊதியமும் கிடைக்கும் இல்லையா...?"

கண்களை அகல அகல விரித்துக்கொண்டு தம்பி இன்னுமொரு தன் சந்தேகத்தை விவேக் முன் எடுத்து வைத்தான்.

விவேக் இதழோரம் ஓர் ஏளனச் சிரிப்பு.

"இருக்கலாம். பொறுப்புகளும் மன இறுக்கங்களும் அதைப்போல் அதிகம். உரிய நேரத்தில், சரியான தரத்தில் முடியாத வேலைகளுக்கு நிர்வாகத்துக்குப் பதில் கூறுவது என்பது சாதாரண விஷயமல்ல. அவர்கள் கேள்விகள் துப்பாக்கிக் குண்டுகளாய் நம் முன் பாயும்! ஒரு சிறு தவறும் நிகழக்கூடாது. இந்த ரயில்வே முன் பதிவெல்லாம்கூட கணினியின் உதவியால் நடை

“போன வருடம் போயிருந்தபோது, என் புதிய முகத்தைப் பார்த்துப் பக்கத்தில் வராமல் அழுதது என் குழந்தை. இந்த முறை குழந்தையை எப்படியாவது வசப்படுத்த வேண்டும்!”



பெறுகிறது என்பதை அனைவரும் அறிவார்கள். எங்கிருந்தோ செய்யும் பதிவில் ஒரு கோளாறு நடைபெற்றுவிட்டால் பயணிப்பவரின் மனநிலையை எண்ணிப் பாருங்கள்...!”

தம்பியின் உடலில் ஒரு சிலிர்ப்பு! துப்பாக்கி என்ற பெயரைக் கேட்டதனாலோ என்னவோ!

வண்டி ஏதோ ஒரு நிலையத்தில் நின்றது. பக்கவாட்டில் இருந்த வயது முதிர்ந்த பெண்மணி ஒரு கையில் மாத்திரையுடனும் இன்னொரு கையில் காலி தண்ணீர் பாட்டிலையும் வைத்துக் கொண்டு இருபுறமும் பார்த்தபடி சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்.

விருட்டென்று எழுந்த தம்பி, அவர் கையில் இருந்த பாட்டிலை வாங்கிக் கொண்டு இறங்கி ஓடினான். வண்டி புறப்படப் போகிறது என்று மற்றவர் கூக்குரலை அவன் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. வண்டி நகரத் தொடங்கியதும் பெண்மணி முகத்தில் பீதி அதிகரித்திருந்தது.

பின்பக்கமிருந்த இரயில் பெட்டியில் நீருடன் ஏறிக்கொண்டு ஒவ்வொரு பெட்டியாக மாறி மூச்சிரைக்க தம்பி வந்ததும்தான் அனைவர் முகங்களிலும் ஒரு மலர்ச்சி! விவேக்கும் தம்பியை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

“என்னால் மூளைக்கு அதிகம் வேலை தர இயலாது. இம்மாதிரி பணிகளில்தான் நாட்டம்” குழந்தையைப் போல, தம்பி விவேக்கிடம் உரைத்தான்.

தட்டுத் தடுமாறி ஏறி இரயில் பெட்டியில் கீழே துப்புரவு செய்து கொண்டு வந்தான் ஒரு முடவச் சிறுவன். முடவச் சிறுவனுக்கு உதவி செய்யும் வண்ணம் அனைவரது பெட்டிகளையும் தம்பி நகர்த்தி வைத்தான். அவன் செய்கை விவேக்குக்கு வினோதமாக இருந்தது.

பையன் வேலையை முடித்துவிட்டு காசு கேட்டபோதும் “சாரிடம் கேட்கக் கூடாது!” என்றபடி தம்பி அவனுக்கு விவேக்குக்கும் பணத்தைக் கொடுத்து அனுப்பியது விவேக்கை வெகுவாகச் சங்கடப்படுத்தியது.

தொழிலைப் பற்றி ஏதேதோ பேசி தம்பியிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உண்டு செய்துவிட்டோமோ என்று சிறிது வருத்தம் மேலிட்டது. தம்பியிடம் வேறு ஏதாவது பேசினாலென்ன என்று அவனுக்குத் தோன்றியது.

“நீங்கள் உங்கள் பெட்டியை நகர்த்தி மூடி வைக்கும்போது கவனித்தேன். கிலுகிலுப்பை முதல் சாவி கொடுத்து ஓட்டும் கார் முதல் நிறைய பொம்மைகள். விடுப்பில் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்வதாகத் தெரிகிறது. எத்தனை குழந்தைகள்?”

கடகடவென்று சத்தமாகச் சிரித்தான் தம்பி. மற்றவர்கள் இருப்பை அவன் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்று தோன்றியது.

அப்படி என்ன கேட்டுவிட்டேன் என்பதுபோல் புருவத்தை உயர்த்தினான் விவேக்.

“சாரே! தவறாக நினைக்க வேண்டாம். எனக்கு ஒரு குழந்தைதான். மூன்று வய

தாகப் போகிறது. போன வருடம் போயிருந்தபோது முதல் ஒரு வாரம் என் புதிய முகத்தைப் பார்த்து, பக்கத்தில் வராமல் அழுதது. இரண்டாவது வாரம் சிறிது சிரிக்கத் தொடங்கியது. ஆனால், தூக்க நெருங்கினால் பயந்து அழும். பொறுமையாகக் கையாள வேண்டியிருந்தது. மூன்றாவது வாரம் கையில் எதையாவது வைத்துக்கொண்டு அழைத்தால் வரத் தொடங்கியது. 'எல்லையில் பூசல்; உடனே வரவும்' என்று தகவல் வந்ததால் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு கடமை உணர்வோடு உடனே விரைய வேண்டியிருந்தது. இந்த முறை குழந்தையை எப்படியாவது விரைவில் வசப்படுத்த வேண்டும். அதற்குத்தான் எல்லா வகை பொம்மைகளையும் வாங்கிக்கொண்டு போகிறேன். என் மதியீனத்தை நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகிறது."

விவேக் மனத்தில் மறுபடியும் சங்கடம்.

கண்களை மூடியபடியே மௌனத்தில் ஆழ்ந்துவிட்ட தம்பியை மறுபடியும் ஆறுதலுடன் வினவினான்.

"குழந்தை ஞாபகம் வந்துவிட்டதா?"

"இல்லை சாரே! உயரே போகும்போது பொறுப்பு எவ்வளவு அதிகம் ஆகிறது என்று உங்கள் வார்த்தைகளை மறுபடியும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். போனமுறை விடுப்பின் நடுவில் கிளம்பி ஊடுருவலைத் தடுக்க மலைச் சிகர எல்லைப் பகுதிக்குப் போக வேண்டியிருந்தது. நள்ளிரவில் சரமாரியாகக் குண்டுகள் பாய்ந்துகொண்டிருக்கும்போது கீழே விழுந்துவிட்ட ஒரு சிப்பாயைக் காப்பாற்ற நான் முனைந்தேன். என்னைத் தடுத்துவிட்டு, பொறுப்புணர்ச்சியுடன் எங்கள் மேஜர் நடுவில் பாய்ந்து உயிரிழந்தார். எனக்கு நெற்றியில் ஒரு காயத்துடன் முடிந்ததே என்று சிறிது வருத்தம். நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் உங்களைப் போன்ற குடிமகன்களின் நலத்துக்காக உயிர்விடுவது மிகவும் பெருமைக்குரியது இல்லையா."

விவேக் நொந்தே போய் விட்டான்.

தம்பியின் பெருத்த சரீரம்தான் எவ்வளவு முறை இமயமலையின் பகுதிகளில் தோளிலும் கையிலும் கனத்துடன் பயணித்திருக்கும்? அந்தக் கைகள்தான் எத்தனை தடவை மூவர்ணக் கொடியை அவ்விடங்களில் பதித்திருக்கும்? மயிரிழையில் இறப்பு வரையும் பலமுறை எட்டிப் பார்த்திருக்கலாம்! போபால் வந்து சேரும்வரை அந்த மௌனம் நீடித்தது. விவேக்கிடமிருந்து பேச்சே எழவில்லை!

இறங்கும்போது தடுத்தும் கேளாமல் தம்பி விவேக்கின் பெட்டியைச் சுமந்து வந்து கீழே வைத்தான். முரட்டுத்தனமாக அவன் கையைக் குலுக்கி விடையும் பெற்றுக்கொண்டான்.

கைகளை விடுவித்துக்கொண்டு ஒருமுறை விரைப்பாக தம்பிக்கு விவேக் சல்யூட் அடிக்க, அவனைமறியாமல் கண்கள் கலங்கின. ●



"நள்ளிரவில் சரமாரியாகக் குண்டுகள் பாய்ந்துகொண்டிருக்கும்போது கீழே விழுந்துவிட்ட சிப்பாயைக் காப்பாற்ற நான் முனைந்தேன். ஆனால் உயிரிழந்தது எங்கள் மேஜர்!"



ஒவ்வோர் ஆசையும் ஒவ்வொரு மையத்தில் அலுத்துப் போகிறது. ஆனாலும் எந்த ஆசையுமே ஒரு வழியாக அற்றுப்போயும் விடாமல் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் 'விட்டேனா பார்' என்று மறுபடி படையெடுக்கிறது. ஆசையைப் பூர்த்தி பண்ணும் வஸ்துவின் அனுபோகம் ஜீவனுக்கு மீண்டும் மீண்டும் தேவைப்படுகிறது. அதற்கு அவன் அடிமையாகிவிடுகிறான், பிறகு துக்கப்படுகிறான்.

கவிதையிலே ரொம்ப ரசிப்பு, இலக்கியத்திலே ஈடுபாடு இருக்கிறவனுக்கு அவை உசந்த விஷயங்களாக எப்போதோதான் கிடைக்கின்றன. காமா சோமா, சுன்னா பின்னா ஆகியவைதான் நிறையக் கிடைக்கின்றன. இவனுக்கு படிக்க எடுக்கிற புத்தகம் எதுவும் திருப்தி தர மாட்டேன் என்றது. அதற்காகப் படிக்காமல் இருந்தாலும் dull ஆக, depressed ஆக இருக்கிறது. ஆசை உண்டாக்

ஆசை ஆசையாய்...

குகிற 'ஹாபிட்' என்கிற பழக்கதோஷத்தினால் இப்படியெல்லாம் துன்பம் என்பது ரேஸ் கோர்ஸ், கள்ளுக்கடை, சீட்டாட்டம், காபி க்ளப்தான் என்றில்லை; எதிலே ஆசை வைத்தாலும் அது ஒரே இழுப்பாக இழுத்து, அதிலே ரொம்ப ஆனந்தத்தைத் தந்த அனுபோகத்துக்காக மறுபடி மறுபடி தாகப்பட வைத்து, ஒருவனை வாட்டி எடுத்து விடுகிறது. உசந்த சங்கீதம் பிடித்தவனுக்கு உசந்த சங்கீதம், கிராமியக் கூச்சல் பிடித்தவனுக்கு அப்படிப்பட்ட கூச்சல், உசந்த லிட்ரேச்சர் பிடித்தவனுக்கு ரஸமான இலக்கியம், ஆபாசக் கூத்துப் பிடித்தவனுக்கு அந்த ஆபாசம், இட்லி சாம்பார் ப்ரியனுக்கு அந்த போஜ்யம் - இப்படி ஒவ்வொருவனும் எதிர்பார்ப்பது அவன் ஆசைப்படும் தர்த்துக்கு எப்போதும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் ஏமாற்றமும் துக்கமுமே ஏற்படுகின்றன. அந்த ஆசை இல்லாதிருந்தால் இந்தத் துக்கமும் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



காதலுக்காக ஒரு களவு

"திருநெல்வேலி ஜில்லா, சங்கரன் கோயில் தாலுகாவுல, மஞ்சநாயக்கன்பட்டின்ற ஊர்ல மாடப்பன்ற ஒரு சம்சாரி இருந்தார். அவரோட பொண்டாட்டி பேரு மாடியம்மான். அவங்களுக்கு ஒரே புள்ள. பேரு முத்துசாமி. அவன் வளர்ந்து வாலிபமானான்.

மாடப்பருக்குத் தங்கச்சி ஒருத்தி இருந்தா. அவ பேரு சங்கரம்மாள். அவளைப் பக்கத்துல இருக்கிற துங்கணாம் பட்டிங்கிற ஊர்ல, சின்ன நம்பிங்கிற மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுத்திருந்தாங்க. சங்கரம்மாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துச்சு. பொன்னம்மான்னு பேர். அவளும் வளர்ந்து பெரிய மனுஷியானாள்.

சங்கரம்மாளின் புருசங்காரன் சின்னநம்பி, களவு எடுக்கறதுல மகா கெட்டிக்காரன். ராவெல்லாம் களவுக்குத்தான் போவான். விடிஞ்சதும் நாலு மனுஷ மக்கள் கூட நல்லபிள்ளை கணக்கா வந்து உக்காந் துக்குவான். எங்க கள வாடப் போனாலும் பிடிபட மாட்டான்.

முத்துசாமி காட்டுல வேட்டையாடுறதையே தொழிலா வெச்சுக்கிட்டான்.

கழனியூரன்

நேர்மையா உழைச்சிச் சம்பாதிச்சிச் சாப்பிடுறவன். வீராதி வீரனா, சூராதி சூரனா, திக் விஜயனாத் திகழ்ந்தான்.

அத்தை சங்கரம்மாளைப் பார்க்கிற சாக்குல, அடிக்கடி துங்கணாம்பட்டிக்குப் போயி முறைப்பெண் பொன்னம்மாளைப் பார்த்துப் பேசிட்டு வந்தான்.

பொன்னம்மாளும், முத்துசாமியைத் தான் கட்டிக்கிடணும்னு நினைச்சாள்.

மாடப்பரும் மாடியம்மாளும் முறைப் படி முத்துசாமிக்குப் பெண் கேட்டு பொன்னம்மா வீட்டுக்குப் போனாங்க.

சங்கரம்மாளோட புருசன் சின்னநம்பி, "மச்சான், உம்ம பையனிடம் ஒரு களவு, திருடு இல்லை. நான் அடிக்கடி 'வேட்டை'க்குப் போய் என் மகளுக்கு வேண்டிய மட்டும் தங்க நகைகளைச் செஞ்சி போட்டிருக்கேன். மான் வேட்டையாடி மாடி வீடா கட்ட முடியும்? நாட்டுக்குள்ளயோ, கோட்டைக்குள்ளயோ புகுந்து ஒரு களவாவது எடுத்து ஜெயிச்சி வரச் சொல்லுங்க, அப்பத்தான் என் மகளை கட்டித் தருவேன்"னு சொல்லிட்டார்.

மாடப்பரும், மாடியம்மாளும் ஊருக்கு வந்து மகனிடம், அவன் மாமன் காரன் சொன்னதைச் சொன்னாங்க.

முத்துசாமி பொழுது சாயற நேரத்துல துங்கணாம்பட்டிக்குப் போனான். ஊர்க் கிணத்துல தண்ணி எடுக்க வந்த அத்தை மகள் பொன்னம்மாளைச் சந்திச்சி "என்ன உங்க ஐயா அப்படிச் சொல்லுதார். நீ என்ன சொல்லுத?"ன்னு கேட்டான்.

பொன்னம்மாளும், "என் ஐயன் ஆசப்படுதாருல்ல... ஒரே ஒரு களவு எடுங்க. எங்கய்யா, என்னை உங்களுக்குக் கட்டிக் கொடுத்திடுவாரு. அதுக்குப் பின்னால உங்க இஷ்டப்படி எப்படி வேணாலும் இருங்க"ன்னு ரொம்பச் செல்லமாச் சொன்னாள்.

"நீயே சொல்லிட்டே... அதனால, ஊரே மூக்குமேல விரலை வைக்கிற மாதிரி ஒரு பெரிய வேட்டையை முடிச்சிட்டு வாரேன் பாரு"ன்னு அவளிடம் சொல்லிட்டு ஊருக்கு வந்தான் முத்துசாமி.

அந்தக் காலத்துல திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், வடமலையப்ப ரோட பராமரிப்பில்தான் இருந்துச்சு. 'நெல்லையப்பர் கோயில் கருவறையில் இருக்கிற பொன் பொருளைக் களவாண்டாத்தான் தன் மாமனும், தன் காதலியும் மூக்கின் மேல் விரலை வைப்பாங்க'ன்னு நினைச்சான் முத்துசாமி.

அவன் நேரே நெல்லையப்பர் கோயிலுக்குப் போயி, நோட்டம் விட்டுட்டு வந்தான்.

களவுக்குப் போறதுக்கு முன்னால, காட்டுக்கு வேட்டைக்குப் போயி ஒரு உடும்பைப் பிடிச்சிக்கிட்டு வந்தான்.

அடுத்த நாள் களவு செய்யத் தேவையான ஆயுதங்களோட, உடும்பையும் ஒரு பெரிய தாம்புக்கயிறையும் எடுத்துக்கிட்டு திருநெல்வேலிக்குப் போனான். நடுச் சாமம்போல கயிறு கட்டப்பட்ட உடும்பை வடக்குக் கோட்டையின்



கயிறு கட்டப்பட்ட உடும்பு, கோட்டைச் சுவரின் உச்சியில் போய்ப் பிடிச்சிக்கிட்டு. மளமளவென ஏற ஆரம்பித்தான் முத்துசாமி.

தன் அத்தை மகன் தனக்காக உயிர் விட்டதை எண்ணி வருந்திய பொன்னம்மாள், பாம்புப் புத்துக்குள் கையை விட்டுவிட்டாள்!

உச்சிக்கு விட்டெறிஞ்சான். உடும்பு கோட்டைச் சுவரின் உச்சியில் போய்ப் பிடிச்சிக் கிட்டு. உடும்பின் வயிற்றில் கட்டி இருந்த கயிறு இப்ப கீழே தொங்குச்சி. அந்தக் கயித்தைப் பிடிச்சிக்கிட்டு மளமளன்னு வடக்கு வாசல் கோட்டைச் சுவரின் மேலே ஏறி கோயிலுக்குள் இறங்கினான். கோயில் கருவூல அறைக்குப்போய் பூட்டை உடைச்சான். களவு செஞ்சோம்ங்கிற அடையாளத்துக்காக, அதிலிருந்து ஒன்றிரண்டு வைர நகைகளை மட்டும் எடுத்துக்கிட்டுத் திரும்பும்போது, இருட்டில் தரையில் கிடந்த கோயில் மணியின் நாவில் கட்டிய கயிற்றைத் தெரியாமல் காலால் தட்டினான். உடனே கோயில் மணி அடித்தது.

மணிச் சத்தம் அர்த்த ராத்திரியில் கேட்டதால், கோயில் காவலர்கள் தடபுடன்னு எந்திரிச்சாங்க. சத்தம் கேட்ட திக்கைப் பார்த்துக் கையில் தீப் பந்தங்களோட ஓடி வந்தாங்க. முத்துசாமிக்கு என்ன செய்ய, ஏது செய்யறதுன்னே தெரியலை! கோயில் காவலர்களிடம் வசமா மாட்டிக்கிட்டான்.

கோயில் காவல்காரர்கள் முத்துசாமியைப் பிடிச்சி நாலு சாத்துச் சாத்தி கைகளை முதுகுப் பக்கமா இழுத்து வச்சிக் கட்டி, நேரே அவனைக் கோயில் நிர்வாகம் பார்க்கிற வடமலையப்பர் முன்னால கொண்டுபோய் நிப்பாட்டினாங்க.

மலையப்பர்கிட்ட காதலியின் சொல்லுக்காக களவாட வந்தேன்னு உண்மையை ஒத்துக்கிட்டான் முத்துசாமி.

''இவனைத் தாழையூத்து ஆவாரங் காட்டுக்குக் கொண்டுபோய் மாறுகால், மாறுகையை வெட்டி அவன் செத்த பிறகு அந்த இடத்துலயே புதைச்சிருங்க''ன்னு உத்தரவிட்டார் மலையப்பர்.

கோயில் காவல்காரர்கள் உத்தரவிட்டபடியே முத்துசாமியோட கதைய முடிச்சாங்க.

பொன்னம்மாள், தன் அத்தை மகன் தன்னைக் கட்டிக்கிடணும்ங்கிற ஒரே நோக்கத்துக்காகக் களவு செய்யப்போயி தன் உயிரையே கொடுத்துட்டாரேன்னு நினைச்சு பாம்புப் புத்துக்குள் தன் கையை விட்டாள். நல்ல பாம்பு தீண்ட, அந்த இடத்திலேயே மாண்டுட்டா.

ஒத்தக்கி ஒரு புள்ளை இப்படி அநியாயமா செத்துடுச்சேன்னு சேதியைக் கேட்ட ரெண்டு குடும்பங்களும் அரளி விதையை அரைச்சிக் குடிச்சி மாண்டனர்.

கால், கை வெட்டப்பட்டு செத்துப் போனதால முத்துசாமியை மக்கள் 'சப்பாணி முத்துசாமி'ன்னு கோயில் கட்டிக் கும்பிடுறாங்க''ன்னு சாமியின் வரலாற்றை ஒரு கதை போலச் சொன்னார் திருநெல்வேலி டவுனைச் சேர்ந்த தகவலாளர், ஓவியர் பொன்வள்ளி நாயகம்.

(தொடரும்)




''நல்லவேளை! கையில ஐம்பதாயிரம் இருந்ததால உயிர் பிழைச்சேன்.''

''அப்படியா! எப்படி?''

''கத்தியைக் காட்டிய திருடன் கிட்ட மட்டும் அதைத் தராம இருந்திருந்தா, என்னை காலி பண்ணியிருப்பானே.''

- வீ. விஷ்ணு குமார்



ஸ்ரீ :

ஸ்ரீ அஹோபில மடத்தின்
ஆஸ்தான பத்திரிகை



65 ஆண்டுகளாக ஆன்மீகப் பணியில்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

(தமிழ், ஆங்கில மாத இதழ்)

* ஜீயர் ஸ்வாமிகளின் அருளுரைகள்
* இதிகாஸ, புராணங்களின் விசேஷ கதைகள்
* திவ்யதேச எம்பெருமான்களின் பெருமைகள், வண்ணப்படங்கள்
* ஆசார்ய வைபவம்
* இந்த மாதம் உங்கள் நிலை
* மனம் மகிழும் மணப்பொருத்தம் அமைய திருமண விளம்பரங்கள்

மற்றும் சுவையான கட்டுரைகள், கதைகள்,
மகான்கள் செய்த அற்புதங்கள்.

ஒவ்வொருவர் இல்லத்திலும் மாதம்தோறும்
ஸ்ரீந்ருஸிம்மர் அனுக்ரஹம் பெற இன்றே சந்தா செலுத்துவீர்

ஆயுள் சந்தா	:	Rs.10,000/-	
ஆண்டு சந்தா - Tamil	:	Rs. 200/-	$ 50
ஆண்டு சந்தா - English	:	Rs. 250/-	$ 50
தனி இதழ் தமிழ்	:	Rs. 20/-	
ஆங்கிலம்	:	Rs. 25/-	

Publishers:
Sri Nrisimhapriya Trust,
30, Venkatesa Agraharam, Mylapore,
Chennai - 600 004. Phone: 044-24611540, 24614402
email:nrisimhapriya@vsnl.net

இராமாயணம், மஹாபாரதம், விஷ்ணுபுராணம், மற்றும் பல தனி வெளியீடுகளின் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்கள் நடிகராக மாறும்போதுகூட முதல் படத்திலேயே வெற்றி கிடைத்துவிடுகிறது. ஆனால், ஷாமிடம் மட்டும்தான் அது இன்னமும் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருக்கிறது. கடைசி ரீலில் கதாநாயகியைக் கைப்பிடிக்கும் கதாநாயகன்போல அந்த சுபவேளைக்காக ஒவ்வொரு தோல்வியையும் கடந்து வந்து கொண்டிருக்கிறார் ஷாம்.



"என் அப்பா, அண்ணன் தயாரிப்பாளர் இல்லையே!"

"**நா**ன் இப்போ கே.எஸ். அதியமான் இயக்கத்துல 'தூண்டில்'னு படம் பண்றேன். இதுதான் நான் கடைசியா பண்ற சாஃப்ட்டான படம். அடுத்து ஸ்நேகாவோட ஒரு படம், லீ சாலமனோட ஒரு படம்னு எல்லாமே ஆக்ஷன் படங்கள். 'ஷாமா இப்படி யெல்லாம் நடிக்கிறார்'னு எல்லோருக்கும் இன்ப அதிர்ச்சியா இருக்கப் போவுது. நாலு வருஷமா ஒரே கதைகளைப் பண்ணினது போதும்னு நினைக்கிறேன். இந்த மாற்றம் நிச்சயம் எனக்குத் திருப் பத்தை ஏற்படுத்தணும்" என்கிற ஷாமின் ஒரே வருத்தம், தன் விருப்பத்துக்குக் கதை தேர்வு செய்ய முடிவதில்லை என்பது தான்.

"என்னுடைய தொடர் தோல்விகளுக் குக் கதைகள்தான் காரணம். அதே சமயம் எனக்கு நல்ல நேரமும் அமையலை. பல நடிகர்களுக்கும் இப்படி நடந்திருக்கு. என் மீது எந்தத் தப்பும் இல்லை. இப்போ படத்தை ஓட வைக்கிற கதைதான் என்னோட உடனடித் தேவை.

எனக்கு சினிமா பேக்ரவுண்ட் கிடை யாது. என் அப்பாவோ, அண்ணனோ தயாரிப்பாளரா இருந்தா, என் விருப்

பத்துக்கேற்ப கதை, இயக்குநர், கதாநாயகி எல்லாம் தேர்வு செய்யலாம். அந்த பாக்கியம் எனக்கு இல்லை. இப்போ என்னைத் தேடி எந்த இயக்குநர் வர்றாரோ, எந்தக் கதை வருதோ, அதை வச்சுத்தான் படம் பண்ண முடியுது. ஓரேடியா கதையிலும் கைவைக்க முடியாது. ஆனாலும் கொடுத்த வேலையைச் சரியா செய்யறதால நான் தொடர்ந்து படங்கள் பண்ண முடியுது.

நான் என்னைக்கும் என்னை மட்டும் நம்பற ஆள். தனியாளா சினிமாவுல வாய்ப்புகள் தேடியவன். என் மனைவியும் எனக்குப் பக்கபலம். 12பிக்கு முன்னாடி நான் சினிமாவுல நீடிப்பேன்னு யாரும் நம்பலை. ஆனால், 'ஷாம் நீ ஜெயிப்பே'ன்னு இன்னைக்கும் என்னை விட அதிகமா நம்பிக்கை வைக்கிறது அவங்கதான். என் ரசிகர்களும், 'ஷாம் டைம்தான் சரியில்லை. மத்தபடி உங்ககிட்ட எந்தக் குறையும் இல்லை'ன்னு உற்சாகம் கொடுக்கிறாங்க'' என்கிற ஷாமுக்கு எந்தப் படங்களின் தோல்வியை விடவும் 'ஏய்... நீ ரொம்ப அழகா இருக்கே' தோல்விதான் இன்றைக்கும் தூங்கவிடாமல் செய்கிறது.

"நான் ரொம்ப ரொம்ப எதிர்பார்த்த ஒரு படம். கட்டாயம் கிடைச்சிருக்க வேண்டிய ஒரு வெற்றி, கடைசியில எல்லாரையும் ஏமாத்திருச்சு'' என்கிறவருக்கு 'உள்ளம் கேட்குமே'வின் வெற்றிதான் ஆறுதல் கொடுத்திருக்கிறது.

"அந்தப் படத்துல ஆர்யா, பூஜா, அசின் எல்லாரும் புதுமுகங்கள். அசின் தனக்குக் கொடுக்கப்பட்ட சின்ன கேரக்டரால ஏமாற்றத்துல இருந்தாங்க. என்கிட்டே 'ஷாம், நான் இதுக்கும் மேலே தகுதி உள்ளவ. நிச்சயம் தமிழ் சினிமாவுல என் திறமையைப் புரிஞ்சுக்கற நாள் வரும்'னு நம்பிக்கையா பேசினாங்க. எல்லாரையும் ஒன்றரை வருஷம் காக்க வச்சு கிடைச்ச வெற்றி அது. இயக்குநர் ஜீவாவோட அடுத்த படத்துல (உன்னாலே உன்னாலே) என்னால நடிக்க முடியலையேங்கிற வருத்தம் இப்பவும் உண்டு'' என்று கூறும் ஷாம், 'பருத்தி வீரன்' பற்றி இமைக்காமல் ஒருமணி நேரம் பேசுகிறார்.



"நான் ரொம்ப எதிர்பார்த்த ஒரு படம், கடைசியில எல்லாரையும் ஏமாத்திடுச்சு!"

"இப்படியொரு படம் தமிழ் சினிமாவிலான்னு இப்ப நினைச்சாலும் ஆச்சர்யமா இருக்கு. அமீர் மாதிரி மற்ற இயக்குநர்களும் புதுப் புது கதைகளோடு களம் இறங்குனா, ரசிகர்களுக்கும் செம விருந்தா இருக்கும். இப்ப தமிழ் சினிமாவுல வகைவகையா பன்னிரண்டு ஹீரோக்கள் இருக்கோம். ஆனா, விதவிதமான கதைகளுக்குத்தான் பஞ்சம்."

– ச.ந.கண்ணன்

ஷாம் வருத்தம்



இந்திய கிரிக்கெட் அணியின் உடனடித் தேவை என்ன?

ஜாக்கிசான் படங்களைக் காட்சிக்குக் காட்சி ரசிக்கும் சினிமா ரசிகன் போல, இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு பி.சி.சி.ஐயின் சமீபகால நடவடிக்கைகள் மிகப்பெரிய பொழுதுபோக்காக மாறியிருக்கின்றன.

'டெண்டுல்கர், சாப்பல் மீது கடும் தாக்குதல்' என்று செய்தியை அச்சுக்கு அனுப்புவதற்குள் 'நான் அப்படியெல்லாம் சொல்லவே இல்லை' என்று பின்வாங்குகிறார் லிட்டில் மாஸ்டர். சாப்பல் ராஜினாமா பற்றிய செய்தியைச் சேகரிப்பதற்குள், ரவிசாஸ்திரி டீம் மேனேஜர். சாப்பலுக்கு வழியனுப்பு விழா நடத்தலாம் என்றால், இந்திய கிரிக்கெட் அகாடமியை கவனித்துக்கொள்ள அவருக்குப் புது அழைப்பு. ஆண்டனி எடிட்டிங் போல மின்னல் வேகத்தில் காட்சி மாற்றங்கள்.

விஷயத்துக்கு வருவோம். டிராவிட் மீண்டும் கேப்டன். ரவிசாஸ்திரி டீம் மேனேஜர், வெங்கடேஷ் பிரசாத் பவுலிங் கோச், ராபின்சிங் ஃபீல்டிங் கோச் என்று ஐ.சி.யு.வில் கிடக்கும் நோயாளிக்கு மாப்பிள்ளை வேஷம் போட்டிருக்கிறது பி.சி.சி.ஐ. இதனோடு யாரும் தலைபோகிற விஷயங்களில் ஒத்துப்போக வேண்டியதில்லை. சில்லறை விஷயங்களில் ஒத்துப்போய்விட்டால் போதும். கௌரவமான பதவிகளைப் பற்றிக்கொள்ளலாம்.

வருந்தியழைத்ததன் பேரில் இந்திய அணியோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார் ரவிசாஸ்திரி. அடைமழை சமயம் கிடைத்திருக்கும் குடை. வசீகரிக்கும் குரலில் கமெண்டரி கொடுத்து, கூடவே என்னென்ன செய்தால் எதிரணியைச் சுருட்டலாம் என்கிற இலவச ஆலோசனைகளை ஈ.எஸ்.பி.என். வழியாக வழங்கிக் கொண்டிருந்தவர். வெறும் வாயால் அவல் மெல்லக் கூடியவரா என்பதை பங்களாதேஷ், இங்கிலாந்து டூர்கள் காட்டிக் கொடுத்துவிடும்.

வழக்கு கிழக்கு, வம்பு தும்பு என்றால் ஒதுங்கி நிற்கக்கூடியவர் டிராவிட். மெச்சிக்கொள்ளும்படியாக வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடர் வெற்றி மட்டும். கேப்டன் பாத்திரத்தை இட்டு நிரப்பச் சரியான நபர் அணியில் கிடையாது. இங்குதான் ஒழுங்காக ஆடக்கூடிய பதினோரு பேருக்கே ததிங்கிணத்தோம் போட வேண்டியிருக்கிறதே! சொடக்குப் போட்டவுடனா கேப்டன் கிடைக்கப் போகிறார்!

வருடத்துக்கு மூன்று விளம்பரங்களில் மட்டுமே நடிக்க வேண்டும் என்கிற விதிமுறையின் ஆயுள் எத்தனை நாளோ? நாளை ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் ஒருவேளை இந்தியாவிடம் மண்டியிடும்படியான சூழல் வந்தால், இந்திய வீரர்கள் நட்சத்திரம் பறித்துத் தரச் சொன்னாலும் சரத்பவார் செய்து கொடுப்பார்.


உப்புத் தின்றவர்கள் தண்ணீர் குடிக்க வேண்டும்தான். அதற்காக எல்லோருக்கும் ஒரே சம்பளமா என்கிற புகைச்சல் உள்ளுக்குள் தீயை மூட்டியிருக்கிறது. தினேஷ் கார்த்திக்கும் டெண்டுல்கருக்கும் ஒரே சம்பளம் என்பதை தினேஷின் வீட்டிலேயே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

டிராவிடின் கருணை தப்பாமல் கிடைத்ததன் பலன், வெங்கடேஷ் பிரசாத் பௌலிங் கோச். ஆடுகிற காலத்தில் எப்போது ட்ராப் ஆவார் என்கிற எதிர்பார்ப்பை எல்லா நாளும் உண்டு பண்ணியவர். நூறு டெஸ்ட் விக்கெட்டுகள்கூட எடுத்ததில்லை (அகர்கரும் வெங்கடேஷ் பிரசாத்தும் ஒன்றாக ஆடியவர்கள்). பத்தொன்பது வயது இந்திய அணியை உலகக் கோப்பை ஃபைனல் வரைக்கும் கொண்டு சென்றதுதான் அண்ணாருடைய ஒரே சாதனை.

'ஒரு பந்தை எப்படிச் சரியாகத் தூக்கி எறிவது என்பதை ஒரு பேஸ்பால் கோச்சிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். பேஸ்பால் விளையாட்டிலிருந்து கிரிக்கெட்டுக்கு நிறைய தொழில்நுட்ப அறிவுகள் கிடைக்கின்றன' என்கிறார் தென் ஆப்பிரிக்காவின் ஃபீல்டிங் கோச் ஜான்டி ரோட்ஸ். இந்திய அணிக்கும் முதன்முறையாக ஃபீல்டிங் கோச். அதாவது ரன்கள் கோட்டை விட்ட பிறகு கோச் நமஸ்காரம். தளர்ந்து கிடக்கும் கால்களை ராபின் சிங் எப்படி விரட்டப் போகிறார் என்பது உண்மையிலேயே சுவாரஸ்யத்தை உண்டு பண்ணுகிறது.

கடந்த சில மாதங்களாக ரசிகர்களுக்குப் பட்டினிப் பழக்கம் ஏற்படுத்தியிருக்கிறது இந்திய அணி. படையல் விருந்து மட்டும்தான் ஒரே கைமாறு. ஜாக்கிசான் படங்களில் அழுத்தமான கதை இருக்காது. ஆனால், உயிரைப் பணயம் வைத்து நடித்துக் கொடுப்பார் ஜாக்கிசான். அதற்கு வேண்டிய மாலை, மரியாதையை ரசிகர்களும் அளித்தார்கள். இந்திய அணிக்கு உடனடி தேவை ஜாக்கிசான்கள். குமாஸ்தா மாற்றங்கள் அல்ல.

- **ச.ந.கண்ணன்**



குப்பியும்

"லஜ்ஜா பாட்டி, தூக்கம் வரல... வடை சுட்ட கதை வேணாம்... நல்ல சினிமா கதை ஏதாச்சும் சொல்லு!"

"என்னடா இப்படிக் கேக்குற... இந்தக் காலத்துப் பசங்க ரொம்பத் தேறிட்டீங்கடா. சிவாஜி, பத்மினி நடிச்ச 'தில்லானா மோகனாம்பாள்' கதை சொல்லட்டா?"

"அந்தப் பழைய பஞ்சாங்கமே வேணாம்... ரஜினியோட 'சிவாஜி' கதை தெரிஞ்சா சொல்லு."

"அது தயாரிப்பாளர் சரவணன் சாருக்கே தெரியாதாமேடா... வேணும்னா 'குப்பி' பத்தி சொல்றேன், கேக்கறியா?"

"சரி, சொல்லு."

"நம்ம ராஜீவ்காந்தியக் கொன்னாங்களே சிவராசன் குரூப்... அதுல கற்பனை கலந்தா குப்பி. தமிழ்நாட்டுலேர்ந்து சிவராசன் டீம் தப்பி ஓடறதும், அவங்களைப் பிடிக்க போலீஸ் மெனக்கெடறதும், கடைசியில அவங்க சயனைட் சாப்பிட்டுத் தற்கொலை செஞ்சுக்கறதும்தான் கதை. சஸ்பென்ஸ் வச்சு துள்ளத் துடிக்கச் சொல்லியிருக்காங்க. ரவிகாளைங்கறவர்தான் சிவராசனா நடிச்சு தூள் பரத்தியிருக்காரு. சுபாவா மாளவிகா ரகளை பண்ணியிருக்காங்க. போலீஸ் ஆபீசரா வர்ற நாசர், தாரான்னு எல்லாரும் நல்லாவே செஞ்சிருக்காங்க."



மாளவிகா ரகளை பண்ணியிருக்காங்க!

"டெக்னீஷியன்ஸ் பத்திச் சொல்லு பாட்டி."

"சொன்னா உனக்குத் தெரிஞ்சிடப் போகுதாக்கும்."

"என்ன பாட்டி இப்படிச் சொல்லிட்ட... இந்தப் படத்தோட டைரக்டர் ரமேஷ்தானே... எனக்கும் தெரியும்!"

"அசத்திட்டடா கண்ணா. ரமேஷ் விறுவிறுப்பா படத்தை இயக்கியிருக்கார். ரத்னவேலுவோட கேமரா தூள். சந்தீப் சௌதாவோட இசை மிரட்டுது."

"குப்பி ஓகே. நல்ல கலர்ஃபுல் சினிமா ஒண்ணைப் பத்திச் சொல்லேன்."

கூடல் நகரும்

“பரத் டபுள் ஆக்ஷன் பண்ணியிருக்குற ‘கூடல்நகர்’ பத்திச் சொல்லட்டா?”

“என்னது பரத் டபுள் ரோலா? எதிர்பார்ப்பு கூடுதே பாட்டி.”

“ஏமாத்தாம தனக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்கள நிறைவா செஞ்சிருக்காரு பரத். ரெண்டு ஜோடிங்க பாவனா, சந்தியான்னு.”

“இவங்களப் பத்தி நான் ஏதாவது சொன்னா, ஓவரா பேசுறேன்னு திட்டுவ... நீயே சொல்லிடு...”

“பாந்தம்னா பாவனான்னு அர்த்தம் பண்ணிக்கலாம். அவரோட முடிவு உருக்கமானது. சந்தியா நல்ல துறுதுறு. எல்லார்கிட்டயும் நகை கடன் வாங்கிப் போட்டுக்கிட்டு கல்யாணத்துக்கு வந்துபோறது சுகமான சோகம். இளவரசு காமெடி இதம்.”



பாந்தம்னா பாவனான்னு அர்த்தம்!

“சரி, கதை எப்படி? தேறுதா?”

“ம்... பரவால்ல... அண்ணனுக்காகத் தம்பி பொங்கி எழுற கதைதான். காதல், மோதல்னு கலந்துகட்டிச் சொல்லியிருக்காங்க.”

“எம்.எஸ்.பிரபுவோட ஒளிப்பதிவு எப்படி?”

“பேப்பர்ல பார்த்து பேரு தெரிஞ்சுக்கிட்டியா? மனசை அள்ளுது கிராமத்துக் காட்சிங்க. சபேஷ் முரளியோட இசையில் பாடல்கள் பிரமாதம். பின்னணி இசையிலயும் குறை வைக்கல.”

“சீனு ராமசாமி?”

“அவருக்கு இது மொதல் படம். சோடை போகல. இரண்டாவது பாதிக்கு மேலும் காதலே படத்தை ஆக்ரமிச்சிருக்கறதைத் தவிர்த்திருக்கலாம். ‘வெயில்’ சாயல் தென்படறதை மறுக்கறதுக்கில்ல.”

“சரிசரி, அடுத்த படம்?”

“வாயை மூடுடா... போதும் சினிமா! ரொம்பப் பேசினா கொடுத்துடுவேன் எனிமா!”

“சரி வுடுப்பா. மேட்டரு இதான். வேலைய நிறுத்தணும். மேலிடத்து உத்தரவு. மீறி செஞ்சிங்கன்னா, இன்னொருதபா சும்மா இருக்க மாட்டோம். டேய். வாங்கடா...”

அவர்கள் போய்விட்டார்கள். ஆற்றங்கரையில் குப்பத்து இளைஞர்கள் மட்டும் நின்றுகொண்டிருந்தார்கள். அதிர்ச்சி கலந்த வியப்பு. பதற்றம் கலந்த கவலை. கோபம் கலந்த குழப்பம். என்றைக்கோ, யார் முயற்சியாலோ அந்தப் பிராந்தியத்தின் குப்பைகளைச் சேகரிக்கக் கொண்டுவந்து போடப்பட்ட குப்பைத் தொட்டிக்குள்ளிருந்து நாயொன்று தலைநீட்டி எட்டிப் பார்த்து ‘வழ்ழ்’ என்றது. குப்பைகள் தொட்டியை மீறத் தொடங்கும்போது, தொட்டிகள் நாய்களின் இல்லங்களாகி விடுகின்றன. கூச்சலில் அமைதி குலைக்கப்படும்போது தொட்டிவாசிகள் கோபம் கொண்டு விடுகிறார்கள்.

“இன்னாடா ஆச்சு, உனக்கு? சுயபுத்தியோடதான் இருக்கியா? இல்ல சரக்கேத்திக்கினு வண்ட்டியா?” சடாரென்று கோபத்துடன் நெருங்கி, கொத்தாகச் சட்டையைப் பற்றிய நண்பனை சிரமப்பட்டுத்தான் விலக்க முடிந்தது முத்துராமனால்.

“ஏண்டா, உனுக்கு அறிவில்ல? யாருடா அவனுங்க? எத்தினி பேரு? நாம எத்தினி பேரு? போட்டுத்தள்ள எம்மா நேரம் ஆவும்? பெருசா சமாதானம் பேசிக்கினு கீற? கேட்டா, நம்மாளுங்களையே மொறைக்கற? அவனுக எதிர்ல நமக்குள்ள தகராறு வாணான்னுதான் சொம்மா இருந்தோம். இல்லேன்னா மவனே, உனக்கும் சேத்து வுழுந்திருக்கும்!”



"அடச்சே, சொம்மா கெட!" என்று சீறினான் முத்துராமன்.

"போடு! போட்டுத் தள்ளு! உள்ள தள்னான்னா ங்கொப்பன் தாவு தீந்துரும். இன்னாத்துக்குடா வீண் வம்பு நமக்கு? அவனுங்க யாரு, என்னான்னு தெரியல. தலைவராண்ட சொன்னா, அவரு பாத்துக்கறாரு. அத்த விட்டுட்டு அவன் அடிக்க வந்தான்னு நீயும் திருப்பி அடிச்சேன்னா யாருக்குடா நஷ்டம்?"

கூட்டம் சற்று யோசித்தது.

கொசு

பா.ராகவன்

அரசியலில் பயில வேண்டிய முதல் பாடம் இதுதானா? எதனாலும் பாதிக்கப் படாமலிருப்பது? எருமை மாட்டுத் தோலை இதயத்துக்கு அளிப்பது?



15

"இருந்து இருந்து ஒருத்தன் நம்ம குப்பத்துக்கு நல்லது பண்றேன்னு வாறான். அதைக் கெடுக்கணும்னு ஒருத்தன் வாறான். நமக்குக் காரியம் பெருசா? வீரியம் பெருசா? ஆமாடா. நீ பெரிய வீரன்தான். ஒப்புக்குறேன். இப்ப என்னா? யாரயானா அடிக்கணும். போட்டுத் தள்ளணும். அவ்ளோதானே? இந்தா... நான் நிக்கறேன். அடி! அடிங்கடா!"

உரத்த குரலில் முத்துராமன் வெடித்தபோது அவர்கள் சற்றுப் பின்வாங்கினார்கள். முத்துராமனுக்கு உள்ளுக்குள் வியப்பு கூடிக்கொண்டே போனது. இதற்கு முன் இப்படிப் பேசியதில்லை. இப்படி நடந்துகொண்டதில்லை.

திடீரென்று தன் இருப்பின் அர்த்தமும் தன்மையும் மாறிவிட்டனவா என்ன? வலுக்கட்டாயமாக மாற்ற விரும்புகிறோமா?

யோசித்துப் பார்த்தால், உண்மையில் யார் மீதும் அவனுக்குக் கோபமில்லை. சூழ்நிலையின் பதற்றம் அவனைத் தொடவேயில்லை. பழைய முத்துராமனாக இருந்திருந்தால், இப்படி முன்பின் தெரியாத நாலு பேர் தாக்க வந்தது தெரிந்தால், கொதித்துக் குமுறியிருப்பான். இப்போது எப்படியோ ஓர் அமைதி வந்து குடிபுகுந்துவிட்டது. எப்படி இது, எப்படி இது... என்று உள்ளுக்குள் இன்னொரு மனிதன் வியந்துகொண்டே இருந்தான்.

அரசியலில் பயில வேண்டிய முதல் பாடம் இதுதானா? எதனாலும் பாதிக்கப்படாமலிருப்பது? எருமை மாட்டுத் தோலை இதயத்துக்கு அளிப்பது?

அப்படியும் தெரியவில்லை. தன் தனிப்பட்ட வளர்ச்சிக்கு இந்தச் சம்பவம் இடையூறாக இருந்துவிடக் கூடாது என்கிற முன் ஜாக்கிரதைதான் காரணம் என்றும் அவனுக்குத் தோன்றியது. நேற்று வரை இல்லாத சமூக அக்கறை திடீரென்று தலை

வருக்கு முளைத்ததன் காரணமே சுயநலம்தான் அல்லவா? எம்.பி. சீட் அல்லது எம்.எல்.ஏ. சீட். பொருளுக்குரிய விலையாகத்தான் அவர் இந்தச் சிரமைப்புப் பணியை நினைத்தார். ஒளிவு மறைவு ஏதுமில்லை. தன்னிடமே வெளிப்படையாகத்தானே சொன்னார்! அப்புறமென்ன?

சொல்வதற்கில்லை. இம்மாதிரி இன்னும் நாலைந்து குப்பங்களைக்கூட அவர் தத்தெடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கலாம். அரசியலில் எதுவும் சகஜம். எல்லாமே சகஜம். நல்லதும்

போக நினைக்கும் உயரங்களுக்குப் பொருத்தமில்லாத தொகை. வைத்துக்கொண்டு நாக்கு வழிக்கக்கூட முடியாது. இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பும் வட்டச் செயலாளர் சிங்காரம் அண்ணன் அழைத்ததில் ஆரம்பித்தது. நினைத்துப் பார்த்திராத வேகத்தில் எம்.எல்.ஏ. அழைத்துவிட்டார். பேட்டையில் விஷயம் பரவிவிட்டது. முத்துராமனுக்குத் தனியொரு அந்தஸ்து உருவாகியிருந்தது. தலைவர்களுடன் நெருக்கமானவன். கூப்பிட்டு ஏதோ பேசுகிறார்கள். சாட்சிக்கு ஒரு சமூக நலப்பணி ஆரம்பமாகியிருக்கிறது. போதாது?

"த பாருங்கடா... எனக்கு ஒண்ணுமில்ல. இத்தினி வருசமா கஸ்டப்பட்டுக்கிட்டு இருந்துட்டோம். ஏதோ சாமியே பாத்து அனுப்பி வெச்ச மாதிரி தலைவரு கூப்ட்டு அனுப்பி காசக் குடுத்து, குப்பத்த நோாக்குன்னு சொல்லி அனுப்பியிருக்காரு. எவனோ களவாணிப் பயலுக வம்பு பண்ண வர்றானுங்கன்னா, மொறையா நாம அத எப்பிடி தடுக்கணுமோ அப்பிடித் தடுக்கணும். அத்தவுட்டுட்டு திருப்பி அடிக்கறேன், போட்டுத் தள்றேன்னு எறங்கினா

ஐந்து விஷயங்கள்!

தெலுங்கில் வெளியாகி சக்கைப் போடு போட்டு, மகேஷ்பாபுவுக்கு மகத்தான ஓர் இடத்தைப் பிடித்துக் கொடுத்த படம் 'அத்தடு'! இப்படம் தமிழில் 'நந்து' என்கிற பெயரில் தயாரிக்கப்படுகிறது. டீம் விஷன்ஸ் பட நிறுவனம் சார்பில் இருபது கோடி செலவில் ரெடியாகும் இப்படத்தைத் தயாரிப்பவர் எஸ்.வி.சோலைராஜா. நந்துவின் பிரம்மாண்டங்களாக இவர் கூறுபவை ஐந்து விஷயங்கள்:

- இந்திய அளவில் இப்படியொரு படம் வந்ததில்லை என்று முன்னணி டெக்னீஷியன்களே வியந்துபோகுமளவுக்கு எடுக்கப்பட்டிருக்கும் மிரட்டலான காட்சிகள்.
- ஹைதராபாத்தில் ஒரு கோடி செலவில் போடப்பட்ட கிறிஸ்தவ ஆலயம் செட்டில், முப்பத்தொரு நாட்கள் படமாக்கப்பட்ட 'நந்து' க்ளைமேக்ஸ் சீன்.
- மணிசர்மாவின் இசையில் இந்த ஆண்டின் சூப்பர் ஹிட் வரிசையில் இடம் பிடிக்கப் போகும் ஆறு அசத்தல் பாடல்கள்.
- 'இப்படிக்கூட ஸ்டைலிஷான ஒரு ஹீரோவைப் பார்க்க முடியுமா?' என்று அனைவரும் வியந்துபோகும் வண்ணம் துடிப்பான இளைஞராக வலம் வரும்

கெட்டதும் அன்பும் காழ்ப்பும் தழுவுதலும் தழுவிய கரத்தால் குத்துதலும்.

இந்த சூட்சுமம் தனக்குப் புரிந்துவிட்டதாக முத்துராமனுக்குத் தோன்றியது. சந்தோஷமாக இருந்தது. சாதுவாக, நல்லவனாக இருந்து சாதித்தது அதிகமொன்றுமில்லை. தையல் மிஷின் அடித்து மாதம் இரண்டாயிரம். கட்சி வேலை பார்த்து இன்னும் இரண்டாயிரம். அவ்வளவு தான்.

வேலையும் கெடும்; பேரும் கெடும். நாளைக்கி இன்னொருத்தன் இந்தப் பக்கம் ஓட்டு கேக்கக்கூட வரமாட்டான். 'நாசமாப் போங்கடா'ன்னு போய்க்கினே இருப்பான். மொத்தம் எத்தினி ஓட்டு? நாத்தம்பது தேறுமா? அத்த கள்ள வோட்டா போட்டுக்கிட்டுப் போவுறதுக்கு எம்மா நேரம் ஆவும்? யோசிச்சி வேலை செய்ங்க. அவ்ளோதான் சொல்வேன்!"

எச்சரிக்கும் விதத்தில் பேசிவிட்டு அவன் திரும்பி நடந்தபோது "முத்து... டேய் நில்லுடா... நில்லுடாங்கறேன்ல... டேய்... மன்னிச்சிருடா... போவாத... போவாதடா..."

பின்னால் வந்த கூட்டத்தைத் திரும்பாமலேயே மானசீகமாக அவன் உணர்ந்தான். சடாரென்று முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது 'கடவுளே! உனக்கு எப்படி நன்றி சொல்வேன்? இதையல்லவா இத்தனை காலமாக

என்னவென்று புரியாமல் எதிர்பார்த்திருந்தேன்?

எல்லோருமே தெரிந்தவர்கள்தான். எல்லோருமே நண்பர்கள்தான். ஆனால் இப்போது பின்னால் வரும் தோரணை வேறாக அல்லவா தெரிகிறது. தலைவரின் பின்னால் திரளும் தொண்டர்களைப் போல!

'அப்படி என்றால் நான் தலைவராகி விட்டேனா?' நினைக்கவே அவனுக்குச் சிலிர்ப்பாக இருந்தது. அழுகை வந்தது. ஓடிப்போய் அம்மாவிடம் சொல்லி கையைப் பிடித்துத் தரதர வென்று இழுத்துக்கொண்டு



கடும்பாடி அம்மன் கோயிலுக்குப் போய் அங்கப்பிரதட்சணம் செய்ய வேண்டுமென்று தோன்றியது. அடக்கிக் கொண்டான்.

"நில்லுடாங்கறோம்ல?"

உரிமையில் எழும் ஓங்கிய குரல். அதுவும் அவனுக்குப் புரிந்தது. நின்றான்; திரும்பினான்.

''மன்னிச்சிட்டேன்னு சொல்லு. இதான் லாஸ்டு. இனிமேப்பட்டு நீ சொல்லாம எதையும் செய்ய மாட்டோம்.''

''சீ போடா... போய் வேலையப் பாருங்க.''

அவர்கள் தயங்கினார்கள். ''திரும்ப வந்தானுங்கன்னா?''

''வரமாட்டானுங்க''

''எப்படிச் சொல்ற?''

முத்துராமன் யோசித்தான். எப்படிச் சொல்கிறோம்? ஏதாவது செய்ய வேண்டும் என்கிற உத்தேசம் இருந்தது. ஆனால், என்ன செய்வதென்று தெரியவில்லை. சிங்காரண்ணன் ஊரில் இல்லை. வெளியூர் சென்றிருக்கிறார். அதனாலென்ன? எம்.எல்.ஏ.விடமே சென்று விஷயத்தைச் சொல்லலாம். யாரோ வந்து காரியத்தைக் கெடுக்கிறார்கள் என்று அப்பாவியாகப் பேசலாம். அவர்தான் ஏவியவர் என்று தெரிய வந்தால், அதற்கேற்ப அடுத்த காயை நகர்த்திக்கொள்ளலாம். நாளைக்கு வட்டம் ஊர் திரும்பி என்ன, ஏது என்று விசாரித்தால், வேறு மாதிரியாகச் சொல்லி விடலாம். அவர் இல்லாத காரணத்தால்தான் எம்.எல்.ஏ.விடம் போக வேண்டியிருந்ததாக. பார்த்துக் கொள்ளலாம். என்ன இப்போது? இன்று என்பதை விடவா நாளை பெரிது? நாளைக்குள் உலகமே அழிந்தாலும் அழியலாம். தனக்கே விடிந்தாலும் விடியலாம். ஒரு முடிவுக்கு வந்தவனாக நண்பர்களைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"பாத்துக்கறேன்னிட்டன்ல? விடு. நீங்க பாட்டுக்கு வேலையப் பாருங்க. நான் எம்.எல்.ஏ.வப் பாத்துட்டு வந்துடறேன்."

சடாரென்று திரும்பி வேகமாக நடையை எட்டிப் போட்டபோது, தன் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படியாக ஆரவாரமான பின்னணி இசையொன்று ஒலிப்பதாக உணர்ந்தான்.

(தொடரும்)

மகேஷ்பாபுவின் நடிப்பு.

● காமெடியை முதன் முறையாக கையாண்டு கலங்கடித்திருக்கும் த்ரிஷாவின் குறும்பு...

நந்துவின் ஆடியோ ரிலீசை வித்தியாசமான முறையில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் சோலைராஜா, பாடல்களை வைத்துப் பரிசுப் போட்டி ஒன்றையும் அறிவிருக்கவிருக்கிறார். பரிசு என்ன தெரியுமா? சிங்கப்பூர் சுற்றுலா விமான டிக்கெட்!

- **ரேவதி**

நொடிப்பொழுதில் பூத்த முகம்...



எதிர்ப்படுகையில்
என்ன நினைப்பாயென்று
உருண்டு திரண்டு
வேப்பம்பழமாய்
பிதுங்குகிறது முழி

உப்புப் பானையில்
விழுந்த பல்லி
புரள முடியாததைப்
போல
கண்களிலிருந்து
நகர மறுக்கிறது
உன் சித்திர முகம்

நீதானென
தெரியாதவரை
பேசாமலிருந்த இதயம்
தெரிந்த பின்பு
நிறுத்தவேயில்லை
முரசடிப்பதை

செயலிலிருப்பதை
செயலற்றதாக்கவும்
செயல்படாததைச்
செயல்பட வைப்பதிலும்
தேர்ந்துதானிருக்கிறது
உன் காதல்

துணியெடுக்கும் பாவனை
அப்பனுக்குக் கஞ்சி எடுத்துச்
செல்லும் பாதை
தொலைக்காட்சி பார்க்க
வரும் நேரமென
சந்திக்கும் நொடிப்பொழுதை
உற்பத்திக்கவே
காத்திருக்க வேண்டியுள்ளது
நாட்கள் மாதங்கள் வருடங்கள்...

என்றாலும்
நொடிப்பொழுதில் பூப்பதுதான்
வாழ்வின் கடைசிப் பொழுதுவரை
கூட வருவது

வே.இராமசாமி



• அருணாச்சலம் சர்க்கரை ஆலை

கருகும் கரும்புகள்... கதறும் விவசாயிகள்!



• ஆர். ரேநு

"ருசிப்பவர்களுக்குக் கரும்பின் சுவை இனிப்பு; ஆனால், அதனைப் பயிரிட்டவர்களுக்கோ கசப்பு" என்கிற கூக்குரல் திரும்பிய பக்கமெல்லாம் கேட்கிறது திருவண்ணாமலை வட்டாரத்தில்.

"ஊர்ல ஒரு ஏக்கர்ல கரும்பு வைச்சேன். பத்து மாசப் பயிரு. பதினாறு மாசம் ஆகிப் போச்சு. வெட்டு ஆர்டர் எப்ப கெடைக்கும்னு சலிக்காம நானும் அலைஞ்சிட்டே இருக்கேன். வயல்ல கரும்பும் காய்ஞ்சு போச்சு. அத சும்மா போட்டு வெச்சிருந்தாக்கூட செலவு பண்ணின பதினைந்தாயிரம் ரூபாயாவது மிச்சமாகி இருக்கும்!" என்று மாவட்ட எல்லைக்குள் நாம் நுழையும்போதே புலம்பலோடு வரவேற்றார் பேருந்து நடத்துநர் ஒருவர்.

திருவண்ணாமலைச் சுற்று வட்டாரத்தில் மட்டும் சுமார் நான்கு லட்சம் டன் கரும்பு தேங்கி நிற்பதாகச் சொல்லப்படுகிறது. வெட்டும் பருவம் கடந்து, நான்கைந்து மாதங்கள் நகர்ந்து போய்விட்டன.

எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு தனியார் சர்க்கரை ஆலையை நோக்கிச் சுட்டு விரல் நீட்டுகின்றனர் விவசாயிகள்





• சாந்தமூர்த்தி



• கேசவன்

அனைவரும்.

அருணாச்சலம் சர்க்கரை ஆலை, மலப்பம்பாடி கிராமத்தில் அமைந்துள்ளது. திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம், கீழ் பெண்ணாத்தூர் ஆகிய ஒன்றியங்களின் இருநூறு கிராமங்களில் விளையும் கரும்பு உற்பத்திக்கென அமைக்கப்பட்டது இந்தத் தனியார் சர்க்கரை ஆலை. 2001ல் துவங்கப்பட்டு, 2003ல் மூடப்பட்டது. கரும்பு விவசாயிகளுக்கு ஆறு கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கும் இந்தச் சர்க்கரை ஆலை நிர்வாகம், சுமார் இருநூறு கோடி ரூபாய் பிரச்னையில் செயல்பட முடியாமல் சிக்கித் தவிக்கிறது என்று கூறப்படுகிறது.

"நாலு வருசம் ஆச்சு. எனக்கு மட்டும் பாக்கித் தொகையா எழுபத்தைந்தாயிரம் ரூபாய் வரணும். பணம் எப்போ கெடைக்கும்னே தெரியலை. இப்பவும் நாலரை ஏக்கர்ல கரும்புதான் போட்டிருக்கேன். பதினாலு மாசம் ஓடிப் போச்சு. இன்னும் கரும்பு வெட்டல!'' என்கிறார் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தின் சொரகொளத்தூர் விவசாயி சாந்தமூர்த்தி.

பதிவு செய்யப்பட்ட கரும்பு டன் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்திருக்கும் விலை ஆயிரத்து இருபத்தைந்து ரூபாய். பதிவு செய்யப்படாத கரும்பு, டன் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாயிலிருந்து எண்ணூறு ரூபாய் வரைக்கும் போகிறது.

குறிப்பிட்ட சர்க்கரை ஆலைக்கு வெகு அருகில் வசிப்பவர் கேசவன். "ரெண்டு மூணு வருஷமா வெளியிலேர்ந்து வந்து கரும்பு ஏத்திக்கிட்டுப் போனாங்க. அதை நம்பிப் போன வருசமும் என்னோட ரெண்டரை ஏக்கர்ல கரும்புப் போட்டிருக்கேன். இப்ப அதெல்லாம் காய்ஞ்சுக்கிட்டே வருது!'' என்று ஆதங்கப்பட்டார்.

நடுப்பட்டு கிராமத்தின் அய்யாக்கண்ணு. "ஏழு ஏக்கர்ல கரும்பு போட்டிருந்தேன். பதினாறு மாசம் ஆகிப் போச்சு. எங்க மாவட்டத்துல வெட்டு ஆர்டர் கிடைக்கல. திருத்தணிக்கு வெட்டி அனுப்பிச்சேன். ஏழு ஏக்கர்ல முன்னூத்தம்பது டன் கரும்பு கெடைச்சிருக்கணும். அப்படி வெளைஞ்ச மண்ணுல இப்போ நாத்தம் பத்து மூணு டன்தான் கெடைச்சிருக்கு. இப்ப எனக்கு இருநூறு டன் கரும்பு எடை குறைஞ்சு போயிடுச்சு. இதுபோன்ற பெரும் நஷ்டங்களைத் தாங்க முடியாமத்தான், சில விவசாயிங்க தங்களோட கரும்பு வயலைத் தீ வைச்சுக் கொளுத்திட்டு வர்றாங்க!'' என்று நம்மை அதிர்ச்சியடைய வைத்தார்.

நடுப்பட்டு கிராமத்தின் கிழக்குக் கொல்லைப் பகுதி விவசாயி ஜெய்சங்கர், பத்து வருடங்களாக விவசாயம் செய்கிறார். ''அஞ்சு ஏக்கர்ல கரும்பு போட்டிருந்தேன். மூணு வருசமா ஆந்திராலேர்ந்து வந்து வெட்டு ஆர்டர் தந்துட்டுப் போவாங்க. இந்த வருஷம் அவங்க யாருமே வரலை. வர்றவங்களும் டன்னுக்கு ஐந்நூறு ரூபாய்னு விலை பேசறாங்க. ரொம்ப நொந்துபோய் ஒன்னரை ஏக்கர் கரும்பு வயலைத் தீ வச்சுக் கொளுத்திட்டேன். இன்னும் பத்து நாள்ல மீதி மூணரை ஏக்கர் கரும்பையும் கொளுத்தப்

• அய்யாக்கண்ணு



• தங்கராஜ்



போறேன்'' என்றார் விரக்தியுடன்.

“ஆந்திராவின் மூன்று சர்க்கரை ஆலைகளும், நமது அருகாமை மாவட்ட சர்க்கரை ஆலைகளும் இப்பகுதி கரும்பினைப் பெற்றுக்கொண்டதால், கடந்த மூன்றாண்டுகளாக இந்தப் பிரச்னை பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், சமீப காலமாக ஆந்திரா உட்பட அந்தந்த சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு உற்பத்தி அதிகரித்துவிட்டது. அதனால், அருணாச்சலம் சர்க்கரை ஆலைப் பகுதிக்கு உட்பட்ட கரும்பு உற்பத்தி கடும் தேக்க நிலையினை அடைந்துவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இந்தப் பகுதிகளிலிருந்து கரும்பு வெட்டுத் தொழிலாளர்கள் சுமார் இருபதாயிரம் பேர் வெளி மாவட்டங்களுக்கும், ஆந்திராவுக்கும் வேலை தேடிப் போய்விட்டனர்!'' என்றார் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் (சிபிஐ), திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் தங்கராஜ்.

“ரொம்ப நொந்துபோய் ஒன்னரை ஏக்கர் கரும்பு வயலைத் தீ வச்சுக் கொளுத்திட்டேன். இன்னும் பத்து நாள்ல மீதி மூணரை ஏக்கர் கரும்பையும் கொளுத்தப் போறேன்!''



* ஜெய்சங்கர்

“தமிழக அரசு இப்பகுதி கரும்பு விவசாயிகளின் அவலநிலையைக் கண்டுகொள்வதே இல்லை. தற்போதும் மிகவும் காலங்கடந்தே இப்பகுதி கரும்பு வெட்டினை மற்ற நான்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பிரித்து விட்டிருக்கிறது மாவட்ட நிர்வாகம். இனிமேல் வெட்டு ஆர்டர் கிடைத்து வரிசைப்படி அவர்களுக்குக் கரும்பு வெட்டி அனுப்புவதற்குள் கரும்பு எடை மிகமிகக் குறைந்து போகும். இப்பகுதி கரும்பு விவசாயிகள் நலன் கருதி மாநில அரசு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றினை நிறுவிட வேண்டும். மத்திய அரசின் சர்க்கரை வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து - சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து Sugarcane Undertaking (Taking over Management) Act 1978-ன்படி குறிப்பிட்ட தனியார் சர்க்கரை ஆலையினை மத்திய அரசே ஏற்று நடத்த முன்வர வேண்டும்!'' என்றார் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் சட்ட ஆலோசகரும், வழக்கறிஞருமான ஆர்.ரேணு.

நாட்டின் உயிர்மைக்கு ஆதாரமாக விளங்கும் விவசாயிகள் துடிதுடித்துப் போகின்றனர். ஒரு விவசாயி தன்னிறைவு அடைந்தால், அந்த நாடே தன்னிறைவு பெறும் என்பது அரசுக்குத் தெரியாதா?

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



• ஷண்முகர் சன்னிதி



• ராஜகோபுரம்

காஞ்சி ஏகாம்ரேசுவரரின் கதை தெரியும் அல்லவா...? அம்பிகை மணலில் லிங்கம் பிடித்து வைத்து வழிபட முற்பட்டதும், ஈசன் அவளைச் சோதிப்பதற்கென்றே ஆற்று வெள்ளத்தைப் பெருக்கெடுக்கச் செய்ததும், அன்னை தன் தவ வலிமையோடு மணல் லிங்கத்தை அணைத்துக் காத்ததும்... அவளுடைய கை வளைத் தடங்களும் திருமார்புத் தடங்கள் அந்த மணல் லிங்கத்தில் பதிந்து இன்றைக்கும் ஏகாம்ரேசுவரர் மீது காட்சி தருவதும்...

இதே கதைதான் தக்கோலம் ஜலநாத ஈசுவரர் கோயிலிலும். சொல்லப் போனால், காஞ்சியிலிருந்து சற்று சாய்வாக ஒரு கோடு இழுத்தால் அது தக்கோலத்தைத் தொட்டுவிடும். சென்னையிலிருந்து செல்வதானால் திருப்பதி செல்லும் சாலையில் திருவள்ளூர் தாண்டிப் போக வேண்டும். கடம்பத்தூர் செல்லும் பாதை இடப்புறம் பிரியும். கடம்பத்தூர் ரயிலடி குறுக்கிடும்வரை போய், அதையும் தாண்டி பேரம்பாக்கம்... அதையும் கடந்து போனால் தக்கோலம். அரக்கோணத்திலிருந்து சென்னை மார்கமாக வந்தால் 20 கி.மீ. தூரத்தில் தக்கோலத்தை அடையலாம்.

பொன்னியின் செல்வனில் மூழ்கி எழுந்த வாசகர்களுக்கு, தக்கோலம் வரலாற்றுப் பெயராகவே நினைவில் இருக்கும். தக்கோலம் போரில் ராஜாதித்த சோழன் யானை மீதிருந்தபடி வீரமரணம் அடைந்ததும் 'யானை மீது துஞ்சிய

குமிண் சிரிப்பும் குறும்புச் சிரிப்பும்!

தேவர்' என்று பட்டப் பெயர் பெற்றதும்...

தக்கோலப் போர் வரலாற்றுத் திருப்பு முனை; இன்று தக்கோலம் செல்வதோ நம் வாழ்வுக்குத் திருப்புமுனை!

இங்கே உறையும் ஜலநாத ஈசுவரரும் கிரிராஜகன்னிகாம்பாளும் அபூர்வ அழகும் அளவிட முடியாத அருளும் நிரம்பியவர்கள். ஈசுவரன் சன்னிதி திருச்சுற்றில் காட்சிதரும் தக்ஷிணாமூர்த்தியோ அழகிலும் அருளிலும் மட்டுமின்றித் தோற்றத்திலும் அபூர்வமானவர். சாதாரணமாக ஒரு காலை மடித்து ஒரு காலைத் தொங்கவிட்ட படிதானே தக்ஷிணாமூர்த்தி தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார்! தக்கோலத்தில் அவரது இடக்கால் அரை மண்டி நிலையில் இருக்கிறது. இப்படி உட்காரும் அமைப்பை உத்கடியாஸனம் என்கிறார்கள். இடுப்பு ஒசிந்து, தலை இடப்புறம்

வளம் தரும் கோயில் 2

சீதா ரவி



சாய்ந்து தன்னுள் இலயித்த நிலையில் காணப்படுகிறார். விவரிக்க முடியாத அமைதி குடிகொண்ட அந்த முகத்தைச் சுற்றிலும் விரித்த சடைக்கூந்தல் பரந்து கிடக்கிறது. தலைக்கு மேலே கல் ஆலமரம் நவீன ஓவியம் போல் குறியீடு தோற்றத்தில் கிளைத்திருக்கிறது.

திருச்சுற்று தெய்வமான தக்ஷிணாமூர்த்தியைத் தேடித்தான் இன்றைக்குப் பெரிய பக்தர் கூட்டம் தக்கோலம் வருகிறது. குரு பரிகார ஸ்தலங்களுள் மூன்றாவது ஸ்தலம் தக்கோலம் என்கிறார்கள். வேலை கிடைக்கவும் விவாகம் நடக்கவும், நோய் (குறிப்பாக வயிறு சம்பந்தமானவை) தீரவும் இவர் சர்வநிச்சயமாக கை கொடுப்பார் என்கிறார்கள். குருபெயர்ச்சி போன்ற தினங்கள் விசேஷமாக இருக்கும். அவர் முன் போய் நிற்கிறபோது நம் பிரார்த்தனைகளுக்குச் செவி கொடுக்கவே அவர் தலைசாய்த்துக் கவனிப்பதாக நமக்குத் தோன்றுகிறது. 'குறைகளும் நோய்களும் தீர்வது கிடக்கட்டும், ஐயா! உமது முகத்தில் ததும்பும் ஆழ்ந்த அமைதியின்

• தக்ஷிணாமூர்த்தி



• கொடிமரம்

ஒரு சின்னஞ்சிறு துணியைக் கொடுங்கள், போதும்' என்று கேட்கத் தோன்றுகிறது.


'அவ்வளவு சுலபமாக அதைப் பரிமாறிவிட முடியுமா... போய் ஜலநாத ஈசுவரனையும் கிரிராஜகன்னிகாம்பாளையும் கேட்டுப் பார்!' என்பதுபோல் இருக்கிறது- அவர் கனி முகத்துக்குமின் சிரிப்பு.

ஜலநாத ஈசுவரர் தீண்டாத் திருமேனியர். அதாவது இந்த லிங்க உருவத்துக்கு அபிஷேகம் முதலானவை செய்வதில்லை. புனுகு என்கிற வாசனை திரவியத்தைக் கொண்டு சட்டம் (கவசம் போன்ற காப்பு) சார்த்தி விடுகிறார்கள். அபிஷேகம், சந்தனம், புஷ்பமெல்லாம் லிங்கத்தைச் சுற்றி வட்டமிட்டிருக்கும் ஆவுடையாருக்கு மட்டும் தான்.

ஜலநாத ஈசுவரர் திருவானைக்கா ஜம்புகேசுவரரைப் போலவும் வேலூர் ஜலகண்டேசுவரரைப் போலவும் தண்ணென்று ஒரு நீரூற்றில் குடியிருக்கிறார். அதனால்தான் இந்த ஊருக்குத் திருவூறல் என்றும் ஒரு பெயர். 'ஊறல் அமர்ந்த பிரான்' என்று இவரை அழைக்கிறார் சம்பந்தர்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியிருக்கிறார்கள் இவரை. மேற்கு கோபுர வாசல் வழியே நாம் கோயிலுக்குள் நுழையும்போது பிராகாரத்தின் பின் சுவர் தென்படுகிறது. இந்தச் சுவரைக் கடந்து ஏறத்தாழ ஒரு முழுச் சுற்று சுற்றிவிட்டு, வாகன மண்டபம் வழியேதான் சுவாமி சன்னதிக்குப் போக முடியும். ஜலநாத ஈசுவரர் ஆச்சர்யமான வெண்மை நிறத்தில் தோற்றமளிக்கிறார். "தக்ஷிணாயன காலத்தில் மட்டும்தான் இந்த நிறம். உத்தராயணத்தில் செந்நிறமாக மாறிவிடுவார் ஜலநாதர்'' என்று விளக்குகிறார் அர்ச்சகப் பொறுப்பில் உள்ள பாபு சிவாச்சார்யார். வெகு சிரத்தையாக அர்ச்சனை செய்து கொண்டே ஒற்றை நந்தியாவட்டை மலர்களை ஈசனுடைய நாகாபரணத்தின் இடுக்குப் பள்ளங்களில் அடுக்கி அழகு சேர்க்கிறார் பொறுமையாக. தீபாராதனை காட்டி, திருநீறும்

• ஜலநாத ஈசுவரர் • கிரிராஜகன்னிகாம்பாள்





• காய்ந்து கிடக்கும் திருக்குளம்

திருச்சுற்றுச் சிற்பங்களும் மண்டபத் தூண் சிற்பங்களும் கொஞ்சும் அழகோடு இருக்கின்றன என்றால், அவற்றை மிஞ்சும் பேரழகியாக இருக்கிறாள்- கிரிராஜ கன்னிகாம்பாள். பட்டும் பூவும் போர்த்திய திருமேனி. குத்துவிளக்குச் சுடர் போல் பொலியும் முகம். ஜடை சார்த்தியிருக்கிறார்கள், நாம் தரிசனம் செய்யும் போது. வடதிசை நோக்கி தனிப்பிராகாரத்தில் இருக்கிறாள். சின்னஞ் சிறு கருவறை, சின்னஞ் சிறு பிராகாரம், சின்னஞ் சிறு உருவம்தான். ஆனால், ஆழமோ ஆழமான- குறுநகை!

'அதன் அர்த்தம் என்ன...?' என்று நாம் கேட்டால், 'அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட முடியுமா..? போய், தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தியைக் கேள்!' என்று நம்மைத் திருப்பி அனுப்புகிறாள் அந்தக் குறும்புக்காரக் கன்னிகை!

படங்கள் : ஸ்ரீஹரி


(தொடர்புக்கு பாபு சிவாச்சார்யார்: 99947 86919)

கடசுட ரவாகேசரி பிரசாதமும் தருகிறார். பிரார்த்தனை செலுத்த வந்த அன்பர்களின் ஏற்பாடு இந்த நைவேத்யம் என்று அறிகிறோம்.

தக்ஷன் யாகம் செய்த கதை தெரியும் அல்லவா? தம்மை உதாசீனப்படுத்தி விட்டு அவன் யாகம் செய்ததால் கோபமடைந்தார் சிவன். தம்முடைய அம்சமான அகோர வீரபத்திரனை அனுப்பி தக்ஷன் தலையை வாங்கிவிட்டார். பிறகு அதனிடத்தில் ஆட்டுத் தலையைப் பொருத்தினாராம். ஆட்டுத் தலையுடன் இந்தத் தலத்தில் நின்று தக்ஷன் ஓலமிட்டதால் (தக்கன் + ஓலம்) இவ்வூர் தக்கோலம் என்று பெயர்பெற்றதாக விளக்கம் சொன்னார் சிவாச்சார்யார். "பிறகு சிவனே இந்தப் பாலாற்றங்கரையில் நின்று தம்மை வழிபடும்படி தக்ஷனிடம் சொன்னார். விநாயகர், பிரம்மா, விஷ்ணு, துர்கை ஆகியோரை சாட்சியாக அமரச் செய்து தவம் செய்யச் சொன்னார்... அதனால்தான் இங்கே திருச்சுற்றில் இந்த தெய்வங்கள் எல்லோருமே உட்கார்ந்த நிலையில் இருக்கிறார்கள்" என்றார்.

• பக்தர்களுடன் பாபு சிவாச்சார்யார்





'அவள் எனக்கு அத்தை அல்ல... அம்மா!யாரும் எனக்கு பெண் தர முன்வராத போது தைரியமாய்த் தந்தவள்!'

"சார்..! உங்களுக்கு ஃபோன்..." ப்யூன் வந்து சொல்லிவிட்டு நகர்ந்ததும் அடித்துக்கொண்டது எனக்கு. இந்த ஒரு வார காலமாய் எனக்கு வரும் ஃபோன் தகவல்கள் எல்லாம் அதிர்ச்சியானவை தான். இன்றைக்கு யாரோ?

தொலைபேசியை எடுத்து, "வணக்கம், நான் சிவராமன் பேசறேன்..." என்றேன்.

"என்னங்க, நான் மைதிலி பேசறேன். அம்மாவுக்கு ரொம்ப சீரியஸா இருக்காம். இப்பத்தான் வேலைக்காரப் பெண் ஃபோன் பண்ணா. நான் வீட்டுக்குப் போறேன். நீங்க உடனே வர முடியமா..?"

விசும்பல் தெளிவாய்க் கேட்க, எனக்குப் படபடப்பு வந்தது. ரத்தக் கொதிப்பு வேறு. வியர்த்த முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டேன்.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது, மைதிலி. நீ உடனே புறப்பட்டுப் போ. இதோ இன்னும் அரை மணி நேரத்துல நான் அங்கே இருப்பேன், போதுமா..?"

இருக்கைக்குத் திரும்பி விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டேன்.

எங்கேயாவது அவசரமாகப் போக வேண்டும் என்று நினைக்கும்போதுதான் பஸ் வந்து தொலைக்காது.



பெத்த மனசு

ஆங்கரை பைரவி

பாவம், வீட்டில் மைதிலி என்ன செய்கிறாளோ தெரியவில்லை. அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குள் எனக்கு பிபி எகிறி விடும்.

'இங்க பாரு மைதிலி, ஏதோ குளிர்ல நடுங்கிட்டுக் கிடக்காங்க. இதுக்காக என்னமோ ஏதோன்னு நீ ஏன் பதற்றமாகறே...?'

தனியே அழைத்து மைதிலியைச் சமாதானப்படுத்திவிட்டு அத்தையிடம் நகர்வேன். அவர் படுக்கையில் கிடந்தவாறே கை எடுத்துக் கும்பிடுவார். உதடு கோணலாகும். கண்கள் கலங்கும்.

"தம்பி.. இந்த அஞ்சு வருஷமா படுக்கையில கிடக்கறேன். அவன் ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப் போகலாம்ல. நீ எனக்குச் செய்யணும்னு என்ன தலையெழுத்தா? பெத்த தாய்க்குச் செய்யாத எந்தப் புள்ளையும் உருப்பட மாட்டான். நான் செத்தாகூட அவன் எனக்குக் கொள்ளி போடக்கூடாது தம்பி. நீ எனக்கு கொள்ளிப்போடு. அப்பத்தான் என் நெஞ்சு வேகும்."

"ஏம்மா... இப்படிப் புலம்பறே? இப்ப உனக்கு என்ன குறை? மனசைப் போட்டு அலட்டிக்காதம்மா. நல்லா சாப்புடு; தூங்கு. வாரி வழிச்சுப் போட நாங்க இருக்கோம்." மைதிலிக்குக் கோபத்துடன் கூடிய அழுகை வெடிக்கும்.

எனக்குத் தாய் இல்லாத குறையை போக்கியவர் என் அத்தை. அப்பாவை இழந்துவிட்டு அனாதையாய் நின்றபோது தைரியம் சொன்னவர். எனக்குப் பெண் தர பல சொந்தங்கள் முன் வராதபோது, என் அப்பாவின் பள்ளிக்கூட ஸ்நேகிதி என்கிற முறையில் துணிச்சலாய் இந்த அனாதைக்குப் பெண் தந்தவர். மைதிலியைக் கைபிடித்த அன்றே தெளிவாய்ச் சொல்லிவிட்டேன்...

"அத்தே! இந்த வாழ்க்கை நீ எனக்குப் போட்ட பிச்சை. உங்க பையன் கண்டுக்காம போயிட்டானேன்னு கவலைப் படாதீங்க. நான் இருக்கேன்..."

இன்றைக்கும் அந்த வார்த்தையைக் காப்பாற்றி வருகிறேன்.

பேருந்துவர, ஏறினேன். கூட்டம் அவ்வளவாக இல்லை. ஜன்னலோரம் அமர்ந்து கொண்டேன். காலையில் நன்றாக இருந்த அத்தைக்கு, அதற்குள் என்னவாகியிருக்கும்? யோசனையோடு பயணித்தேன்.

வீட்டுக்குள் நுழைய, மைதிலி எதிர்ப்பட்டாள். நிறைய அழுதிருப்பாள் போல... கண்கள் சிவந்திருந்தது.

"என்னங்க, அவங்களால பேசக்கூட முடியல. மூச்சு வாங்குது. எனக்கு என்னமோ நம்பிக்கை இல்லேங்க. அண்ணனுக்கு ஃபோன் போட்டுச் சொல்லவா?"

அவள் சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டே கூடத்துக்கு வந்தேன். டெட்டால் வாசனை நாசியை மோதியது.



"அவன் வரக்கூடாது மாப்ளே. அவன் என்னைப் பார்க்க வரவேண்டாம். எனக்கு வந்து கொள்ளி வைக்க வேண்டாம்"

அத்தை கட்டிலில் சருகாய்க் கிடந்தார். பக்கத்து மர ஸ்டூலில் மாத்திரைகள், மருந்து பாட்டில்கள். நான்கு வருடங்களாக இவற்றைக் கொண்டே காலத்தை ஓட்டிவிட்டார். நடந்து சென்று கட்டிலின் முனையில் அமர்ந்தேன். தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில் தேடல் இருந்தது. பேச முடியவில்லை என்று சைகையில் சொன்னார். கலங்கிற்று எனக்கு. அவர் விசும்பி அழ, வாயைப் பொத்தினேன்.

"அழக்கூடாது அத்தே! ஏன் அழறீங்க..? உங்களுக்கு ஒண்ணும் இல்ல... பயப்படாம இருங்க. மாத்திரையெல்லாம் தவறாம சாப்பிடுங்க; அது போதும்..."

"ஏங்க.. அண்ணனுக்கு ஃபோன் போட்டுச் சொல்லவா?" மைதிலி இடைமறித்தாள்.

திரும்பி அவளைப் பார்த்தேன். பரிதாபமாய் இருந்தாள். அண்ணன் வந்து பார்த்தாலாவது இன்னும் கொஞ்ச நாளைக்கு அம்மா தாக்குப் பிடிக்க மாட்டாரா என்கிற நம்பிக்கை. எனக்கென்னவோ மூர்த்தி வருவான் என்று தோன்றவில்லை. அத்தை பக்கவாதத்தில் விழுந்த அன்றே கவலைப்படவில்லை. இத்தனை வருடம் கடந்துவிட்டது. வீட்டு மாப்பிள்ளையாய்ப் போனவன், தாய் தேவையில்லை என்று நினைத்து இருக்கலாம். மறந்தே போனவனை ஒருவேளை அத்தைக்குப் பார்க்கத் தோன்றி விட்டதோ..? சட்டென்றுதான் எனக்கு இப்படித் தோன்றியது.

'அத்தையிடம் கேட்கலாமா?'

'அவன் வரக்கூடாது மாப்ளே. அவன் என்னைப் பார்க்க வரவேண்டாம். எனக்கு வந்து கொள்ளி வைக்க வேண்டாம். நீதான் எனக்கு மகன், மருமகன் எல்லாம்' என்று வழக்கமான வசனத்தைப் பேசுவாரோ என்கிற யோசனையும் தடுத்தது. இருந்தாலும் துணிந்து கேட்டேன்.

"அத்தே! மூர்த்திக்கு ஃபோன் போட்டு வரச் சொல்லட்டுமா?"

என் கேள்வி எப்படி இருந்ததோ தெரியவில்லை. அவர் உடம்பில் ஒரு பரபரப்பு மேல் எழுந்தது. உதடுகள் தடுமாறின. பலம் கூட்டி வாயைத் திறந்தார்.

"வரச் சொல்லுங்க தம்பி. எனக்குக் கொள்ளி போட்டுட்டு அவன் எங்கே வேணும்னாலும் போகட்டும். வரமிருந்து பெத்த பாவத்துக்கு அதையாவது ஒழுங்கா செய்துட்டுப் போகட்டும்..." தட்டுத் தடுமாறிப் பேசினாலும் பேசும்போது அவர் முகத்தில் மலர்ச்சி இருந்தது.

திரும்பி மைதிலியைப் பார்த்தேன். அவள் முகத்தில் இறுக்கம். நகர்ந்து விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் சமையலறைக்குள் பாத்திரங்கள் சத்தமாய்ப் பேச ஆரம்பித்தன. ●

நீங்கள் கேட்டவை -தராசு



• முதிர்ச்சியற்ற கமெண்ட்!

1. கே.கே.வெங்கடேசன், சென்னை - 37

? இந்தியாவின் செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த், உலகின் நம்பர் ஒன் இடத்தைப் பிடித்திருப்பதைப் பற்றி...?

! தோற்றவர்களின் உருவ பொம்மைகளை எரிக்கச் செலவிடும் நேரத்தை, இவரைப் போன்ற வீரர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கவும் பாராட்டவும் பயன்படுத்தலாம்.

2. வசீகரன், சென்னை - 18

? 'கிரிக்கெட்டில் தோற்றால் உலகமா அழிந்துவிடும்' என டிராவிட் கேட்பதில் உண்மை இருக்கிறதுதானே?

! உண்மை நிறைய இருக்கிறது. தோல்விக்குப் பொறுப்பேற்ற கண்ணியத்தில் பெருந்தன்மை பளிச்சிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, வங்கதேச வீரர் தாமிம் இக்பாலை, தாம் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வரச் சொல்லி, அவரை வாழ்த்தி, இரு கிரிக்கெட் பேட்டுகளை அவருக்கும் விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹீமுக்கும் பரிசளித்ததில் கிரிக்கெட்டின் ஜீவகளை பிரகாசிக்கிறது!

கிரிக்கெட்டை ஐந்தாண்டுகளுக்குத் தடை செய்யணுமா?

3. வீ.முத்தையா, திருநெல்வேலி

? எதை வைத்து 'பந்த்' வெற்றி என்று தீர்மானிக்கப்படுகிறது?

! பந்த் நடத்துபவர்களிடம் உள்ள அதிகார பலம் அல்லது குண்டர் படையின் அடிப்படை

• போகாத ஊர்!



• தீராத அரசியல்!



யில்தான். நிச்சயமாக மக்களுடைய மனநிலையை வைத்து அல்ல!

4. அனுராதா ரமேஷ்,
பாண்டிச்சேரி ❑

? பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் கேள்வித்தாள் திருடப்பட்டதற்கு யார் பொறுப்பு?

! மாணவனின் திறமையைப் பரிட்சித்துப் பார்க்கும் தேர்வு முறையில் தான் அடிப்படைக் கோளாறு! கேள்வித்தாள் 'அவுட்' ஆனாலோ, 'காப்பி' அடித்தாலோ 'பாஸ்' பண்ணிவிட முடியும் என்ற நிலை மாற வேண்டும். மாணவர்களின் ஆற்றலைப் பரிசோதிக்க வேறு எத்தனையோ வழிகள் உள்ளன.



★ 'புனித'மற்ற சிந்தனை!

5. எஸ்.மாலதி, முசிறி

? இந்தியாவில் ஐந்தாண்டுகளுக்கு கிரிக்கெட்டைத் தடை செய்யச் சொல்கிறாரே ராமதாஸ்?

! ஓராண்டில் ஆடப்படுகிற டெஸ்ட் மாட்சுகள், ஒரு நாள் போட்டிகளுக்கு உச்சவரம்பு கோரினாலே போதும். அது அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். ஒரேயடியாகத் தடை விதிக்கக் கோரினால், போகாத ஊருக்கு வழி சொல்வதாகிவிடும்! உயிராபத்தானதும் கொடூரமானதுமான ஜல்லிக்கட்டுக்கே தடை விதிக்க முடிய வில்லையே!

6. ரொசாரியோ ரவிச்சந்திரன்,
கிழக்குத் தாம்பரம்

? சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்பதற்குப் பதிலாக, பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு வேண்டும் என்று ராமதாஸ், திருமாவளவன் போன்றோர் கேட்க வேண்டியதுதானே?

! ஹூம்! அப்படிக் கேட்ட பிறகு அவங்க எப்படி அரசியல் பண்றதாம்!

7. மு.தமிழ்ப் பாண்டியன்,
சென்னை - 49

? 'பெரியார்' திரைப்படம் வெளியாகும் தினத்தன்று அதை நிர்வாணப் போராட்டம் நடத்தப் போவதாக ஹிந்து முன்னணி அறிவித்திருக்கிறதே... பார்ப்பன சமூகத்தினர் பெரியார் மீது இன்னும் வெறுப்பில் உள்ளதைத்தானே இது காட்டுகிறது?

! இந்து முன்னணி என்பது பார்ப்பனர் சமூக அமைப்பு அல்ல. அது அறிவித்துள்ள போராட்டம் அர்த்தமற்றது. படம் திரையிடப்படுமுன்னரே வெறுப்பை உமிழ்வதாக உள்ளது. பெரியாரின் நாத்திகக் கொள்கையையும் அதைப் பரப்ப அவர் கையாண்ட முறைகளையும் வெறுப்பவர்கள்கூட அவரது சமூக சீர்திருத்தக் கொள்கைகளை வரவேற்க முடியும். பெரியாராலேயே ஆத்திகத்தை அழிக்க முடியவில்லை; பெரியாரைப் பற்றிய திரைப்படத்தினாலா அதற்கு ஆபத்து வந்துவிடப் போகிறது?

8. பால.இராஜேந்திரா, அணைக்கரை

? சட்டசபையில், அமைச்சரை நோக்கி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செருப்புடன் ஆவேசமாகப் பாய்ந்ததை, பார்வையாளர் மத்தியில் இருந்த அமெரிக்கர்கள் சிலரும் பார்த்துள்ளனர். இது நமக்கு அவமானம்தானே?

! அமெரிக்கர்கள் பார்த்திராவிட்டாலும் நமக்கு ரொம்ப அவமானம்தான். அதைவிடப் பெரிய அவமானம் அந்த எம்.எல்.ஏ. வுக்கு.

❑ ரூ 100 பரிசு பெறுபவர்:
அனுராதா ரமேஷ்,
80, கிழக்கு வாசல் நகர்,
நைனார் மண்டபம்,
பாண்டிச்சேரி - 4

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
ஜி. சக்திவேல்,
67, தெற்கு வாணியத் தெரு,
சிதம்பரம் - 608 001



★ புதிய உயர்வு!

9. ஜி.சக்திவேல், சிதம்பரம் ★

? புலிகளின் வான் வழித் தாக்குதல் எதைக் காட்டுகிறது?

! பின்வரும் நான்கு விஷயங்களை : 1) போர் நிறுத்தம் என்பது புலிகளின் நோக்கில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள கிடைக்கும் அவகாசம். 2) விமான பாகங்களைத் தருவித்து, அவற்றை இணைத்து, விமானம் தயாரிக்கும் அளவில் அவர்களிடம் தொழில்நுட்பம் உள்ளது. 3) விமானம் வாங்கும் அளவுக்கு அவர்களிடம் பணபலம் உள்ளது. 4) இவற்றை எதிர்பார்த்து எச்சரிக்கையாக இராமல் இலங்கை அரசு ஏமாந்துவிட்டிருக்கிறது.

10. எஸ்.கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம்

? 38க்கும் 50க்கும் வித்தியாசம் தெரியாத விழா என்று முதல்வரின் 'பொன்விழா' பற்றி ஜெ. கூறியிருப்பதைக் குறித்து...?

! அரசியல் விமர்சனத்துக்கும் தனிநபர்த் தாக்குதலுக்கும் வித்தியாசம் தெரியாதவரின் முதிர்ச்சியற்ற கமென்ட்! இதற்குப்போய் பதிலடி கொடுக்க வெற்றிகொண்டான் ரேஞ்சுக்கு முதல்வர் இறங்க வேண்டுமா?

11. ஏ.ஜஹ்பர் காதர், விளாத்திகுளம்

? 'புனிதங்கள் ஒழிக்கப்படுவதுதான் சாதி ஒழிப்புக்கு வழி' என்கிறாரே பிரபஞ்சன் - உங்கள் கருத்து?

! மாறுபடுகிறேன். புனிதம் என்பது அன்பும் சத்தியமும்தான் என்று புரிந்துகொள்கிறபோது, சாதி - மத உணர்வுகள் அழியும். பிரபஞ்சமே ஒன்றாகும்.

12. எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி

? நீதிமன்றத் தீர்ப்புகளையும் நடுவர் மன்ற ஆணைகளையும் மாநில அரசுகள் மதிக்காத போக்கு அதிகரித்து வருகிறதே... முறைதானா?



★ கிரிக்கெட் உணர்வு!

! மாநில அரசுகள் மதிக்காவிட்டாலும் மத்திய அரசு மதித்து, மாநில அரசுகளை வழி நடத்தினால் தேவலாம். ஆனால், அதற்கும் வழியின்றி மத்திய அரசு கூட்டணிச் சிக்கலில் பலவீனப்பட்டுப் போயிருக்கே!

13. மஞ்சுதேவன், மும்பை

? ஒப்பிடுக ஃபில்டர் காபி, இன்ஸ்டன்ட் காபி...?

! முன்னது ம்ம்ம்... காபி! பின்னது ஹூம்! கா....பி! ○

வாசக தராசுகளே, வாக்களியுங்கள்!

இந்த வார தராசு பதில்களுள் டாப் டக்கரானது எது? கேள்வியின் எண்ணை ஓர் அஞ்சலட்டையில் எழுதி 27.4.2007-க்கு முன் கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். முகவரிப் பகுதியில் 'வாசக தராசு 22.4.2007 இதழ்' என்று குறிப்பிட வேண்டும். எந்த பதிலுக்கு அதிக வாக்குகள் விழுகின்றனவோ, அதனைத் தேர்வு செய்த வாசகர்களுள் யாரேனும் ஒருவருக்குக் குலுக்கல் முறையில் பரிசு ரூ 100/-. எடை போட்டுச் சொல்லுங்கள்!

தேவமருந்து

டாக்டர். எல்.மஹாதேவன்



மருந்தாகும்

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 14-ல் கர்ப்பிணிப் பெண்களுக்கு உகந்த உணவுகளை எழுதச் சொல்லியிருந்தோம். சரியான குறிப்பை எழுதி முதல் பரிசைப் பெறுகிறார் **ஆர்.பிரசன்னா, கரூர்.**

குறிப்பு : பார்லி உப்புக் கஞ்சி : மூன்று தம்ளர் தண்ணீரில் ஒரு டம்ளர் பார்லி அரிசியைப் போட்டு நன்கு கொதிக்க வைத்து, தேவைக்கேற்ப உப்பு, எலுமிச்சம் பழச்சாறு இரண்டு ஸ்பூன் கலந்து தினமும் பருகி வந்தால், மசக்கையால் உண்டாகும் வாந்தியும் மயக்கமும் நீங்கும்.

வெந்தயக் கஞ்சி : அரை கப் பச்சரிசியுடன் மூன்று ஸ்பூன் வெந்தயம் சேர்த்துத் தண்ணீரில் கலந்து வேகவைத்து, கஞ்சியாகக் காய்ச்சி, வெல்லம் சேர்த்து உண்டு வந்தால் தாய்ப்பால் சுரக்கும்.

கறிவேப்பிலை, முருங்கைக்கீரை, முளைக்கீரை போன்றவற்றில் சுண்ணாம்புச் சத்து உள்ளது. அதனால் இவற்றைத் தினசரி சாப்பாட்டில் சேர்த்துக்கொள்வது கர்ப்பிணிப் பெண்களுக்கு நல்லது.

இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மகாதேவனின் தேவமருந்து முதல் பாகத்தைப் பரிசாகப் பெறுபவர் : கே.மைதிலி, ஐதராபாத்.

குறிப்பு : எண்ணெயில் பொரித்தவற்றைத் தவிர்த்து கேரட், பீன்ஸ், பச்சைப் பட்டாணி, முட்டைகோஸ், வெள்ளரிக்காய், முளைகட்டிய பச்சைப் பயிறு போன்றவற்றைச் சேர்த்து சாலட் செய்து சாப்பிடலாம்.

வெள்ளைப் பூண்டினை பாலில் வேக வைத்துச் சாப்பிடலாம் அல்லது மிளகு சீரகம் சேர்த்துப் பூண்டில் ரசம் செய்து சாப்பிடலாம். அரிசித் திப்பிலியில் ரசம் வைத்துச் சாப்பிடலாம்.

சோம்பை வெறும் வாணலியில் வறுத்துத் தண்ணீர் விட்டு, தண்ணீர் சுண்டும் வரை கொதிக்க வைத்துக் கஷாயமாக்கிக் குடித்து வர, கர்ப்பிணிப் பெண்களுக்குக் கால் பாதத்தில் ஏற்படும் வீக்கம் அறவே இல்லாமல் இருக்கும்.

கீரை வகைகளை - குறிப்பாக முருங்கைக் கீரையைப் பருப்புடன் வேகவைத்துச் சாப்பிடலாம்.

செங்கலை என்று ஒருவகைக் கீரை. இதன் நுனியில் முள் இருக்கும். முள்ளை நீக்கி, வதக்கித் துவையலாக்கிச் சாப்

பிடலாம். 'செங்கலைச் சாப்பிட குழந்தை வெண்கலம்' என்று ஒரு பழமொழி உண்டு. காலையும் மாலையும் வாக்கிங் செல்வது மிகவும் நல்லது. வயிறு முட்ட முட்டச் சாப்பிடாமல் அடிக்கடி அரை வயிறு நிரம்ப உணவு எடுத்



மல்லிகை!

துக்கொள்வது நலம். படுத்து எழுந்திருக்கும் போதும் உட்கார்ந்து எழுந்திருக்கும் போதும் 'சடக்' என்று வேகமாக எழாமல் கையை ஊன்றி நிதானமாக எழுந்திருக்க வேண்டும்.

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி 15ல் பிள்ளைப்பேறு காலத்தில் தாய்ப் பால் கட்டிக்கொண்டால் அதனை நீக்க எளிய வைத்திய முறைகளை எழுதக் கேட்டிருந்தோம். சிறந்த குறிப்பெழுதி முதல் பரிசாக தன்வந்தரி டாலரினைப் பெறுபவர் மாலதி சுப்ரமணியம், சேலம்.

குறிப்பு : பால் கட்டிக்கொண்ட மார்பகங்களைச் சுற்றி நிறைய குண்டு மல்லிகை மலர்களைத் துணியில் கட்டி, சுமார் முப்பது நிமிடங்கள் இருந்தால் மார்பு இளகி, கட்டிக்கொண்டிருக்கும் பாலும் வெளிவரும். பூக்களில் புழுக்களோ, எறும்புகளோ இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மல்லிகைப்பூ கிடைக்காத காலங்களில் துவரம் பருப்பைச் சிறிது நேரம் ஊற வைத்து நீர் வடித்து நன்றாக அரைத்து, அந்த விழுதை மார்பகங்களின் மீது தடவி, ஒரு துணியால் நன்றாகக் கட்டிக்கொள்ள வேண்டும். வழக்கம்போல் மேலாடைகளை அணியலாம். துவரம் பருப்பு விழுது நன்றாக உலர்ந்ததும் கட்டுகளை அவிழ்த்து நன்கு சுத்தமான தண்ணீரால் கழுவிவிட்டால் நிச்சயமாக நல்ல பலன் இருக்கும்.



இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மகாதேவனின் தேவமருந்து முதல் பாகத்தைப் பரிசாகப் பெறுபவர் : எஸ்.ராஜேந்திரன், சீர்காழி.

குறிப்பு : பசலைக் கீரையைச் சுத்தம் செய்து கைப்பிடி அளவு எடுத்துக் கழுவி அம்மியில் அரைத்து, பசும்பாலில் கலந்து, காலையில் மட்டும் ஐந்து நாட்கள் குடித்தால் தாய்ப்பால் இளகிச் சுரக்கும்.

1) ஆலம் விழுதின் துளிர் மற்றும் விதைகளை அரைத்து உண்ணலாம். 2) பாகற்காயின் இலையை அரைத்து மார்பகங்களில் பற்றுப் போடலாம். 3) தாளிக்கீரையைக் கொதிநீரில் போட்டுப் பிழிந்து சாப்பிடவும் 4) சீரகத்தை வறுத்துப் பொடியாக்கி சாப்பிடலாம். 5) காட்டாமணக்கு இலையை வதக்கி மார்பில் கட்டலாம் 6) முருங்கைக் கீரைப் பொரியல் சாப்பிடலாம் 7) பால் பெருக்கி இலையைத் துவையல் அரைத்துச் சாப்பிடலாம். 8) கரையான் புற்று மண்ணைக் கஞ்சியில் குழைத்து மார்பில் தடவிக் கொள்ளலாம். ●

நம்பர் 1

செஸ் ஆட்டத்தில் முதல் காய் நகர்த்தல் நிகழ்ந்தது இந்திய மண்ணில். ஆனால், அமெரிக்கர்களும் ஐரோப்பிய நாட்டினரும் காலப் போக்கில் செஸ்ஸைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டனர். காஸ்பரோ, கார்போவ் என்கிற விசேஷமான பெயர்களுக்கு மத்தியில் ஒரு தமிழ்ப் பெயர் மட்டும் அடிக்கடி அந்த வட்டாரத்தில் சுற்றிக் கொண்டிருந்தது.

நூற்றைம்பது நாடுகளில் அறுபது கோடி பேர் இந்நேரத்துக்குத் தீவிரமாக செஸ் ஆடிக்கொண்டிருப்பவர்கள். உலக சாம்பியன் என்று ஒருவர்தானே இருக்க முடியும். லினாரஸ் போட்டியை வென்று அப்படியொருவராக ஆகியிருக்கிறார் விஸ்வநாதன் ஆனந்த், தன் முப்பத்தேழாவது வயதில்.

பதினாறு வயதாகும்போது நேஷனல் சாம்பியன் பட்டம் வென்றிருக்கிறார் ஆனந்த். அன்று முதல் யாரையும் சட்டை செய்யாமல் மேலே மேலே போய் உச்சத்தைத் தொட்டிருக்கிறார். ஆனந்த் ஒவ்வொருமுறை சாதனை செய்கிறபோதும் இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகிவிடுகிறது.

ஆட்டத்தில் வெற்றியோ தோல்வியோ... இயந்திரம்போல இருப்பார்; முகத்தில் எந்த பாவத்தையும் வெளிப்படுத்த மாட்டார் ஆனந்த். பதினாறு வயதில் நேஷனல் சாம்பியன் ஆகும்போது, ஆனந்திடம் தோற்றுப்போன சீனியர் பிளேயர் அந்த இடத்திலேயே அழுதிருக்கிறார். ஆனால், ஆனந்த் வெற்றியையும் அந்த வீரரையும் கண்டுகொள்ளவே இல்லை. யாரிடமும் கோபங்கொண்டதாகவும் சண்டை போட்டதாகவும் சம்பவங்கள் கிடையாது. குட் பாய் என்றுதான் ஊரெங்கும் நற்பெயர்.

பறவையைப் போல வருடம் முழுக்க நாடு நாடாகச் சென்று ஆடுகிறார் ஆனந்த். இவர் புண்ணியத்தில் தமிழ்நாட்டுக் குழந்தைகளிடையே செஸ் பிரியம் கிரிக்கெட்டை விடவும் ஜாஸ்தியாக இருக்கிறது. அதே குழந்தைகள் வெளிநாடுகளில் ஆடச் செல்லும்போது 'நாங்கள் இந்தியாவிலிருந்து...' என்று ஆரம்பித்த அடுத்த நிமிடம்... 'ஓ! விஸ்வநாதன் ஊரா' என்று புன்னகை செய்து ஆனந்தைக் கௌரவப்படுத்துகிறார்கள் வெள்ளைக்காரர்கள்.

- சநகன்





கல்கி

22.4.07

இணைப்பு













இது

தமிழ் வருடப் பிறப்பு... சென்னை அசோக் நகர் பாரதியார் காலனியில், ஓர் இல்லத்தில் ஒரே கலகலப்பு...

பட்டுப்புடைவை மற்றும் பாவாடை தாவணியில் துறுதுறு வென்று நடமாடும் இளம் பெண்கள்... அதில் தென்னிந்திய முகங்கள் மட்டுமல்ல, நாகாலாந்து, அஸ்ஸாம், அந்தமான் என்று 'பாரதவிலாஸ்' ஆக எல்லா முகங்களும் தென்படுகின்றன. உற்சாகமாக வருடப் பிறப்பைக் கொண்டாடும் இந்த மங்கைகள் அனைவரும் புகழ்பெற்ற 'அம்மன் லேடீஸ் ஹாஸ்டல்' வாசிகளே...

படிப்புக்காக, வேலைக்காக என்று வெளியூரிலிருந்து சொந்தக் குடும்பத்தைப் பிரிந்து இங்கே வந்து ஒரே குடும்பமாக இணைந்திருப்பவர்கள்.

"பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்கிறோமே என்ற ஏக்கம் கொஞ்சமும் வராமல் நாங்கள், சொந்த வீட்டிலிருப்பது போலவே உணர்கிறோம் என்றால் அதற்கு முழுக் காரணமும் இவர்கள்தான்..."

இவர்கள் சுட்டிக்காட்டுவது செல்வம், சாந்தி செல்வம் தம்பதியரைத் தான்!

"2004-ல்தான் எங்களோட முதல் விடுதியை ஆரம்பிச்சோம். அதற்கு முன்னால சில விடுதிகளை தற்செயலா பார்க்க நேர்ந்தது. அப்புறம் நாங்களாகவே போய் சர்வே மாதிரி சில விடுதிகளைப் பார்த்தோம். டாய்லெட் வசதி, சுத்தம் - இவை அங்கேயெல்லாம் நல்லா இல்லே. நல்ல சுத்தமான சூழ்நிலை... ஆரோக்கியமான சாப்பாடு... வசதியான அறைகள் என்று நாமே பெண்களுக்கான விடுதிகள் ஆரம்பிச்சா என்னன்னு தோன்றியது..." என்று தொடங்கிய சாந்தி செல்வம், "இந்தக் காலத்துப் பெண்கள்தான் எல்லாத் துறைகள்லேயும் முன்னுக்கு வரத்துடிக்கிறாங்களே.. படிப்புக்காகவும் வேலைக்காகவும் வீட்டை மட்டும் இல்ல, ஊரை விட்டும் கூட வெளியே வந்து தங்கற சூழ்நிலை ஏற்படுது. இப்படி வந்து தங்கறப் பெண்கள், தங்கள் பணியை சிறப்பா செய்யவும் அதேநேரம் அவங்களுக்கு வீட்டுச் சூழ்நிலை, உணவு, மிக முக்கியமா பாதுகாப்பு தரவும்தான் நாங்க பெண்கள் விடுதியை ஆரம்பிச்சோம். எந்த விளம்பரமும் இல்லாம, சிறப்பான நிர்வாகம், தரம் வாய்ந்த வசதிகள் எல்லாம் பார்த்து நிறைய பெண்

கள் வரவே, மேலும் மூன்று விடுதிகளை ஆரம்பிச்சோம்..." என்று தமது வளர்ச்சி குறித்து விவரிக்கிறார்.

"'அம்மன்' என்ற பெயர் கொஞ்சம் வித்தியாசமா இருக்கே..?"

அங்காளம்மன் எங்கள் குலதெய்வம். மாங்காடு காமாட்சி அம்மன் வணங்கும் தெய்வம். அதனால்தான் 'அம்மன்' பெயர் வைத்தோம்.

"செல்வம் சார்! 'பாதுகாப்பு...'ன்னு அழுத்தமாச் சொல்றீங்களே அது எப்படீன்னு தெரிஞ்சுக்கலாமா..?"

"கண்டிப்பா... அட்மிஷன்லேர்ந்தே சில கட்டுப்பாடுகளை வச்சிருக்கோம். இங்கே இடம் கேட்டு வர்ற பெண் பெற்றோர் கூடத்தான் வரணும். கம்பெனி அல்லது கல்லூரியின் ஐ.டி. கார்டு அவசியம். இங்கே லோக்கல்ல இருக்கிற உறவினர், நண்பர் முகவரியைப் பெற்றோர் சம்மதத்தோடு கண்டிப்பா தரணும்... பெற்றோர் ஒப்புதல் இல்லாம, அவங்க கூட வராம யாரையும் சேர்க்கிறதில்லே..."

"சேர்ந்த பிறகு, உங்க ரூல்ஸ் எப்படி?"

"ராத்திரியிலே யாரும் வெளியே தங்கக் கூடாது என்கிறதுல கண்டிப்பா இருக்கோம். இரவு பத்து மணிக்குள்ளே விடுதிக்குத் திரும்பி வந்தே ஆகணும். தினமும் (அட்டெண்டென்ஸ்) பதிவேட்டுல வெளியே போகிற, வருகிற நேரத்தைக் குறிக்கணும்.

விடுமுறை நாட்கள்லே உறவினர் வீடுகள்ல தங்கறதா இருந்தா முன் கூட்டியே கடிதம் கொடுத்துடணும். அந்த உறவினரின் முகவரி, சேரும்போது தருகிற விண்ணப்பத்திலேயே குறிப்பிட்டிருக்கணும்.

இங்கே தங்கியிருக்கும் பெண்களுக்கு இன்னொரு கண்டிஷன். எல்லோரும் மொபைல் போன் வைத்திருக்கணும்."

அன்பு இல்லம்!





"எதற்கு?"

"எதற்கா? இதைக் கேளுங்கள். வேலூரில் இருந்து இங்கே வந்து வேலை செய்யும் ஒரு பெண் ஒரு நாள் இரவு பதினொரு மணி வரையில் விடுதிக்குத் திரும்பவில்லை. பத்து மணி வரை பார்த்தோம். அலுவலக நம்பருக்கு போன் செய்தால் அடித்துக்கொண்டே இருக்கு. வேலூரில் அவளுடைய பெற்றோரைக் கூப்பிட்டுச் சொன்னோம். அவர்களும் கவலைப்பட்டுத் தவித்தார்கள். காரை எடுத்துப்போய் அந்தப் பெண்ணின் அலுவலகத்தில் விசாரிக்கலாம் என்று போனோம். அலுவலகத்திலேயே கம்ப்யூட்டர் முன் தன்னை மறந்து வேலையில் ஆழ்ந்திருக்கிறாள் அந்தப் பெண். நேரம் போனதே தெரியவில்லையாம்! செல்போன் இருந்தால் தொடர்பு கொண்டிருப்போமே..."

"இரவு பத்து மணிக்குள் விடுதிக்குத் திரும்ப வேணும் என்றால் கால்சென்டர்களில் வேலை பார்க்கும் பெண்கள் இங்கே எப்படி தங்க முடியும்?"

"இதுநாள்வரை நாங்கள் நான்கு விடுதிகள்தான் நடத்தி வந்தோம். இவற்றில் கால் சென்டரில் வேலை பார்க்கும் பெண்களுக்கு இடம் தருவதில்லை என்று உறுதியாகத்தான் இருந்தோம். ஆனால் கால்சென்டர் பெண்களின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னை கோயம்பேடு அருகே புதுக்கிளை ஒன்றை இந்தத் தமிழ் வருடப் பிறப்பன்று திறந்திருக்கிறோம். இந்த ஒரு கிளைக்கு மட்டும் 24 மணி நேர ஆண் செக்யூரிட்டி."

"இத்தனை பேர் இருக்கும் இடத்தில் மருத்துவ வசதி வேண்டாமா..?"

"இரண்டு லேடி டாக்டர்கள் அருகில் இருக்கிறார்களே... எந்த நேரம் யாருக்கு உடம்பு சரியில்லை என்றாலும் உடனே மருத்துவம் செய்யத் தயாராய் இருப்பவர்கள். சேவை மனப்பான்மையுடன் பணி புரியும் மருத்துவர்கள் இவர்கள். தவிர, பல்லவா ஹாஸ்பிடல் கூடவும் தொடர்பு வைத்திருக்கிறோம். எல்லாமே சம்பந்தப்பட்ட பெற்றோருக்கு உடனே தெரிவிக்கப்படும்.'

"ஹாஸ்டலில் ஏதாவது நோயுடையவர்கள் தங்கினால் அவர்களுக்கு என்ன வசதி செய்து தருவீர்கள்?"

"இதுவரை சர்க்கரை நோயாளி, இருதய நோயாளி என்று எவரும் இருக்கவில்லை. ஆனால் அப்படி யார் வந்து தங்கினாலும் அவர்களுக்கு ஏற்றபடி டயட் நிச்சயமாக செய்துதருவோம். மேலும் இங்கு சேர வரும்போதே விண்ணப்பப் படிவத்தில்

அவர்களது மெடிகல் ஹிஸ்டரியைக் கேட்டு எழுதி வாங்கி விடுவோம். ஜுரம் வரும்போது கஞ்சி, மிளகு ரசம் போன்ற டயட் கொடுப்பதும் உண்டு.

"உடம்புக்கு பரவாயில்லை. மனரீதியான தனிப்பட்ட பிரச்னைகள் வராமலா இருக்கும். இதை எப்படி சமாளிக்கிறீங்க?"

"இப்படிப்பட்ட பிரச்னைகளை, பெற்றோரை விட விடுதியில் கூடப்பழகும் தோழிகளுடன் பகிர்ந்து கொள்ளதான் விரும்புகிறார்கள். என்னிடம் அவர்கள் மனம்விட்டு பேசிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவர்கள் சொல்வதை சரியான கோணத்தில் புரிந்துகொண்டு, தீர்வுக்கு வழி செய்வேன்.

"இப்படி ஒரு விடுதி நடத்துவதற்கான 'பொறி' எங்கிருந்து கிடைத்தது."

"நான் கல்லூரியில் படித்தபோது, என் வகுப்புத் தோழியின் குடும்பத்தினர், காரப்பாக்கத்தில் பாத்திமா இல்லம் என்ற பெயரில் ஒரு அனாதைக் குழந்தைகள் இல்லம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கு சென்று சில நாட்கள் தங்கியிருந்தேன். அந்தக் குழந்தைகளுக்கு முகம் கோணாமல் சேவை செய்வதைப் பார்த்து நெகிழ்ந்து போய்விட்டேன். அதே நேரம் அவ்வளவு சகிப்புத்தன்மை என்னிடம் இருக்குமா என்ற சந்தேகமும் இருந்தது. சரி, சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ளவும், ஒரு சர்வீஸாக இருக்கவும் தீர்மானித்து அம்மன் லேடீஸ் ஹாஸ்டல் ஆரம்பித்தேன்."

"சர்வீஸ் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்...?"

"தங்கும் பெண்களுக்கு சுத்தமான இடம், நல்ல உணவு... இது ஒரு பக்கம். மனிதநேயம் இன்னொரு பக்கம்... விபத்தில் ஒரு சிறுநீரகத்தை இழந்த பெண் இங்கே இருந்தார். 'அவர் பாரம் தூக்கக் கூடாது; மாடி ஏறக்கூடாது' என்று மருத்துவர்கள் சொல்லியிருந்தபடியால், தனியாக உதவிக்கு ஆள் வைத்தோம். அதேபோல் காலில் அடிபட்டு 'ப்ளேட்' வைத்த பெண்ணுக்கும் தனிப்பட்ட உதவியாள் வைத்து கவனித்துக் கொண்டோம்."

"இருப்பிடம், செக்யூரிட்டீ எல்லாம் ஓ.கே. உணவு? அது முதல் விஷயமாயிற்றே..?"

"காலை உணவு, கையில் தரும் மதிய உணவு, இரவு டின்னர் சப்பாத்தி நால் வகைகள் எல்லாம் உண்டு. இவற்றையெல்லாம் அருமையாய்ச் சமைத்து அன்போடு பரிமாறி உபசரிக்க, காந்திமதி அம்மா போன்ற பெண்மணிகள்தான் எங்களுக்கு வரப்பிரசாதம்." ●

சொல்றாங்க!



கோவில்பட்டியில் பிரிண்டிங் பிரஸ் வைத்திருக்கும் உதயகுமார் தம் மகள் ஸ்வர்ணரேகாவை இந்த ஹாஸ்டலில் சேர்த்தது குறித்து...

"முதல்ல என் பெண்ணுக்கு ட்ரெய்னிங் ஒரு ஆறு மாசம் போல சென்னையில் இருந்தது. அப்பவே வந்து சென்னையில் இருக்குற எல்லா விடுதிகளுக்கும் போய்ப் பார்த்தேன். அம்மன் லேடீஸ் ஹாஸ்டல் நிர்வகிக்கிற முறை எனக்கு ரொம்பப் பிடிச்சது. சென்னையிலேயே அவளுக்கு வேலை கிடைக்கவும், இங்கேயே சேர்த்துட்டேன்..."

விருது



• நீதியரசரிடம் விருது பெறும் சாந்தி

வாழ்த்துகள்!

சிறப்பாகச் செயல்படும் பெண்கள் விடுதிக்கான மகாத்மா காந்தி விருது பெற்ற திருமதி சாந்தி செல்வம் மஹா ஃபைன் ஆர்ட்ஸ் சமூக சேவை அமைப்பின் சார்பில், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி நீதியரசர் மாண்புமிகு ஜே.கனகராஜ் அவர்களின் பொற்கரங்களால் சாதனைப் பெண்ணுக்காக 'அன்னை தெரசா விருது' பெற்றிருக்கிறார்.


விருதுகள் பற்றி சாந்தி :

"விருது வாங்கிய பொழுது என் மனத்தில் ஆயிரம் ஆயிரம் விட்டில் பூச்சிகள் ரீங்காரமிட்டன. ஒரு பாதி மகிழ்ச்சிக் களியாட்டம், மறு பாதி இந்த விருதுக்கு நாம் தகுதியானவர்தானா என்ற எண்ணம்.

என்ன சாதனை செய்துவிட்டோம், இவ்வளவு பெரிய விருது பெறுவதற்கு... என் குழந்தைகளோடு என்னை நாடி வந்த அனைத்துப் பெண்களின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் சற்று கவனம் செலுத்தினேன். இது விருதை எதிர்பார்த்து செய்யப்பட்டது அல்ல!

இப்போது சாதனைப் பெண்ணுக்காக 'அன்னை தெரசா விருது' வழங்கி எனக்கு மாபெரும் பொறுப்பைக் கொடுத்து விட்டார்கள். அந்த நிமிடமே முடிவெடுத்துவிட்டேன். இந்த விருதைப் பெறுவதற்கு இது போதாது. இன்னும் நிறைய! நிறைய... செய்யணும்! பெண் சமுதாயத்துக்காக முழு முயற்சியுடன் நாம் பாடுபட வேண்டும்... அதற்காக உடனே முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்தேன்.

எதிர்காலத்தில் வயதானவர்களுக்காக ஒரு முதியோர் காப்பகம் நடத்தும் எண்ணமும் உள்ளது."



காணாமல் போனவை வரிசையில்
ஒற்றுமையும் மனிதநேயமும்
சேர்க்கப்படும் முன்...
சாலையோரக் கடைகளில்
மனித இரத்தம்
விலைக்குக் கிடைக்கும் முன்...
அழிந்து கொண்டிருக்கும்
அன்பை அறுநடை செய்யப் புறப்படுவோம்!

அன்பே ஆயுதம்!

பாசமும் நேசமும்
பங்குபோட்டு
விற்கப்படும் முன்...
புரிதலும் பொறுமையும்
பெற்றோராய் வஞ்சிக்கப்படும்
முன்...
புன்னகைப் பூக்களை புதுசாக
நடவு செய்வோம்!
இனி நமக்குத் தேவை
கட்சிகள் அல்ல... கருணை!
சான்றிதழ்கள் அல்ல...
சந்தோஷம்!
அறிக்கைகள் அல்ல... ஆதரவு!

போர் செய்ய வேண்டாம்...
ஊர் செய்வோம்!
துப்பாக்கி தூக்க வேண்டாம்...
தப்பாட்டம் ஆடாமலிருந்தால்
போதும்!

– சிந்துஜா
(அம்மன் விடுதி மாணவி)



வேற்றூரில் வேலை கிடைத்து விடுதியில் தங்கப் போகிறீர்களா? நீங்கள் செய்ய வேண்டியவை...

❖ அறிமுகம் ஆகாத நபர்களுடன் எப்படி சேர்ந்திருக்கப் போகிறோமோ என்ற கவலையை முதலில் விடுங்கள். எல்லோருடைய மனசையும் வெற்றி கொள்வோம் என்ற தன்னம்பிக்கையை முதலில் கொள்ளுங்கள்.

❖ மற்றவர் உங்களிடம் பேசுவதைக் கவனமாகக் கேட்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

❖ உங்களுக்குப் பிடிக்காத விஷயம் ஏதாவது இருந்தால் உடனே 'பட்'டென்று சொல்லிவிட வேண்டாம். முதலில் நல்ல பெயர் வாங்கப் பார்க்கவும்.

❖ சமையலறைப் பணியாளர், உதவியாளர்களை அதிகாரம் செய்யாமல் அன்போடு பழகவும்.

❖ ஒருவர் உங்களிடம் சொன்ன ரகசியத்தை மற்றவரிடம் சொல்லவே வேண்டாம்.

❖ தனி அறை என்றாலும், பகிர்ந்து கொள்ளும் அறை என்றாலும் உங்கள் உடைகள், பொருட்களை கண்டபடி கலைக்காமல் அடுக்கி அழகாக வைக்கவும்.

❖ அவசரம் என்று இன்னொரு பெண்ணின் (நெருங்கிய தோழியாக இருந்தாலும்கூட) டூத்பேஸ்ட், வாஷிங்சோப், வாசனை சோப், பவுடர் என்று ஓசியடிக்காதீர்கள்.



விடுதிக்குப் போகப்



❖ 'அய்யய்யோ! கத்திரிக்காயா... பிடிக்கவே பிடிக்காது...' போன்ற கமெண்ட்டுகளை டைனிங் டேபிளில் அடிக்க வேண்டாம்.

❖ வசதியாக ஏ.ஸி. ரூம் எடுத்துக் கொண்டால், சாதாரண அறைக்காரர்களை ஒரு மாதிரிப் பார்க்க வேண்டாம்!

தெரிஞ்சுக்கோங்க!

போறப் பெண்ணே...

❖ ஒருவருக்கொருவர் ஜாலியாக பட்டப் பெயர்கள் வைத்து விளையாட்டாகக் கிண்டலடிப்பதில் தவறில்லை. ஆனால் அவர்கள் ஊனத்தையோ... குற்றத்தையோ வைத்து அந்தப் பட்டப் பெயர் வேண்டாமே.



❖ உள்ளூரில் இருக்கும் உறவினர் வீட்டுக்கு விடுமுறை நாளில் தோழிகளை அழைத்துச் செல்லும்போது உறவினரிடம் மறக்காமல் எத்தனை பேர் வருகிறார்கள் என்று முன்கூட்டியே தெரிவித்துவிடவும்.





❖ ஒழுக்கம், பொறுப்புணர்ச்சி, விட்டுக்கொடுக்கும் மனோபாவம் ஆகியவற்றை விடுதி வாழ்க்கையில் நீங்கள் கற்றுக்கொண்டால் அந்தப் பக்குவம் உங்களுக்கு எப்போதும் வெற்றியையே கொடுக்கும்.

வேறு மாநிலங்களிலிருந்து வந்து தன் குழந்தைகளை நம்பிக்கையோடு இங்கு சேர்த்திருக்கும் சில பெற்றோர்களின் வார்த்தைகள்...

ஒரிஸ்ஸாவிலிருந்து இங்கே வந்து கணினி நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார் பிராப்தி பட்நாயக். இவரது அம்மா... ப்ரஜவத்னி பட்நாயக்... (ஒரிசாவில் பள்ளி தலைமை ஆசிரியையாகப் பணிபுரிபவர்) "என் பொண்ணு சொந்த வீட்டுச் சூழ்நிலை மாதிரியே ஃபீல் பண்றா. மொழி தெரியாத வேற மாநிலத்துக்குப் போறாளேன்னு எனக்கு முதல்ல கவலையா இருந்தது. ஆனா இப்போ அவ ஹோம் ஸிக்கா இல்லாம ஹாப்பியா இருக்கா."

குஜராத்திலிருக்கும் சாந்தே பாமர் இங்கு தங்கியிருக்கும் நேகாவின் தந்தை. அங்கே ஒரு தனியார் நிறுவனத்தில் இயக்குநராக இருக்கும் இவர், தன் மகள் தென்னிந்திய உணவு வகைகளுக்கு அட்ஜஸ்ட் செய்து கொள்ள கொஞ்சம் சிரமப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். பெண் வேலை செய்யும் அலுவலகம்



இது

கல்லூரி விரிவுரையாளரான ஆர்த்தி விடுதிச் சூழ்நிலை, இளைய தலைமுறைக்கு மிக மிக ஆரோக்கியமானது என்றவர் தொடர்ந்து

"சில வீடுகளில் 'கண்டிப்பாக இருக்கிறோம்' என்று பிள்ளைகளை வாட்டுகிற பெற்றோர் உண்டு. விடுதி மாதிரி அட்மாஸ்பியரில் நட்பான, சுதந்திரமான சூழலும், உண்டு. சுயக் கட்டுப்பாட்டை உறுதியாக்கும் எல்லைகளும் உண்டு. கவலையின்றி எங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த முடிகிறது."




கலகலப்பான, ஒற்றுமையான

அருகே இருப்பதால் இங்கே சேர்ந்ததாகச் சொல்கிறார்.

எல்லாரையும் 'கலாய்'த்துக் கொண்டு கலகலப்பாக இருக்கும் குமாரி நேகா சாந்தே பாமரிடம், 'உங்கள் ஊரில் (குஜராத்) பெண்கள் விடுதிகள் எப்படி மேடம் இருக்கிறது?' என்று கேட்டபோது...



* செங்கோட்டையன்



* சாந்தே பாமர் குடும்பத்துடன்

நம்ம ஊரு...

''ஹூம்... ஒண்ணும் சொல்றதுக் கில்லே.. என்று மூன்றே வார்த்தைகளில் முடித்துக் கொண்டார்.

வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் படிக்கும் சுனந்தாவின் அப்பா சேலம் செங்கோட்டையன்... ஸ்டார்ச் இண்டஸ்டிரி நடத்துபவர்.

''என் பெண்ணுக்குக் கல்லூரி விடுதியில் இடம் கிடைக்கவில்லை. அதனால், நல்ல விடுதியைத் தேடி அலைந்தோம். உறவினர் மூலம் கேள்விப்பட்டு, 'அம்மன் விடுதிக்கு' நேரடியாக வந்து இவர்களது கவனிப்பு,

அன்பு, உணவு மற்றும் இதர வசதிகளைப் பார்த்து திருப்தியடைந்து சுனந்தாவை இங்கே சேர்த்தோம்.

இடத்தில் சிரிப்புக்குப் பஞ்சம் ஏது..? அதுவும் இந்த மொழிக் குழப்பம். இருக்கிறதே... அப்பப்பா! வட மாநில பெண் ஒருமுறை இங்கே வந்த புதிதில் சாம்பாரை... 'சாம்ப்... சாம்ப்..'' என்று கேட்க, ஹிந்தி தெரிந்த சமையலறைப் பொறுப்பாளர், பாம்புதான் வந்துவிட்டதோ என்று பதற... அப்புறம் சிரிப்பலைதான்.

அழகான அந்தமானில் இருந்து வந்திருக்கும் பெண் அர்ச்சனா.

அண்ணா பல்கலைக்கழகத்தில் Technical writing படிப்பை தற்போது முடித்துள்ளார். இவரிடம் முதல் நாள் அனுபவங்களைக் கேட்டபோது... (ராகிங் மாதிரி ஏதாவது...?) ''ஒருவருக்கொருவர் உடனே அறிமுகம் செய்து கொண்டோம். ஹாஸ்டலைச் சுற்றிக் காண்பித்தார்கள். மிகவும் நட்புடன் அனைவரும் என்னை எதிர்கொண்டதால், கடல் கடந்து வந்த எனக்கு அந்த முதல் நாள் அனுபவமே என் பயத்தைப் போக்கிவிட்டது..''

* அர்ச்சனா




"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பா?" - இது இரண்டு தலைமுறைகளுக்கு முந்தைய விவாதம்.

"பெண்களும் படிக்கட்டும். ஆனால், பெண்கள் வேலைக்குப் போகலாமா?" - இது சென்ற தலைமுறை.

இன்றோ, அதையெல்லாம் கடந்து வந்துவிட்டோம். படிப்பிலும், வேலையிலும் சிகரத்தை நோக்கி மகளிர் செல்லும் காலம் இது. ஆயிரக்கணக்கான வாய்ப்புகள் காத்திருக்கும் நேரம். படிப்பு முடியுமுன்னதாகவே வேலை கிடைத்துவிடுகிறது. அம்மா, அப்பாவின் அரவணைப்பிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு இன்னோர் ஊர், இன்னோரு மாநிலம், ஏன் வேற்று நாடுகளுக்கும் கூடச் சென்று வெற்றிக்கொடி நாட்டுகிறார்கள் இன்றைய சக்திகள்! பெண்களின் துணிச்சலை ஒரு புறம் பாராட்டும்போது, பெற்றோரின் கவலைகளைப் புறக்கணிக்க முடியாதுதானே? (தம்) வீடு விட்டுச் செல்லும் பெண்களுக்கு விடுதிகள் வீடாக அமையுமா, அன்பு இல்லமாகத் திகழுமா?

விடுதி வீடாகுமா?

கலந்துரையாடல்



• ஜி.சந்திரமௌலி

இதோ ஓர் அலசல் :

பங்கு பெறுவோர் :

ஜி.சந்திரமௌலி, *சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸில் மென்பொருள் வல்லுநர்.*

சித்ராவெங்கட்ராமன், *எல்.ஐ.சி.யில் கம்ப்யூட்டர் பிரிவில் பணியாற்றுபவர்.*

லாவண்யா கிருஷ்ணன், *தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்.*

சித்ரா : "எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே இளைப்பில்லை காண்" என்று பாரதியார் சொன்னதை இன்று நிரூபித்து வருகிறோம். என் மகள் ஐஸ்வர்யா அடுத்த வருடம் அவளது பொறியியல் படிப்பை முடித்து விடுவார்.

சந்திரமௌலி : இப்பவே காம்பஸ் இன்டர்வியூ எல்லாம்



* சித்ராவெங்கட்ராமன்

நடக்குமே.

சித்ரா : ஆமாம்! நடக்கிறது. பெங்களூர், மும்பை இங்கெல்லாம் வேலை கிடைக்க வாய்ப்புகள் அதிகம்.

லாவண்யா : அப்படியென்றால் உங்கள் மகளை வெளியூருக்கு அனுப்புவது என்று தீர்மானித்துவிட்டீர்களா?

சித்ரா : நல்லவேலை, முன்னுக்கு வர வாய்ப்புகள் அதிகம் என்றால் நிச்சயமாகத் தயார்! ஆமாம், நீயும் உன் பெற்றோருடன் செல்லமாக இருக்கிறவள் தானே. இப்போதைக்கு படிப்பை முடித்து சென்னையிலேயே வேலை கிடைச்சிருக்கு. நாளைக்குப் பதவி உயர்வுடன் வேறு ஊருக்கு டிரான்ஸ்ஃபர் என்றால் போக மாட்டாயா?

லாவண்யா : ஒய் நாட்?

சித்ரா : அப்ப நீயும் பாதுகாப்பாத் தங்கறதுக்கு இடம் பாத்துக்கணும்தானே?

லாவண்யா : கண்டிப்பா. இன்னும் ஓரிரு தோழிகளுடன் சேர்ந்து ஒரு ஃப்ளாட் வாடகைக்கு எடுத்துத் தங்குவது தான் பெட்டர். நிச்சயமா உறவினர் வீடுகளில் ‘பேயிங் கெஸ்ட்டா’ போக மாட்டேன்.

சித்ரா : என் பெண்ணும் அப்படித் தான் சொல்கிறாள். ஆனால் ஹாஸ்டல் கான்செப்டும் ஓகே தானே?

பகிர்வு!

லாவண்யா : இருக்கலாம். ஆனால், சில சந்தேகங்கள். பிரைவஸி இருக்குமா? ஃப்ரீடம் இருக்குமா? கெடுபிடு அதிகம். மூன்று நான்கு ஃப்ரெண்ட்ஸ் ஜாலியா இருப்பது போல வருமா? இரவு அதிக நேரம் வேலை செய்ய வேண்டி வந்தால்... விடுதிகளில் லேட்டாக வருவதற்கு அனுமதி உண்டா?

சந்திரமௌலி : உண்மைதான். எங்கள் அலுவலகத்தில் விடுதிகளில் தங்கி வேலை செய்யும் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் நேரத்தோடு விடுதிக்குத் திரும்பும் எண்ணத்தோடேயே இருப்பார்கள். அந்த மாதிரி அவசரப்படுபவர்கள் வேலையையும் சேர்த்து நாங்கள் தான் செய்ய வேண்டி வரும். *(சிரிக்கிறார்).*

சித்ரா : என்ன இருந்தாலும் ஹாஸ்டல் லைஃப் பாதுகாப்பானது. செக்யூரிட்டி எல்லாம் இருக்கும். நிறைய பேர் சேர்ந்து தங்கும்போது பெட்டர்தான். நீங்கள் ஓர் உயர் அதிகாரி என்ற முறையில் கேட்கிறேன். இந்தப் பெண்களின் குணநலன்களிலும் எண்ண அணுகுமுறைகளிலும்



* லாவண்யா கிருஷ்ணன்



* கலந்துரையாடலின் போது...

ஹாஸ்டல் வாழ்க்கையின் influence தெரிகிறது என்கிறீர்களா?

சந்திரமௌலி : நிச்சயமா! நிறைய பெண்கள் வீட்டில் ஒரே பெண்ணாக, செல்லமாய் வளர்க்கப்பட்டிருப்பார்கள். வேலையில் சேரும்போது அவர்களிடம் காணப்பட்ட சுயநலம், அழுமூஞ்சித்தனம், கோபம் இதெல்லாம் ஹாஸ்டலில் தங்கிய சில மாதங்களில் மறைந்து ஒரு சகஜத் தன்மை, வாழ்க்கையை எளிதாக்கிக் கொள்ளும் போக்கு, சகிப்புத்தன்மை எல்லாம் வளர்ந்திருப்பது தெரிகிறது.

லாவண்யா : இருந்தாலும் எனக்கு என்னன்னா... தனி ஃப்ளாட் எடுத்துத் தங்கும்போது தோழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். ஆனால் விடுதியில் என்றால் நமக்கு யார் ரூம்மேட்டாக அமைவார்கள் என்று தெரியாதே!

சந்திரமௌலி : ஒரு அம்மாவா நீங்க என்ன நினைக்கறீங்க? உங்க எதிர்பார்ப்பு என்ன?

சித்ரா : லேடீஸ் ஹாஸ்டலில் தங்க வேண்டுமென்றால் நன்றாக விசாரித்து, நாமே நேரில் சென்று, சுத்தம் சுகாதாரம் உணவு எல்லாம் சரிப்பட்டு வருமா என்று பார்க்க வேண்டும். மிக முக்கியமாக, பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்க்கணும். அப்புறம் விடுதியின் location, அறை வசதி, நிர்வாகம், கொடுக்கிற பணத்துக்குத் தகுதியான இடம்தானா... போக்குவரத்து வசதி இருக்கா இதெல்லாம் பார்க்கணும்.

சந்திரமௌலி : நீங்க சொல்றது ரொம்ப சரி... எங்கள் ஆஃபீஸ்லேயும் சில பெண்கள் போக்குவரத்து வசதி இருக்கிறதால குறிப்பிட்ட ஹாஸ்டல்கள்ல தங்கறதாச் சொல்லியிருக்காங்க. வேலையில சேர்ந்த புதுசுல சில பேருக்கு, இடம் கிடைக்கிற வரை நாங்களே எங்க கம்பெனி மூலமாக டிரான்ஸ் போர்ட் ஏற்பாடு செய்வோம்.

லாவண்யா : படிக்கிற சூழ்நிலை வேற... வேலை பார்க்கிற சூழ்நிலை வேற... கொஞ்சம் வசதியான ஹாஸ்டல் அறைக்குப் பணம் அதிகமானாலும் அதைக் கொடுக்க, வேலை பார்க்கும்போதுதான் afford பண்ண முடியும்னு நினைக்கிறேன்.

சித்ரா : வீட்டுச் சூழ்நிலையைக் கொடுக்க ஒரு சில தகுதியான லேடீஸ் ஹாஸ்டல்களால முடியும். தவிர எல்லோரோடயும் அட்ஜஸ்ட் பண்ணி, விட்டுக் கொடுக்கற மனோபாவத்தையும் விடுதி வாழ்க்கை தரும்னு நம்பறேன்.

சந்திரமௌலி : பல மாநிலத்தவர், பல மொழி பேசறவங்க என்று பழகற அருமையான வாய்ப்பு ஹாஸ்டல்கள்ல கிடைக்கும் இல்லையா... எல்லாமே நல்ல அட்ஜஸ்ட்மென்ட்தானே...?

லாவண்யா : கல்யாணம் ஆகி புகுந்த வீட்டுக்குப் போகும்போது அட்ஜஸ்ட் பண்ற மாதிரி... *(சிரிக்கிறார்)* எது எப்படி இருந்தாலும், நல்ல சூழ்நிலையிலே இருப்பிடம் அமைஞ்சா சந்தோஷமும் மன நிம்மதியும் கிடைக்கும். வேலையில சிறப்பா கவனம் செலுத்த முடியும். அதானே எங்களுக்கும் வேணும்! ●



நுங்கு, இளநீர், தர்பூஸ், வெள்ளரிப் பிஞ்சு, மோர், பழச் சாறு வகைகள். இவையெல்லாம் வீட்டில் தான் கிடைக்கும் என்கிறீர்களா? அம்மன் லேடீஸ் ஹாஸ்டலிலும், காலை உணவுடன் மற்றும் இரவு உணவுடன் தருகிறார்கள்.

கோயம்பேட்டில் உள்ள கிரண் பேடி விடுதியிலிருந்து சிட்டிக்குள் வர வாகன வசதியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பலே பலே...



அம்மன் விடுதியில் பாராட்டும்படி பல விஷயங்கள் நெகிழ வைக்கின்றன. அவை...

ஒவ்வொரு அமாவாசையன்றும் எல்லாப் பெண்களையும் உட்கார வைத்து திருஷ்டி சுற்றிப் போடுகிறார்கள் இங்கே.

வருஷம் ஒருமுறை சுதர்ஸன, நவக்ரஹ ஹோமங்கள் நடைபெறுகின்றன.

விடுதியில் தங்கியிருக்கும் பெண்கள் தங்களால் இயன்ற உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு செய்து வருகின்றனர்.



இரவு செக்யூரிடி மட்டும் ஆண் நபர் மற்றபடி பகல் செக்யூரிடி, வார்டன், சமையல் எல்லாம் பெண்களே.

விடுதியில் இருக்கும் பெண்கள் எல்லோரும் வேலையிலிருந்து திரும்பியாயிற்றா என்று செக் பண்ணிப் பார்த்து விட்டுத்தான் தூங்கப்போவார்கள் நிர்வாகிகள்.

பெயர்



அடுத்த பெருமை யாருக்கு?

எங்கள் விடுதிகளின் ஒவ்வொரு கிளைக்கும் சாதனைப் பெண்மணிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு வருகிறோம். அந்த வரிசையில் கோயம்பேடு புது விடுதி கிரண்பேடி ஹவுஸ். மற்ற விடுதிகளுக்கு ஜெயலலிதா, மதர் தெரஸா, இந்திராகாந்தி, கல்பனா சாவ்லா என்று வைப்பது விடுதியில் தங்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் சாதிக்க வேண்டும் என்ற உணர்வு வரவேண்டுமென்பதற்காகவே. அடுத்து திறக்கவிருக்கும் விடுதிக்குப் பெயர்: எம்.எஸ். சுப்புலக்ஷ்மி ஹவுஸ்.

கல்கி

குடும்பத்துடன் படிக்க...

22.4.2007
இதழுடன் இணைப்பு 16 பக்கங்கள்

+16

பாரத விலாஸ்



விடுதியே வீடு!

ஹேப்பி ஹாஸ்டல் லைஃப்

"ஜாதி, மத பேதமில்லாமல் எல்லாரும் எல்லாப் பண்டிகைகளையும் ஜாலியாக் கொண்டாடுவோம்"




"ஒவ்வொருவரின் பிறந்தநாளன்றும் பாயசம் வைத்து,
வாழ்த்துச் சொல்லி, மறக்க முடியாத நாளாகக் கொண்டாடுவோம்"

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 22.4.2007

AMMAN LADIES HOSTEL

(a bond of trust & love)

AMMAN LADIES HOSTEL


(a bond of trust & love)

20, Bharathiar Colony, First Avenue, Ashok Nagar, Chennai - 83. (Near Ashok Pillar)

Tel: 23718122, 23718123, 32912440

Cell : 93827 10234





- JAYA HOUSE: # 20, Bharathiar Colony
- INDIRA HOUSE: # 1, Bharathiar Colony,
- THERASA HOUSE: # 10, Second Avenue
- KALPANA HOUSE: # M26, 11th Avenue,

Ashok Nagar, Chennai - 83.

} Near Ashok Pillar

- KIRANBEDI HOUSE: # 7/2, Sethu St., Nehru Nagar Main Road, Saligramam, Ch-93.

} Near Koyambedu Bus Terminus



அக்ஷயத் திருதியை
ஏப்ரல் 19 அன்று
புதிய பொன் நகைகளை அணிந்து
வெற்றிகளை வரவேற்போம்!
கண்கவரும்
தங்க நகைகளை
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
தேர்ந்தெடுங்கள் !
அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளும்
கடை உண்டு
பிரதி செவ்வாய்க்கிழமை விடுமுறை
ANS
ANS JEWELRY
ANS ஜுவல்லரி
ஸ்வர்ணபுரி
284 ஓமலூர் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி, சேலம் 636004 போன்: (0427) 2440703, 2440704
E-mail: info@ansjewelry.com www.ansjewelry.com

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

நாதெள்ளாவில் நகை வாங்கினால் ஊர் ஊரா பறக்கலாம்!



ரூ.69,999/–க்கு நகைகள் வாங்கினால் சிங்கப்பூர் சென்று வர விமான டிக்கெட் இலவசம்.*

ரூ.9,999/–க்கு நகைகள் வாங்கினால் இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களுக்கு சென்று வர விமான டிக்கெட் இலவசம்.*

இச்சலுகை எமது எல்லா கிளைகளிலும் உண்டு.

இச்சலுகை தங்கம், வெள்ளி நாணயங்கள் மற்றும் புல்லியன்களுக்கு கிடையாது.

விமான நிலைய வரிகள் தனி.



GCC

தமிழ் புத்தாண்டு முதல்

வேளச்சேரியிலும்

27 வேளச்சேரி மெயின் ரோடு. போன்: 22592500

0% 3EMI for ICICI credit cards

NSC

நாதெள்ள

நாதெள்ள சம்பத்து செட்டி

1940 முதல்

தி.நகர் 24360060 ~ புரசை 26431555 ~ அண்ணா நகர் 26267600